Vol.8, Issue 11 | Annual Subscription ₹ 480
Rotary News, April 2026, Chennai

ஏப்ரல் 2026

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary



Rotary
TAIPEI 2026
Rtn Francesco Arezzo
RI President
Join us to celebrate a colourful evening
SOUTH ASIAN RECEPTION AT THE ROTARY INTERNATIONAL CONVENTION TAIPEI 2026
14TH JUNE 2026
Rtn AKS Flt Lt K P Nagesh
RI Director | Co-Convener - SAR 26
PDG Rtn Sridhar J
Chairman - SAR 26
PDG Rtn Dr N Subramanian
Co-Chairman - SAR 26
PDG Rtn CA Debasish Mishra
Secretary - SAR 26
To Meet and Greet, Feel at Home,
Under the Taipei Sky!!!
Date: June 14TH, 2026 | Time: 06:30 PM,
Venue: W Taipei, 10 Zhongxiao East Road, Sec. 5 Xinyi District, Taipei, Taiwan 110
REGISTRATION FEES
Single : INR 7,500
Couple : INR 15,000
Register Now
Convener - SAR 26
MMM TRICHY
Rtn AKS Er Muruganandam M (MMM)
B.E., M.B.A., M.S., MFT., PGDMM., DEM
Chartered Engineer
Vice President- Rotary International (2026 - 2027)
Rotary International Director (2025 - 2027)
Chairman - Excel Group of Companies
#MMMTRICHY I #MMMEXCEL I #MMMROTARY I #SAYYESTOROTARY
/mmmtrichy | www.mmmtrichy.com | Mail: mmmrotary@excelgroup.co.in | Ph: +91 93825 50001
Further Details Contact: PDG Sridhar J, Mobile No: +91 97908 39030 | PDG Debashish Mishra, Mobile No: +91 99370 66669

# உள்ளே




12 புற்றுநோயாளிகளுக்கு புகலிடம் தரும் தர்மசாலா



18 பழங்குடியின பெண்களுக்கு உதவும் ரோட்டரி சக்தி



20 சாத்தியமற்றதைச் சாதிக்க ஒரு குழுவாக இணைந்து செயல்படுங்கள்



28 வெங்கியுடன் ஒரு உரையாடல்



48 RID 3212-யின் பெண்களுக்கான விளையாட்டு போட்டி



52 அறிவியலுக்கு ஊக்கம் தரும் கண்காட்சி



56 100 இருளர் குடும்பங்களுக்கு ரோட்டரி வீடுகள்


Rotary

A publication of Rotary Global Media Network


நம் சுற்றுச் சூழலை பாதுகாக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## புனே அமைதி மையம், ஒரு சிறந்த தருணம்

*நம்பிக்கை அளிக்கும் புனே அமைதி மையம் என்ற தலையங்கத்தில் உங்கள் கருத்துக்களுடன் நான் உடன்படுகிறேன்; இது இந்திய ரோட்டேரியர்களுக்கு ஒரு அற்புதமான தருணம். இத்தகைய அமைதி மையத்தின் தேர்வு வரலாற்றுச் சிறப்பு மிக்கது மற்றும் இந்த நிகழ்வில் RI தலைவர் மற்றும் அறங்காவலர் குழுத்தலைவர் கலந்து கொண்டது ஒரு முன்மாதிரியாகும்.*

*இந்த மையத்தின் வருங்கால அறிஞர்கள், அமைதி மற்றும் அகிம்சையின் முன்னோடியான மகாத்மா காந்தி பிறந்த மண்ணின் செய்தியை எடுத்துச் செல்லும் அமைதித் தூதர்களாக முக்கிய பங்கு வகிப்பார்கள் என நம்புகிறேன்.*

*அருண் குமார் தாஸ், RC பரிபடா* — D 3262

*புனே சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்தில் ரோட்டரி அமைதி மையம் தொடங்கப்படுவது ஒரு தெய்வீக பரிசு. 1998–2002 காலகட்டத்தில் சிம்பயோசிஸில் பி.காம் மற்றும் கணினி முதுகலை முடித்ததை நான் பாக்கியமாக உணர்கிறேன். இந்த அமைதி மையத்தை உருவாக்கிய அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் பாராட்டுகள்.*

*சத்யஜீத் மோரே, RC தார்வாத் ஹெரிடேஜ்* — D 3170

*நாம் இப்போது காணும் புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் மோதல்களின் பின்னணியில் புனேயில் ரோட்டரி அமைதி மையத்தை நிறுவுவது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். 2013 முதல் ஆயிரக்கணக்கான நீர் தொடர்பான முன் முயற்சிகளுக்கு ஆதரவாக ரோட்டரி அறக்கட்டளை 230 மில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது.*

*N அன்த்ரி வேடி*
*RC ஹைதராபாத் மேகா சிட்டி* — D 3150




*தற்போதைய உலகளாவிய மோதல்களைக் கருத்தில் கொள்ளும்போது, அமைதியின் அவசியத்தை உணர்த்தும் அட்டைப்படம் சரியான நேரத்தில் வெளியாகியுள்ளது. மேலும், இந்தியாவுக்கு ரோட்டரி அமைதி மையம் கிடைப்பதைப் பற்றிய முகப்புக் கட்டுரை நமக்கு மகிழ்ச்சியளிக்கிறது.*

*RIதலைவர் அரேசோவின் செய்தியும், RI இயக்குனர் முருகானந்தத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அழைப்பும் சிறப்பாக அமைந்துள்ளன. ரஷிதா பகத் வழங்கிய தொழில்முனைவோர் RYLA குறித்த சிறப்பு கட்டுரை, ரோட்டராக்டர்களுடன் செய்யப்பட்ட விரிவான நேர்காணல்களால் மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது.*

*G கண்ணன்*
*RC திண்டுக்கல் வெஸ்ட்* — D 3000

அழகாக வடிவமைக்கப்பட்டு, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய அறிவு நிறைந்த உங்கள் அற்புதமான இதழின் தீவிர வாசகன் நான். ஆசிரியரின் ஆற்றல்மிக்க எழுத்துக்கள் இதயத்தைத் தொடுகின்றன; உலகம் இன்று பல மோதல்களை எதிர்கொள்கிறது, மேலும் பல உருவாகக்கூடும் நிலையில், நம்பிக்கையை வளர்த்து மோதல்களை குறைப்பதை கற்பிக்கும் அமைதி மையங்களை நிறுவுவதன் மூலம், அமைதியான சூழலை உருவாக்குவதில் ரோட்டரி முக்கிய பங்கு வகிக்கிறது.

ராஜ் குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

ராணுவத்தில் இடைவிடாத சேவையுடன் தனது பொற்கால நூற்றாண்டை நோக்கி நடைபோடும் டாக்டர் T S சாப்ரா (99) பற்றிய கட்டுரையைப் படித்தேன். நீலகிரி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான அவரது சேவை பாராட்டுக்குரியது.

RI இயக்குனர் M முருகானந்தம் சர்வதேச ரோட்டரி துணைத் தலைவராக நியமிக்கப்பட்டது RID 3000-ன் ஒவ்வொரு ரோட்டேரியருக்கும் பெருமையான தருணம். ஒரு ரோட்டராக்டராகத் தொடங்கி, தனது அர்ப்பணிப்பால் இவ்வளவு உயரம் சென்ற அவர், அனைவருக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கு, ஒரு முன்மாதிரியாக திகழ்கிறார்.

S மோகன்
RC மதுரை வெஸ்ட் — RID 3000

தன்னுடைய பத்தியில் முருகானந்தம் கூறுவதாவது: ஒரு உயர்ந்த நோக்கத்திற்காக வாக்குறுதி அளிப்பது மனிதாபிமானத்தின் வெளிப்பாடு என்றால், சவால்கள் மற்றும் தடைகளை மீறி அதைப் பாதுகாப்பது அதைவிட உயர்ந்த வெளிப்பாடு.“என்னை யார் அனுமதிப்பார்கள் என்பது கேள்வியல்ல; என்னை யார் தடுக்கப் போகிறார்கள் என்பதே கேள்வி” என்று கூறிய தத்துவவாதியும் நாவலாசிரியருமான அய்ன் ராண்டை மேற்கோள் காட்டி, அனைத்து இலக்குகளையும் அடைவதில் தன்னம்பிக்கையும் தலைமையும் முக்கியம் என அவர் வலியுறுத்துகிறார்.

நிரஞ்சன் கார்
RC புவனேஸ்வர் — D 3262

மன அழுத்தம் அதிகமான வாழ்க்கை

முறையால் இன்றைய இளைஞர்கள் நெஞ்சு வலியால் பாதிக்கப்படும் சூழலில், Dr கீதா மத்தாய் எழுதிய மாரடைப்பு குறித்த கட்டுரை சரியான நேரத்தில் வெளியாகியுள்ளது. மாரடைப்பு யாருக்கெல்லாம் வரும், அதன் அறிகுறிகள், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தாக்குதல் களைத் தடுப்பதற்கான உடற்பயிற்சிகள் ஆகியவற்றை அவர் தெளிவாக விளக்கியுள்ளார். இது வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

சிவபெருமாள் சுப்பிரமணி
RC வாலாஜாபேட் — D 3231

RIPS ஓலாயிங்கா பாபலோலாவை மையமாகக் கொண்ட “தி கேம் சேஞ்சர்” என்ற கட்டுரையை அருமை. ஒரு ரோட்டராக்டராகத் தொடங்கி இன்றைய உயர்ந்த பதவி வரையிலான அவரது பயணம், தலைமைத்துவம், சேவை மற்றும் விடாமுயற்சி ஆகிய ரோட்டரியின் உணர்வைத் தெளிவாக பிரதிபலிக்கிறது. ஒரு எளிய குறுஞ்செய்தி முயற்சியின் மூலம் TRF-க்காக 80,000 டாலர்களைத் திரட்டிய அவரது சாதனை, தலைமை என்பது அதிகாரத்தை விட நோக்கம், தொடர்பு மற்றும் நம்பகத்தன்மை பற்றியது என்பதை உணர்த்துகிறது.

அவரது பணிவு மனதை நெகிழ்விக்கிறது: “நான் ‘கேம் சேஞ்சர்’ என அழைக்கப்படுகிறேன்; ஆனால் ஆட்டத்தை மாற்றிய யோசனைகள் என்னுடையவை அல்ல.” 2026–27 ஆண்டுக்கான அவரது “ஒன்றிணைந்து நிலையான தாக்கத்தை உருவாக்குவோம்” என்ற செய்தி, வெறும் வாசகம் அல்ல; ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் பகிர்ந்த அர்ப்பணிப்பின் மூலம் நிலையான மாற்றம் சாத்தியம் என்பதை வலியுறுத்தும் தத்துவமாகும். ஆப்பிரிக்காவிலிருந்து வரும் இரண்டாவது RI தலைவராக, அவர் ரோட்டரியின் உலகளாவிய விரிவையும் தலைமையின் பன்முகத்தன்மையையும் பிரதிபலிக்கிறார்.

D மோகன்
RC சேலம் மிட்-டவுன் — D 2982

DGE ரவிசங்கர் டகோஜு மற்றும் அவரது மனைவி பாவ்லா வழங்கிய 500 கோடி ரூபாய் தாராளமான நன்கொடை உண்மையிலேயே ஆச்சரியமானது – என்ன ஒரு மகத்தான செயல்! இது ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கப்பட்ட உலகச் சாதனையாகும்.

ராபர்ட் பிராங்க்ளின் ரெகோ
RC பாஜ்பே — D 3181

ஜனவரி இதழில் ரஷீதா பகத் எழுதிய “ஒரு தனித்துவமான தலைமைப்பயணம்...” என்ற கட்டுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்திய ராணுவத்தின் கேப்டன் ரகு ராமனின் உரையில் இடம்பெற்ற ஒரு பத்தி நெஞ்சை உருக்கியது. அது நம் வீரர்கள் பெறும் கடிதங்களைப் பற்றியது; சில கடிதங்கள் புன்னகையைத் தரும், சிலவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கும், ஏனென்றால் வீரரின் மன உறுதியை ஒருபோதும் உடைக்கக்கூடாது. ஒரு வீரரின் மகள் இறந்துவிட்டாள் என்று வைத்துக்கொள்வோம்; அந்தப் படைத் தளபதி அவருக்குத் தகவல் தெரிவிக்க மாட்டார். ஆனால் அந்த தளபதி சுமக்க வேண்டிய சுமையை கற்பனை செய்து பாருங்கள். இதை வாசிக்கும் போது, ஒரு கணம் கண்களை மூடிக்கொண்டேன் அது ஒரு காட்சியைப் போல என் மனதில் விரிந்தது; என் இதயத்தைத் துளைத்த வலி. இதுவே உண்மையில் ஆன்மாவைத் தொடும் எழுத்தின் சக்தி.

சுரேஷ் மேனன்
RC பாரூர் — D 3205

**திருத்தம்:** RC மெட்ராஸ் வரலாற்றுடன் ஒரு உயிருள்ள பிணைப்பு (மார்ச் 2026) கட்டுரையில், சர் F E ஜேம்ஸை இந்தியாவின் முதல் RI இயக்குனர் என்று வாசிக்கவும். ஜான் ஆம்ஸ்ட்ராங்கின் மனைவியின் பெயர் பென்னி, பெட்டி அல்ல.

### ஈடுசெய்ய முடியாத இழப்பு

*PDG V R முத்துவின் (RID 3212) திடீர் மறைவால், ஒரு துடிப்பான ரோட்டரி தலைவரை நாம் இழந்துள்ளோம். அவரது திட்டங்களான யாதுமானவள் (மாணவிகளுக்காக), கலாம் (இளைஞர் தொழில் மேம்பாடு), போக்கஸ் (பேச்சாற்றல் திறன்), பஞ்ச் (தலைமைப் பண்புத் திறன்) மற்றும் பிரேம்குமார் (தலைமைத்துவ மேம்பாடு) ஆகியவை மிகச்சிறந்தவை.*

*அவர் ஒரு சாமர்த்தியமான தொழிலதிபர் (இதயம் குழுமம்), அதே சமயம் சமூக சேவை மற்றும் இளைஞர் மேம்பாட்டிலும் தனது கவனத்தைச் செலுத்தத் தவறியதில்லை. அவரது நினைவுகள் என்றும் நிலைத்திருக்கும்; மனிதாபிமானமும் தத்துவ பார்வையும் கொண்ட அவரது தலைமை நம்மை தொடர்ந்து வழிநடத்தும்.*

*கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக ரோட்டரி மாவட்டங்கள் 3000 மற்றும் 3191-ல் அவருடன் நெருங்கிய தொடர்புடைய சக ரோட்டேரியர் என்ற முறையில், அவரது இழப்பிற்கு நான் வருந்துகிறேன்.*

*R ஸ்ரீனிவாசன்*
*RC பெங்களூர் JP நகர் — D 3191*

**அட்டைப்பட விளக்கம்:** மும்பையில் உள்ள ரோட்டரி தர்மசாலா-வில், ஒரு புற்றுநோயாளி மற்றும் அவரது குடும்பத்தினர்.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

# RI தலைவரிடமிருந்து...



மோனிகா லோஹின்ஸ்கா

## அதிர்ஷ்டத்தை நம்பாதீர்கள், ஆயத்தமாதலை நம்புங்கள்

ஒரு நாள், தென்மேற்கு நைஜீரியாவிலுள்ள ஆயெ என்ற கிராமத்திலிருந்த ஒரு சிறு நல மையத்துக்கு ஒரு பெண் வந்தார். அவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறக்கவிருந்தன. அப்போது அங்கு போதுமான பணியாளர்கள் இல்லை. பிரசவத்துக்கு உதவவேண்டிய செவிலியர் அங்கு இல்லை.

ஒரு சமூக நலப் பணியாளர் அந்த இடத்தை நிரப்ப முன்வந்தார். அவர் ரோட்டரி அறக்கட்டளையின் பெரிய அளவுத் திட்டங்கள் முன்னெடுப்பான "நைஜீரியாவில் நலமான குடும்பங்களுக்காக ஒன்றுகூடுவோம்" என்ற திட்டத்தில் பங்கெடுத்திருந்தார். அவர் பிரசவம் பார்ப்பதற்கு முறையாகப் பயிற்சி எடுக்கவில்லை. ஆனால், அவரிடம் தேவையான நெருக்கடி நேர மகப்பேறு மருத்துவத் திறன்கள் இருந்தன. சில மணி நேரங்களில், ஒரு குழந்தை நல மையத்திலும், இன்னொரு குழந்தை ஒரு பொது மருத்துவமனையிலும் பிறந்தன.

உலகெங்கும் பெண்கள் இதுபோன்ற சூழ்நிலைகளை நாள்தோறும் எதிர்கொள்கிறார்கள். இந்தக் கணங்களில் வாழ்வா, சாவா என்பது நன்கு பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர்கள், நம்பகமான அமைப்புகள், செயல்முறைகளைச் சார்ந்துள்ளது.

"நைஜீரியாவில் நலமான குடும்பங்களுக்காக ஒன்றுகூடுவோம்" திட்டம் இந்தக் கணங்களை நம்பிக்கையின் பக்கம் நகர்த்துவதற்காகச் செயல்படுகிறது. நல அமைப்புகளை வலுவாக்கி, முன்களப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம், சமூகங்கள் கடினமான சூழ்நிலைகளிலும் தாய்மார்களையும் குழந்தைகளையும் பாதுகாப்பதற்கு உதவுகிறது.

இந்தப் பணி ரோட்டரிச் சேவையின் இதயத்தைப் பிரதிபலிக்கிறது. தாய், சேய் நலம் என்பது வெறும் சிந்தனை இலக்கு இல்லை. அது ஆழமான, தனிப்பட்ட இலக்கு. ஒரு தாய் பிரசவத்தில் உயிர் பிழைக்கவேண்டும். ஒரு குழந்தை முதன்முறையாக மூச்சுவிடவேண்டும். பயிற்சி பெற்ற, ஆயத்தமான, செயல்படும் அளவுக்கு அக்கறை கொண்ட ஒருவர் அங்கு இருந்தால், அந்தக் குடும்பம் முழுமையாக இருக்கும். சேவை என்பது, மக்களும் அமைப்புகளும் பரிசோதிக்கப்படுவதற்கு நெடுநாள் முன்பாகவே அவற்றில் முதலீடு செய்வதுதான் என்று ரோட்டரி புரிந்துகொண்டுள்ளது.

உள்ளூர் அறிவை, பன்னாட்டுக் கூட்டுப் பணிகளை, வளங்குன்றாத் தீர்வுகளை ரோட்டரி ஒன்று திரட்டினால் என்னவெல்லாம் நடக்கக் கூடும் என்பதை "நைஜீரியாவில் நலமான குடும்பங்களுக்காக ஒன்றுகூடுவோம்" போன்ற திட்டங்கள் காண்பிக்கின்றன.

மேலே நாம் கண்ட கதையின் மையம், சேவைதான். ஒருவர் மிகவும் ஆபத்தில் இருக்கும்போது அவருக்கு உதவுவதற்காக மக்கள் முன்வருகிற மனிதக் கணங்களில்தான் ரோட்டரியின் தாக்கம் அளக்கப்படுகிறது என்பதற்கான நினைவூட்டல் இது.

நாம் நல்லதற்காக ஒன்று கூடினால், சேவை வெறும் இலட்சியமாக நின்றுவிடுவதில்லை. அது குடும்பங்களுக்கான உயிர்நாடியாக, சமூகங்களுக்கான வலிமை மூலமாக, ஒரு உதவி மிகவும் தேவைப்படுகிற எந்த இடத்துக்கும் ரோட்டரி தொடர்ந்து செல்லும் என்கிற வாக்குறுதியாக ஆகிறது.

**ஃப்ரான்ஸஸ்கோ அரேஸ்ஸோ**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# தேவை: சமாதானத் தூதுவர்கள்

இந்தியாவில், புனேயில் உள்ள சிம்பியோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகத்திற்கும் ரோட்டரிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட காகிதத்தின் மை காய்வதற்குள் 99 சதவீத நாடுகள் விரும்பாத அல்லது தேர்வு செய்யாத மற்றொரு மோதலில் உலகம் சிக்கியுள்ளது. ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் ராணுவத் தாக்குதலும் அதற்கு ஈரான் கொடுத்த கடுமையான பதிலடி தாக்குதலும் ஒருகாலத்தில் நட்புறவுடன் இருந்த அண்டை அரபு நாடுகளின் குடிமக்களையும், உள்கட்டமைப்புகளையும் பெரும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த இதழுக்கான தலையங்கத்தை எழுதும் நேரத்தில் மேற்கு ஆசியாவில் போர் தொடர்கிறது. வீடுகள் அழிக்கப்படுகின்றன. மக்கள் கொல்லப்படுகிறார்கள் அல்லது ஊனப்படுத்தப்படுகிறார்கள். இதனால் மனித உயிர்கள் பேரழிவுக்கு உள்ளாவதுடன், பூமியில் மற்ற உயிரினங்களைவிட உயர்ந்தவர்களாக கருதிவந்த நாம், இதில் வாழ்வதற்கு தகுதிவாய்ந்தவர்களா என்கிற ஒரு கேள்வியையும், ஒருவித அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. பூமியின் வளங்களை நமக்காக முடிந்தவரை அபகரிக்க விரும்பும் நமது முடிவற்ற பேராசையும், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மூலமே அதிகாரத்தை கைப்பற்ற முடியும் என்கிற போதையும் பூமியை வேகமாக அழித்து வருகிறது.

ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள ஹோர்மூஸ் நீரிணை பற்றியும், இந்தியா உள்ளிட்ட நீண்டகால நட்புநாடுகளைத் தவிர மற்றவர்களுக்கு அதன் போக்குவரத்து மூடப் பட்டுள்ளது குறித்தும் பலமுறை எழுதப்பட்டுள்ளது. உலகின் எரிசக்தித் தேவையில் சுமார் 20 சதவீதம் (எண்ணெய் மற்றும் இயற்கை திரவ எரிவாயு) இந்த முக்கியமான நீர்வழிப் பாதை வழியாகவே பிற நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பாரசீக வளைகுடாப் பகுதியில் உள்ள நாடுகளுக்கு இதுவே உணவுப் பொருள்கள் கொண்டு செல்லும் வழியாக உள்ளது. சவூதி அரேபியா, தனது உணவுத் தேவையில் 80 சதவீதத்தையும், ஐக்கிய அரபு அமீரகம் 90 சதவீதத்தையும், கத்தார் 98 சதவீதத்தையும் இறக்குமதி செய்வதாகத் தெரியவந்துள்ளது. அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரானிடையே நடைபெறும் மோதலால், ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால் இப்பகுதிகளுக்கு மாற்று வழிகள் மூலமே உணவு கொண்டுவரும் சூழல் நிலவுவதால் விலைகள் உயர்வதுடன் பற்றாக்குறையும் ஏற்படக்கூடும்.

இந்தியாவுக்கான திரவ எரிபொருள் வரத்து பாதிக்கப் பட்டுள்ளதால் கடும் பற்றாக்குறை நிலவுகிறது. வளைகுடா பகுதியில் மட்டும் 1 கோடி இந்தியர்கள் வாழ்ந்து வருவதாக, பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார். ஏவுகணைத் தாக்குதலும், குண்டுவீச்சு தாக்குதலும் தொடர்வதால் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து கவலை எழுந்துள்ளது.

மேற்கு ஆசியாவில் மோதல் அதிகரித்து வரும் நிலையில் இப்போது தேவைப்படுவது பதற்றத்தை தணித்து, கோபத்தை தடுத்து, பேச்சுவார்த்தைக்கு வழிசெய்யும் நம்பகமான சமாதானத் தூதுவர்கள்தான். மோதலில் ஈடுபட்டுள்ள மூன்று நாடுகளுடனும் சுமுகமான உறவைப் பேணி வருவதால் இந்தியாவும் அதன் தலைமையும் சமாதான தூதுவர் பாத்திரத்தை ஏற்க பொருத்தமானவை என்று புவிசார் அரசியல் ஆய்வாளர்கள் யோசனை தெரிவிக்கின்றனர்.

இந்த பின்னணியில், உலகின் சில பகுதிகளில் பகைமையும் கசப்புணர்வும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ரோட்டரி அமைதி மையங்கள் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. புனே அமைதி மைய தொடக்கவிழாவில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பிரான்செஸ்கோ ஆற்றிய உரையின் மையக் கருத்து எனது செவிகளில் ஒலிக்கின்றன. மற்றவர்கள் மீதான அச்சமும், எதிர்தரப்பினரின் கருத்துக்களை புரிந்துகொள்ளத் தவறுவதும்தான் பிரச்னைகளுக்கு மூலகாரணமாகும். மக்களிடையே உறவை வளர்க்க பரஸ்பர நம்பிக்கையும் புரிதலும் அவசியம். வெறுப்புணர்வை கைவிடுவதும், வறுமையிலிருந்து விடுதலை பெறுவதன் மூலமும் அமைதியான உலகத்தை கொண்டுவர முடியும். நல்ல இதயமும், நல்லெண்ணமும் இருந்தால்தான் மட்டுமே இது சாத்தியம்.

ஆனால், இந்த உன்னதமான இலக்குகளை நோக்கி எப்படி நகர்வது? போரிடும் ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கும் இந்த காலகட்டத்தில், அந்த நிலைப்பாடு அச்சம், தப்பெண்ணம் மற்றும் வெறுப்பு ஆகியவற்றால் நிரம்பியிருக்கிறது.

காயங்களை குணப்படுத்தி, பயத்தையும், தப்பெண்ணங்களையும் கரைத்து, அந்நியர்கள் ஒருவரையொருவர் அரவணைத்துக்கொள்ள மென்மையாக வழிநடத்தக்கூடிய ஒரு மீட்பரை நாம் எதிர்பார்க்கலாமா? ரோட்டரி அப்படிப்பட்டவர்களில் ஒருவராக பரிணமிக்க முடியுமா?

ரஷீதா பகத்

# உங்களுடைய சிறந்த திட்டங்களை ரோட்டரி நியூஸ்-ல் இடம் பெறச்செய்யுங்கள்




உள்ளூர்ச் சமூகத்துக்குப் பலன் தரும் வகையில், மக்களுடைய வாழ்க்கைகளை மாற்றும் வகையில் நன்கு திட்டமிடப்பட்ட, கவனத்துடன் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை நடத்தும் ரோட்டரியன்கள், ரோட்டரி சங்கங்கள் அல்லது மாவட்டங்கள், அவை மற்ற ரோட்டரி சங்கங்களுக்குத் தெரியவேண்டும் என்று விரும்புவது இயல்புதான். உங்களில் பலர் இதற்குச் சிறந்த வழியாக எண்ணுவது, 1.5 லட்சத்துக்கு மேற்பட்ட ரோட்டரியன்கள், சுமார் 1,000 பொது நூலகங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவர்களுடைய காத்திருத்தல் அறைகள், மருந்தகங்கள் போன்றவற்றுக்குச் செல்கிற, மாதந் தோறும் 4 லட்சம் வாசகர்களால் படிக்கப்படுகிற ரோட்டரி நியூஸில் அந்தத் திட்டத்தைக் காட்சிப்படுத்துவது.

முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதில் ரோட்டரியன்கள் செலவிடும் உழைப்பும் பணமும் உங்கள் இதழால் போதுமான அளவு பேசப்படவேண்டும் என்பதை ரோட்டரி நியூஸ் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், எங்களுடைய பிரச்சனை, பல நேரங்களில் இது போன்ற திட்டங்களைப்பற்றி எங்களுக்கு ஏதும் தெரிய வருவதில்லை.

அதனால், உங்கள் தகவல் தொடர்பை மேம்படுத்துவதற்கு ஓர் அழைப்பு, இதோ: உங்களுடைய மிகப் பெரிய திட்டங்களைப்பற்றி எங்களுக்குச் சொல்லும் பொறுப்பை உங்கள் சங்கத்தில் ஒருவரிடம் ஒப்படையுங்கள். திட்டத்தின் வெவ்வேறு நிலைகளைத் தயவுசெய்து ஆவணப்படுத்துங்கள் அல்லது ஒரு தகவல் தாளைத் தயாரியுங்கள், அப்போது, இதழியலின் அடிப்படை அளவுகோல்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

- இந்தத் திட்டம் எப்போது சிந்திக்கப்பட்டது.
- இந்தத் திட்டம் ஏன் திட்டமிடப்பட்டது (உள்ளூர்ச் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கா?). இந்தத் தேவையை விவரியுங்கள்.
- இதற்கான பணம் எப்படித் திரட்டப்பட்டது? அது ஒரு TRF நல்கையா?
- இதற்கெனப் பணம் திரட்டுவது ஒரு பிரச்சனையாக இருந்ததா? அரசு அனுமதிகள் தேவைப்பட்டனவா? ஆம் எனில், அவற்றை எப்படிப் பெற்றீர்கள். பிற சவால்கள், தீர்வுகளைக் கண்டறிதல்.
- திட்டம் நிறைவுசெய்யப்பட்ட நேரம், வெவ்வேறு நிலைகள்.
- சில மனித ஆர்வக் கதைகளுடன் இதைத் தொடர்புபடுத்துங்கள்... பலன் பெற்றோருடைய படங்கள், அவர்களுடன் உரையாடல்.
- திட்டம், அதனால் பலன் பெற்றோருடைய நல்ல, செயல்தன்மை கொண்ட புகைப்படங்களை எடுங்கள், அவற்றை உயர் பகுப்புத்திறனில், உண்மை அளவில் அனுப்புங்கள்.
- இந்தத் திட்டத்தில் பேரார்வத்துடன் ஈடுபட்ட ரோட்டரியன்களைச் சிறப்பித்துக் காண்பியுங்கள், அவர்கள் சங்கத் தலைவர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை.
- பெண்கள், இளம் உறுப்பினர்களைக் கூடுதலாகப் பெற ரோட்டரி விரும்புகிறது என்பதால், இந்தக் குழு செய்த திட்டங்களை எங்களுக்கு அனுப்புங்கள்.

இவை அனைத்தும் தயாரானதும், உங்கள் திட்டத்தைப் பார்க்க எங்களை அழையுங்கள். நாம் மாதம் ஓர் இதழ்தான் வெளியிடுகிறோம் என்பதையும், இந்த இடத்துக்கு மிகுந்த தேவை உள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இதழுக்கு உங்களுடைய மிகச் சிறந்த திட்டத்தைக் கொடுங்கள், போர்வைகள், புத்தகங்கள் அல்லது இருக்கைகள் வழங்குதல் போன்ற எல்லா வகைச் செயல்பாடுகளையும் அனுப்பாதீர்கள்.

நிறைவாக, பல நூறு அல்லது பல ஆயிரம் டாலர்கள் செலவாகிற, பன்னாட்டு நல்கைகளைக் கொண்ட மிகப் பெரிய திட்டங்களைமட்டும் நாங்கள் எதிர்பார்ப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். தனித்துவமான யோசனையைக் கொண்ட, உள்ளூர்ச் சமூகத்துக்கு ஓர் எளிய, நேரடியான தீர்வை அளிக்கிற ஒரு சிறிய திட்டத்தைக்கூட நாங்கள் வரவேற்கிறோம்.

உங்கள் ஆலோசனைகளை அனுப்பவேண்டிய முகவரிகள்:

ஆசிரியருடைய மின்னஞ்சல் முகவரி:
**rushbhagat@gmail.com**

**Rotary News Editorial Dept**
**rotarynewsmagazine@gmail.com**

ஆசிரியர்

# RI இயக்குனர் செய்தி



## ஆயத்த நிலையிலிருந்து ஆக்கபூர்வமான தாக்கம் வரை

ஏப்ரல் மாதம் உடனடி சேவைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பொறுப்பை நமக்கு நினைவூட்டுகிறது - அது நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் நிலைநிறுத்துவதற்குமான பொறுப்பு. இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது ஆரோக்கியம், வாழ்வாதாரம் மற்றும் நமது சமூகங்களின் நீண்டகால நல்வாழ்வோடு பிரிக்க முடியாதது. நீர் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பசுமைப் போர்வை மீட்பு போன்ற துறைகளில் சங்கங்கள் மேற்கொள்ளும் சிறிய, தொடர்ச்சியான முயற்சிகள் நீடித்த மாற்றத்தை உருவாக்கும். இன்று நாம் பாதுகாக்கும் வளங்கள், வருங்கால சந்ததியினரின் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும்.

சமீப வாரங்களில் கோவா (மண்டலங்கள் 4 & 7) மற்றும் கோயம்புத்தூர் (மண்டலங்கள் 5 & 6) ஆகிய இடங்களில் நடைபெற்ற ‘திஷா’ நிகழ்வுகள், நமது எதிர்காலத் தலைமையின் நோக்கும் ஆற்றலையும் வெளிப்படுத்தின. புதிய தலைவர்களும் அவர்களின் அணிகளும் உறுப்பினர் சேர்க்கை, TRF நன்கொடை மற்றும் தாக்கமுள்ள சேவைகளுக்கான தெளிவான இலக்குகளை நிர்ணயித்துள்ளனர். இந்நிகழ்வுகள் தொலைநோக்கு, முன்னுரிமைகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தியுள்ளன.

அதே நேரத்தில், நாம் நிகழ்காலத்திலும் உறுதியாக நிலைபெற்றுள்ளோம். நமது மாவட்டங்கள் முக்கியப் பகுதிகளில் ஊக்கமளிக்கும் முன்னேற்றத்தை அடைந்துள்ளன. இந்த வேகம் மாவட்ட ஆளுநர்கள், அவர்களது குழுவினர் மற்றும் சங்க அளவில் அங்கீகாரம் எதிர்பாராமல் அயராது உழைக்கும் ரோட்டேரியர்களின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. வரும் மாதங்களில் இந்த வேகத்தைத் தக்கவைத்து, புதிய உறுப்பினர்களை வரவேற்பதும், TRF-ஐ வலுப்படுத்துவதும், நிர்ணயித்த இலக்குகளை அடைவதும் முக்கியம்.

இது ஆயத்தப் பணியின் முக்கியமான கட்டமாகும். மாவட்டங்கள் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், மாவட்டக் குழுக்கள் மற்றும் சங்கங்களுக்கான கட்டமைக்கப்பட்ட பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. பயிற்சி என்பது ஒரு காலண்டர் கடமையல்ல; இது பொறுப்புகளில் தெளிவைக் கொண்டுவருகிறது, செயல்பாட்டைக் கூர்மைப்படுத்துகிறது மற்றும் திட்டங்கள் அர்த்தமுள்ள முடிவுகளாக மாறுவதை உறுதி செய்கிறது. நன்கு பயிற்சி பெற்ற குழுக்கள் சவால்களை சிறப்பாகக் கணித்து, திறம்பட ஒத்துழைத்து, சீரான முடிவுகளை வழங்குகின்றன.

நோக்கத்திற்கும் தாக்கத்திற்கும் இடையிலான வேறுபாடு பெரும்பாலும் நாம் எவ்வளவு சிறப்பாகத் தயாராகிறோம் என்பதில் உள்ளது. தலைவர்கள் முன்கூட்டியே ஒருங்கமைக்கப்பட்டு தயார் நிலையில் இருக்கும்போது, வரும் ஆண்டு நிச்சயமற்ற தன்மையை நிர்வகிப்பதாக இல்லாமல், வாய்ப்புகளை உருவாக்குவதாக அமையும்.

நாம் முன்னேறிச் செல்லும்போது, தயார்நிலையுடன் பொறுப்பையும் இணைப்போம். நமது சுற்றுச்சூழலில் மிகுந்த அக்கறை கொள்வோம், நமது தலைவர்களை நோக்கத்துடன் தயார்படுத்துவோம், மேலும் நாம் உருவாக்கிய வேகத்தைத் தக்கவைப்போம். இதை நாம் சிறப்பாகச் செய்தால், நமது இலக்குகளை எட்டுவது மட்டுமல்லாமல் - ரோட்டரியின் பொருத்தத்தையும் தாக்கத்தையும் வலுப்படுத்துவோம்.


தொடர்ந்து நன்மைக்காக ஒன்றிணைவோம் மற்றும் நீடித்த தாக்கத்தை உருவாக்குவோம்.

**KP நாகேஷ்**
RI இயக்குநர், 2025–27



2026
**மாநாடு**

# எனக்குப் பிடித்த ஒரு சில விஷயங்கள்

ரோட்டரி சர்வதேச மாநாட்டிற்கு வருகை தரும் அனைவருக்கும் தங்களுக்குப் பிடித்தமான ஒன்று அல்லது இரண்டு அனுபவங்கள் நிச்சயம் இருக்கும். தைபேயில் உறுப்பினர்கள் எதை ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள் என்பதற்கான சிறு தொகுப்பு இதோ:





- ★ ரோட்டரி சர்வதேசத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளரிடமிருந்து நேரடியாக ரோட்டரியைப் பற்றிய ஆழமான கற்றல்.
- ★ ரோட்டரி நாடுகள் மற்றும் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொடியேற்றும் விழா. மெய்சிலிர்க்க வைக்கும் தருணம்!
- ★ நட்புறவு இல்லம்- ரோட்டரி கூட்டமைப்பு அரங்குகள் மற்றும் அமைதி கண்காட்சிகள் ஆகிய இரண்டும் பலருக்கும் பிடித்தமானவை.
- ★ புதிய நண்பர்களை உருவாக்கவும், உங்கள் ஆர்வங்களைத் தொடரவும் மற்றும் ஒரு உற்சாகமான நகரத்தைச் சுற்றிப் பார்க்கவும் கிடைக்கும் வாய்ப்பு.
- ★ சிறந்த பொழுதுபோக்கு மற்றும் உத்வேகம் - புகழ்பெற்ற பேச்சாளர்கள் மற்றும் பிரம்மாண்டமான மேடை நிகழ்ச்சிகள்.
- ★ ரோட்டரியின் உலகளாவிய அணுகல் மூலம் எதையெல்லாம் சாதிக்க முடியும் என்கிற அந்த உணர்வு.

தைபே பெய்-ஆன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான பாலின் லியாங்கிற்கு சர்வதேச சேவைக்கான வாய்ப்பை ரோட்டரி சாத்தியமாக்குகிறது. “ரோட்டரி மூலம், எங்களது உதவிக்கரம் மிக நீளமாக வளர முடியும், மேலும் ரோட்டரி நம்மை ஒன்றாக இணைப்பதால் இந்த உலகம் ஒரு சிறிய கிராமமாகத் தோன்றுகிறது,” என்று அவர் கூறுகிறார். வரவேற்புக் குழு உறுப்பினரான லியாங், ஜூன் 13–17 தேதிகளில் ரோட்டரி கிராமம் ஒன்றாக இணையும் போது நீங்கள் தைவானுக்கு வருவீர்கள் என்று நம்புகிறார்.

மேலும் விபரங்களுக்கு ***convention.rotary.org*** காண்க.


**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | லியோன் J |
| RID 2982 | சிவசுந்தரம் P |
| RID 3000 | கார்த்திக் J |
| RID 3011 | ரவீந்தர் குக்னானி |
| RID 3012 | அமிதா அனில் மொஹிந்த்ரு |
| RID 3020 | கல்யாண் சக்ரவர்த்தி Y |
| RID 3030 | தியானேஷ்வர் P ஷேவாலே |
| RID 3040 | சுஷில் மல்ஹோத்ரா |
| RID 3053 | நிஷா ஷெகாவத் |
| RID 3055 | நிகம்குமார் L சௌத்ரி |
| RID 3056 | பிரக்யா மேத்தா |
| RID 3060 | அமர்தீப் சிங் புனெட் |
| RID 3070 | ரோஹித் ஓபராய் |
| RID 3080 | ரவி பிரகாஷ் |
| RID 3090 | பூபேஷ் மேத்தா |
| RID 3100 | நிதின்குமார் அகர்வால் |
| RID 3110 | ராஜன் வித்யார்த்தி |
| RID 3120 | அசுதோஷ் அகர்வால் |
| RID 3131 | சந்தோஷ் மதுகர் மராத்தே |
| RID 3132 | சுதீர் V லத்தூர் |
| RID 3141 | மணீஷ் மோத்வானி |
| RID 3142 | ஹர்ஷ் வீரேந்திர மகோல் |
| RID 3150 | ராம் பிரசாத் S V |
| RID 3160 | ரவீந்திரா M K |
| RID 3170 | அருண் டேனியல் பண்டாரே |
| RID 3181 | ராமகிருஷ்ண P கண்ணன் |
| RID 3182 | பலாக்ஷா K |
| RID 3191 | ஸ்ரீதர் B R |
| RID 3192 | எலிசபெத் செரியன் |
| RID 3203 | தனசேகர் B |
| RID 3204 | பிஜோஷ் மானுவல் |
| RID 3205 | ரமேஷ் G N |
| RID 3206 | செல்லா K ராகவேந்திரன் |
| RID 3211 | டினா ஆண்டனி குன்னும்கல் |
| RID 3212 | தினேஷ் பாபு J |
| RID 3231 | சுரேஷ் V |
| RID 3233 | தேவேந்திரன் D |
| RID 3234 | வினோத்குமார் சரோகி |
| RID 3240 | காமேஸ்வர் சிங் எலங்பம் |
| RID 3250 | நம்ரதா |
| RID 3261 | அமித் ஜெயஸ்வால் |
| RID 3262 | மனோஜ்குமார் திரிபாதி |
| RID 3291 | ரமேந்து ஹோம்சௌதுரி |



அச்சு மற்றும் பதிப்பாளர் P T **பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



This periodical is published by **PT Prabhakar** from Dugar Towers 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008, on behalf of **Rotary News Trust**, edited by **Rasheeda Bhagat** and printed by **Rasi Graphics** at 40 Peters Road, Royapettah, Chennai 600 014, India.

**அறங்காவலர் குழுவினர்**

M முருகானந்தம் RID 3000
RI Director &
Chairman, Rotary News Trust

KP நாகேஷ் RID 3191
RI Director

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF Trustee

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மகாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3234

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3234

ராஜு சுப்ரமணியன் RID 3141

அனிருதா ராய்சௌத்ரி RID 3291

குலாம் A வானதி RID 3141

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2025–26)

ரோஹித் ஒபராய் RID 3070
தலைவர், ஆளுநர் குழு

தியானேஷ்வர்
ஷேவாலே RID 3030
துணைத்தலைவர், ஆளுநர் குழு

M K ரவீந்திரா RID 3160
செயலாளர், ஆளுநர் குழு

செல்லா
K ராகவேந்திரன் RID 3206
பொருளாளர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF**
**தலைவரிடமிருந்து...**



# தாக்கத்தின் பங்காளர்கள்

உலக நன்னீர் ஆதாரங்களைப் பாதுகாக்க, மீட்டெடுக்க, சிறப்பாக நிர்வகிக்க 2024-ல் தொடங்கப்பட்ட ரோட்டரி மற்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) இடையேயான நன்னீருக்கான சமூக நடவடிக்கை கூட்டாண்மை இதற்கான சிறந்த வழியாகும்.

இந்தத் திட்டத்தின் மூலம், ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்கள் ஒரு உள்ளூர் நீர்நிலையை (ஆறு, ஏரி, சதுப்பு நிலம் அல்லது நிலத்தடி நீர்) கண்டறிந்து, அதன் நீண்டகால பாதுகாப்பு மற்றும் மீட்பில் தங்களை அர்ப்பணிக்கின்றன. உறுப்பினர்கள் UNEP-ன் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கலிபோர்னியாவின் சவுத் உக்கியா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரும், இந்தக் கூட்டாண்மையின் தொழில்நுட்ப ஆலோசகருமான சால்வடார் ரிகோ இது குறித்து மேலும் கூறுகிறார்:

“தூய்மையான ஆறுகளின் மீதான என் ஆர்வம், மெக்சிகோவில் என் சிறுவயதில் நடந்த ஒரு வேதனையான அனுபவத்திலிருந்து வந்தது: மாசுபட்ட ஆற்றில் குளித்ததால் ஏற்பட்ட போலியோ காரணமாக என் மூத்த சகோதரி இறந்ததாக நாங்கள் நம்புகிறோம். பாதுகாப்பற்ற நீர் என்பது ஒரு சாதாரண சுற்றுச்சூழல் பிரச்சனை அல்ல; அது குடும்பங்களின் வாழ்க்கை, ஆரோக்கியம் மற்றும் கண்ணியத்துடன் நேரடியாக தொடர்புடையது.”

“இந்த அனுபவமே என்னை ரோட்டரி அறக்கட்டளையின் தொழில்நுட்ப ஆலோசகர்கள் குழுவில் செயல்படத் தூண்டுகிறது. அங்கு, ரோட்டரி உறுப்பினர்களுக்கு நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்ப அறிவை வழங்குவதை நான் உறுதி செய்கிறேன். இதன் மூலம், உலகளாவிய மானியத் திட்டங்கள் நிலையான மற்றும் விரிவுபடுத்தக்கூடிய தீர்வுகள் மூலம் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.”

"இன்று, நன்னீருக்கான சமூக நடவடிக்கை அமைப்பு, திட்டங்களைப் பதிவேற்றவும், பிற சங்கங்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும், உலகளாவிய மானியங்கள் மற்றும் சங்கங்களிடையேயான ஒத்துழைப்பு மூலம் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளைப் பெறவும் ஒரு பொதுவான தளத்தை வழங்கி, உலகளவில் ரோட்டரி சங்கங்களுக்கு ஆதரவளிக்கிறது.”

“இதன் தாக்கம் 2024-ல் கண்கூடாகத் தெரிந்தது. மெக்சிகோவின் RID 4170-ன் சுற்றுச்சூழல் தலைவர் ஒரு சவாலை முன்வைத்தார்: சிறிய, குடும்பத்திற்குச் சொந்தமான ஜவுளித் தொழிற்சாலைகள் மேல் லெர்மா நதிப் படுகையை மாசுபடுத்தி வந்தன. ரோட்டரியினரிடம் இதற்குத் தெளிவான தீர்வுகள் இல்லை. நன்னீர் கூட்டாண்மை மூலம், உயிரியல் தீர்வு உத்திகள் குறித்து வழிகாட்ட UNEP நிபுணர்களுடன் அவர்களை இணைத்தேன். இது உலகளாவிய மானிய விண்ணப்பமாக உருவாகி, சமூகத்திற்குத் தூய்மையான நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையை உருவாக்கியது.”

“ரோட்டரி சங்கங்கள், குடும்ப ஜவுளி நிறுவனங்கள் மற்றும் அரசு அதிகாரிகளின் கூட்டாண்மை, கூட்டுப் பொறுப்பையும் நீண்டகால பராமரிப்பையும் உறுதி செய்கிறது. ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் தங்களது நன்னீர் திட்டங்களை *communityactionforfreshwater.org* தளத்தில் பதிவு செய்து இந்தத் தாக்கத்தை விரிவுபடுத்தலாம்.” உங்கள் சமூகத்தைச் சுற்றிப் பாருங்கள் – பாதுகாப்பு தேவைப்படும் ஒரு நீர்நிலையை நீங்கள் நிச்சயம் காண்பீர்கள். ரோட்டரி அறக்கட்டளை உங்கள் திட்டத்திற்கு நன்னீருக்கான சமூக நடவடிக்கை மற்றும் உலகளாவிய மானியம் மூலம் ஆதரவளிக்க முடியும்.

**ஹோல்கர் நாக்**
TRF அறங்காவலர் தலைவர்

# புற்றுநோயாளிகளுக்கு புகலிடம் தரும் தர்மசாலா

ரஷீதா பகத்

இந்தியாவில் முதன்மையான, பலராலும் விரும்பப்படும், மிகப்பழமையான (1929-ல் நிறுவப்பட்டது) பாம்பே ரோட்டரி சங்கம், RID 3141, குறிப்பிடத்தக்க, மாபெரும் சமூக சேவைத் திட்டங்களை செயல்படுத்துவதில் தனித்துவம் பெற்றது. சமீபத்தில் நான் அதன் தனித்தன்மைவாய்ந்த “தர்மசாலா” திட்டத்தை பார்வையிடச் சென்றேன். நவீன வசதிகளுடன்கூடிய புற்றுநோய் சிகிச்சை மையமான டாடா நினைவு மருத்துவமனைக்கு வரும் புற்றுநோய் சிகிச்சை நோயாளிகளின் வசதிக்காக போய்வாடா-பரேல் பகுதியில் 100 தாற்காலிக குடியிருப்புகளை நடத்தி வருகிறது. இங்கு நோயாளிகள் மற்றும் அவரை பராமரிக்கும்



*திட்டத்தலைவர் மிரல் ஷா, புற்றுநோயாளி கிருஷ்ணா முகர்ஜி மற்றும் அவரது மனைவி ஸ்வாதியுடன்.*

உதவியாளர்களுக்கு எளிமையான, நேர்த்தியான, சுத்தமான, வசதியான ஒரு பெட்ரூம் ஹால், கிச்சன் கொண்ட குடியிருப்பை ரூ.300 என்ற சராசரி மாத வாடகைக்கு வழங்கி வருகிறது.

இங்கு விசாலமான லிஃப்ட் வசதி உள்ளது. அருகில் உள்ள புற்றுநோய் மருத்துவமனையில் கீமோதெரபி அல்லது கதிர்வீச்சு சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் அவரது பராமளிப்பாளருக்கு சலுகை விலையில் சமைத்த உணவுகள் வழங்கப்படுகின்றன. உணவு மற்றும் தங்கும் வசதி தவிர நோயாளிகளின் துணிகளை உலர் சலவை செய்யவும், அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று திரும்பவுதற்கான போக்குவரத்து வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டம் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. மகாராஷ்டிர மாநில வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு ஆணையத்துக்கு சொந்தமான பலமாடி கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாநிலத்தில் குடிசைவாசிகளின் குடியிருப்புகள் மறுசீரமைப்புக்காக கையகப்படுத்தப்படும்போது அவர்கள் இங்குதான் தங்கவைக்கப்படுகின்றனர். இங்குள்ள இடத்தில் 16-வது மாடி முதல் 21-வது மாடி வரையுள்ள



100-க்கும் மேலான அடுக்குமாடி குடியிருப்புகளை ரோட்டரி சங்கம், 30 ஆண்டுக்கால குத்தகைக்கு எடுத்துள்ளது. மேலும் அடிப்படையில் ஒவ்வொரு குடியிருப்பும் ஒரு பெட்ரூம், ஹால், கிச்சன் என மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு HDFC நிறுவனம் CSR கூட்டாளியாக உள்ளது. மேலும் திட்ட பராமரிப்பு செலவு, ஊழியர்கள் சம்பளம் மற்றும் மாநில வரிகள் உள்பட பத்து ஆண்டுகளுக்கு வருடாந்திர பராமரிப்புச் செலவாக ரூ.1.5 கோடி வழங்கவும் இந்த நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த பலமாடி கட்டடத்தின் மேல்தளத்தில் உள்ள 12 அடுக்குமாடி குடியிருப்புகள் ஒரு ஹால், பெட்ரூம், கிச்சன் ஸ்டூடியோ வீடுகளாக மாற்றப்பட்டு டாடா நினைவு மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இது நோயாளிகளின் குடியிருப்பை போன்றது என்றாலும் இவற்றில் ஏ.சி. வசதி பொருத்தப்பட்டுள்ளது என்று திட்டத்தின் தலைவரும் சங்கத்தின் உறுப்பினருமான மிரால் ஷா விளக்கிக் கூறினார்.

மீதமுள்ள 84 குடியிருப்புகளில் நோயாளிகளும் அவர்களின் குடும்பத்தினரும் உள்ளனர். ஒரு வீடு ஷாவின் அலுவலகமாகவும். மற்றொன்று டாடா நினைவு மருத்துவ மனையின் அலுவலகமாகவும் செயல்படுகிறது. உள்ளது. இரண்டு குடியிருப்புகள் தங்கியிருப்பவர்களுக்கு உணவு தயாரிக்கும் சமையலறையாக மாற்றப்பட்டுள்ளது.

RID 3141 மாவட்டத்தின் PDG-யும் சங்கத்தின் உறுப்பினருமான சந்தீப் அகர்வாலா கூறுகையில், “2022-ல் மாவட்டத்திற்கு தலைமைவகிக்கும் முன்பு டாடா புற்றுநோய் மருத்துவ மனைகளை நடத்தும் டாடா ஆராய்ச்சி மையத்துடன் தமக்கு தொடர்பு இருந்து வருவதாகவும், அவற்றின் உதவியுடன் பால்கர் மாவட்டத்தில் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் வாய்வழி புற்றுநோய், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோய் தடுப்பு மருத்துவ முகாம்களை தாம் நடத்தி வந்ததாகவும் அவர் கூறினார். எங்களை சந்திக்கும்போதெல்லாம், அவர்கள் புற்றுநோயாளிக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான கருவிகளை வாங்கித் தருமாறு கோரிக்கை விடுத்தனர். கோவிட் தொற்று காலத்தில் புற்றுநோயாளிகளுக்கு சிறப்பு தடுப்பூசி போடுவதற்கு ரோட்டேரியன்கள் உதவினர். நாங்களும் முடிந்த அளவு அவர்களுக்கு கணிசமான பங்களிப்பைச் செய்தோம். ஆனால், நான் ஒவ்வொரு முறையும் டாடா நினைவு மருத்துவமனையைக் கடந்து செல்லும்போது, புற்றுநோயாளிகள் பலர் நடைபாதைகளிலோ அல்லது மேம்பாலத்தின் அடியிலோ வசிப்பதை பார்த்து மனம் வேதனைப்பட்டது. புற்றுநோய் ஒரு ஆட்கொல்லி நோய், அதிக செலவு காரணமாக ஏழை மற்றும் நடுத்தர வர்க்க குடும்பத்தினர் திவாலாகும் நிலைமை ஏற்படும் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து மும்பைக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக வரும் ஏழைமக்கள் தங்குமிடம் இல்லாத நிலையில் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு ரோட்டரி எப்படி உதவ முடியும் என்ற சிந்தனை பிறந்தது. டாடா மருத்துவமனை மூலம் இதற்கு வழிபிறந்தது. அதாவது மருத்துவமனையிலிருந்து 15 நிமிட நடைதூரத்தில் மகாராஷ்டிர வீட்டுவசதி மேம்பாட்டு ஆணையத்துக்கு சொந்தமான 100 குடியிருப்புகள் எங்களுக்கு கிடைத்தது. ஆனால், அவை வெறும் குடியிருப்புகளாகவே இருந்ததால், தேவையான வசதிகளை செய்து தருமாறும் அவற்றை ஏற்று நடத்த வேண்டும் என்றும் மருத்துவமனை நிர்வாகத்தினர் எங்களை கேட்டுக் கொண்டனர். உடனே மகிழ்ச்சியுடன் அவர்களின் கோரிக்கைகளை நாங்கள் ஏற்றுக்கொண்டோம். மின்னல் வேகத்தில் 100 குடியிருப்புகளிலும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டன.

குடியிருப்புகளை மாற்றியமைத்து புதுப்பிக்க ரூ.4.5 கோடி செலவிடப் பட்டது. இந்த மொத்த தொகையும் HDFC நிறுவனம் தனது CSR நிதியிலிருந்து வழங்கியது. இங்கு வந்து தங்கும் நோயாளிகள், அதை தங்கள் வீடுபோல் உணர வேண்டும் என்பதால் மூன்று நட்சத்திர ஹோட்டல்

தரத்துக்கு அதை புதுப்பித்தோம். ஒவ்வொரு குடியிருப்பிலும் இரண்டு படுக்கைகள், ஒரு ஸோஃபா-கம்-பெட் போடப்பட்டன. எனவே அதில் மூன்றுபேர் வரை தங்கமுடியும். இந்திய கழிவறைகள் மேற்கத்திய கழிவறையாக மாற்றியமைக்கப்பட்டன. மேலும் வாட்டர் ஹீட்டர்கள் பொருத்தப்பட்டு, 600 லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி வசதியும் ஏற்படுத்தப்பட்டது. மேலும் ஒரு குளிர்பதனப் பெட்டி, எழுதுவதற்கு வசதியான மேஜை மற்றும் கேபிள் வசதியுடன் ஒரு தொலைக்காட்சி பெட்டியும் வழங்கப்பட்டது. மின்சார அடுப்பு, சமையல் பாத்திரங்கள் என முழுவசதியுடன் சமையலறையும் வழங்கப்பட்டது.

அகர்வாலா மேலும் கூறுகையில், இது நடந்து முடிந்ததும், TRC இயக்குநர் டாக்டர் சுதீப் குப்தா எங்களிடம், “இங்கு ஏராளமான புற்றுநோயாளிகள் சிகிச்சைக்காக தங்கியிருக்கின்றனர். அவர்களுக்கு ஏதாவது அவசர சிகிச்சை செய்ய வேண்டும் எனில் உடனடியாக டாக்டர்கள் வரவேண்டும். எனவே 12 வது மாடியில் டாக்டர்கள் தங்கியிருக்க ஏற்பாடு செய்யமுடியுமா?” என்று கேட்டார். உடனடியாக மருத்துவர்கள் தங்கவும் வசதி செய்யப்பட்டது. மேலும் அவர்கள் குடியிருப்புக்கு மட்டும் குளிரூட்டி வசதியும் ஏற்படுத்தப்பட்டது என்று அகர்வாலா மேலும் கூறினார்.

படிப்படியாக அனைத்து குடியிருப்புகளிலும் கூடுதல் சேவைகள் சேர்க்கப்பட்டன. ஒருநாள் விட்டு ஒரு நாள் துணிகள் துவைத்து சலவை செய்யப்படுகின்றன. படுக்கை விரிப்புகள், துண்டுகள் மாற்றப்படுகின்றன. அடுத்த சில மாதங்களிலேயே, நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு 15 நிமிடம் நடந்து செல்வது சாத்தியமானது என்றாலும் சவாலானது என்பதை ரோட்டேரியன்கள் உணர்ந்துகொண்டனர். “எனவே, நாங்கள் சொந்தமாக வாகனங்களை வாங்கி தர்மசாலாவுக்கும் மருத்துவமனைக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் இலவச போக்குவரத்துக்கு வசதிக்கு ஏற்பாடு செய்தோம்”.

எதிர்பார்த்ததைப் போலவே, டாடா நினைவு மருத்துவமனைக்கு இந்தியா முழுவதிலிருந்தும் வரும் நோயாளிகள் தங்க இடம் கேட்டு வருவது அதிகரித்தது. எனினும் நாங்கள் மருத்துவமனையின் பரிந்துரையின் பேரிலே நோயாளிகளுக்கு இடம் கொடுத்தோம். “ஒரு மாதம் மட்டுமே நோயாளிகள் தங்க இடம் கொடுக்கிறோம். விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் சிகிச்சை அளிக்கும் டாக்டர்களின் பரிந்துரை பேரில் சில நோயாளிகளுக்கு அதிக நாள் தங்கியிருக்க அனுமதி வழங்குகிறோம்”.

இங்கு தங்க வைக்கப்பட்டுள்ள நோயாளிகள் மோசமான நிலையில் உள்ளவர்கள் அல்ல மற்றும் அவசர மருத்துவச் சிகிச்சை தேவைப் படுபவர்களும் அல்ல. “இங்குள்ள நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் அறுவைச் சிகிச்சை முடிந்து கீமோதெரபி அல்லது கதிர்வீச்சு சிகிச்சைக்காக காத்திருப்பவர்கள். 70 சதவீதம் பேர் கொல்கத்தா மற்றும் மேற்கு வங்கத்தில் உள்ள இதர பகுதிகளைச் சேர்ந்தவர்கள். சந்தை விலையில் வீடு எடுத்து தங்கி சிகிச்சை பெறும் அளவுக்கு வசதி யானவர்கள் அல்ல. நோயாளிகளால் தங்கி சிகிச்சை பெற அவர்களால் எவ்வளவு பணம் கொடுக்க முடியும் என்பதை கேட்டறிந்த பிறகு டாடா நினைவு மருத்துவமனை அந்த நோயாளிகளை இங்கு தங்குவதற்கு பரிந்துரைக்கிறது” என்று ஷா கூறினார்.

எனினும் பணம் செலுத்த முடியாத ஏழைகளுக்கு இங்கு இலவசமாக தங்குமிடம் வழங்கப்படுகிறது. மற்றவர்கள் மாதம் ரூ.300 செலுத்த வேண்டும். கொஞ்சம் வசதியானவர்கள் மாதம் ரூ.600 கட்டணம் செலுத்தலாம். ஒரு நோயாளியுடன் அவர்களின் உறவினர்கள் இருவர் தங்கலாம் என்றாலும் சராசரியாக ஒரு குடியிருப்பில் மொத்தம் இரண்டு பேர் மட்டுமே தங்கி வருகின்றனர்.





நோயாளிகளின் பராமரிப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் 35 முதல் 55 வயதுக்கு இடைப்பட்டவர்கள். அவர்கள் இளம் நோயாளிகளை, சற்று வயதானவர்களை பார்த்துக் கொள்கின்றனர். பொதுவாக மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை பெறும் பெண் நோயாளிகளே இங்கு தங்கியுள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

தர்மசாலா குடியிருப்பு தளங்களில் 12 வீட்டுப் பணியாளர்களும், 12 பாதுகாவலர்களும் பணியமர்த்தப் பட்டுள்ளனர். நோயாளிக்கு ஏதாவது நேர்ந்தால், அவசர சிகிச்சைக்காக அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதை உறுதி செய்யவே பாதுகாப்பு பணியார்கள் பணியமர்த்தப் பட்டுள்ளனர். இங்குள்ள தாழ்வாரம் முதல் சமையலறை வரை அனைத்து இடங்களும் தூய்மையாக இருப்பதைப் பார்த்தே வீட்டுப் பணியாளர்களின் செயல்பாடு உங்களுக்குத் தெரியவரும்.

அகர்வாலா ஒரு விஷயத்தை நினைவுகூர்ந்தார். “சமையலறை, கழிப்பறை, படுக்கை வசதிகளுடன் குடியிருப்புகள் தயாரானபோது நோயாளிகளும் பராமரிப்பாளர்களும் ஆரோக்கியமான உணவுகளை அவர்கள் சாப்பிடவில்லை என்பதும், வெளியிலிருந்து உணவை வரவழைத்து சாப்பிடுவதும், ஒரு சிலர் மட்டுமே மின்சார அடுப்பில் காலை சிற்றுண்டி, காபி தயாரித்து சாப்பிடுகின்றனர் என்பதும் திட்டக் குழுவினருக்கு தெரியவந்தது.

எனவே அவர்கள், முழுமையான சமையலறையைத் தொடங்க முடிவு செய்தனர். அதற்காக இரண்டு வீடுகளை ஒதுக்கினர். “நாங்கள் வாரம் முழுவதும் விதம் விதமான உணவுகளைத் தயாரித்து சலுகை விலையில் வழங்கத் தொடங்கினோம். சப்பாத்தி, காயற்கறிகள், அரிசி சாதம், பருப்புவகைகள் மற்றும் தயிர் இதில் அடங்கும். காலை சிற்றுண்டியாக அவல் உப்புமா, இட்லி, தோசை, ரவை உப்புமா, ஒரு டம்ளர் பால் வழங்கப்படுகிறது. நன்கொடையாளர்கள் செலவை ஏற்க முன்வருவதால் சில சமயங்களில் பழங்களும் வழங்கப்படுகின்றன. காலை உணவுக்கு ரூ.5, மதிய உணவு மற்றும் இரவு உணவுக்கு தலா ரூ.10 என மொத்தம் ரூ.25 என்ற அளவில் பெயரளவுக்கு பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், எங்களுக்கு ஒருவருக்கு உணவு வழங்க ரூ.150 வீதம் செலவாகிறது” என்றார்.

குறைந்த எண்ணெய் மற்றும் மசாலா பொருட்களுடன் உணவு தயாரிக்கப்பட்டாலும் சுவையாகவே உள்ளது. ஒரு நாள் உணவுக்கு ரூ.25 கூட பணம் கொடுக்க முடியாதவர்களுக்கு இலவசமாக உணவு வழங்கி வருகிறோம். நாங்கள் நோயாளிகளின் கூட்டாளிகளை பார்த்துக் கொள்கிறோம் அல்லது சங்க உறுப்பினர்கள் கவனித்துக் கொள்கின்றனர்.

டாடா நினைவு மருத்துவமனை அருகே உணவுக் கடையை நடத்தி வரும் ஷீதல்-விக்ராந்த் பட்கர் தம்பதியின் கூட்டு முயற்சியுடன் இங்கு நாங்கள் சமைக்கப்படும் உணவுகளை





*இடமிருந்து கடிகார திசையில்:* PRIP *கல்யாண் பானர்ஜியுடன்* PDG *அகர்வாலா மற்றும் ஷா; உணவுக்கூடத்தின் ஒரு காட்சி;* RC *பம்பாய் உறுப்பினர்கள் ஒரு புற்றுநோய் நோயாளி மற்றும் அவரது குடும்பத்தினருடன்;* RID 3141 PDG *சந்தீப் அகர்வாலா மற்றும்* RC *பம்பாய் தலைவர் பிமல் மேத்தா ஆகியோர் புற்றுநோயிலிருந்து மீண்ட ஒருவருடன்.*

தயாரித்து நோயாளிகளுக்கும் அவர்களின் பராமரிப்பாளர்களுக்கும் மலிவு விலையில் வழங்கி வருகிறோம் என்று ஷா மேலும் கூறினார்.

ஒரு சிறிய அடுக்குமாடி குடியிருப்பில் மேற்குவங்கத்தைச் சேர்ந்த ரோமா பௌமிக் (51) என்ற பெண்மணியை சந்தித்தேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு அவருக்கு குடல் பகுதியில் கட்டி இருப்பது C T ஸ்கேன் மூலம் தெரியவந்தது, மேல் சிகிச்சைக்காக அவர் இங்கு வந்துள்ளார். அவருடன் மகன் விஸ்வஜித் , மருமகள் ஷிவ்லியும் வந்துள்ளனர். அவர்கள் கொல்கத்தாவிலிருந்து மூன்று மணி நேர பயணத்தில் உள்ள இடத்தில் வசிக்கின்றனர். 2024-ல் ஷிவ்லிக்கும் புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. "நாங்கள் இதே மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். அவளுக்கு தைராய்டு சுரப்பியில் பிரச்னை இருந்தது. சிகிச்சைக்குப் பின் இப்போது அவர் பூரண குணமடைந்துள்ளார்" என்று அவர் கூறினார்.

அவரது மனைவி சிகிச்சை பெற்ற போது அவர்கள் மும்பையில் நான்கு மாதங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அவர்கள் இங்கேயும் தங்கியிருந்தனர். தர்மசாலாவில் 30 நாட்களுக்கு மட்டுமே தங்க விதிகள் உள்ளதால் வேறு இடத்தை அவர்கள் தேட நேர்ந்தது. "எங்களுக்கு போதுமான வசதிகள் இல்லாத வீடுதான் கிடைத்தது. அதற்கு நாங்கள் ரூ.700 பணம் செலுத்த வேண்டி யிருந்தது. அந்த இடம் மருத்துவ மனைக்கு அருகிலும் இல்லை. நாங்கள் வேறு இரண்டு பேருடன் அறையைப் பகிர்ந்து கொண்டு அதிக கட்டணம் கொடுக்க வேண்டி யிருந்தது" என்றார்.

உணவுகூட விலை அதிகமாக இருந்தது, தர்மசாலாவில் வழங்கப்படும் உணவின் தரத்துக்கு ஈடானதாக இல்லை என்று அவர் மேலும் கூறினார். ஆனால், 30 நாள் கெடு முடிவதால் மிகவும் பதற்றத்துடன் இருக்கிறார். சிகிச்சைக்காக மேலும் சிலநாள் தங்கியிருக்க மருத்துவர்கள் பரிந்துரைப்பார்கள் என்று அவர் உறுதியாக நம்புகிறார். குறைந்தது 15 முதல் 20 நாட்கள் வரை தங்க நேரிடலாம் என்பதால் வேறு இடம் தேட வேண்டும். ஆனால், இதுபோன்ற இடம் கிடைக்காது என்று பெருமூச்சுவிடுகிறார் அவர்.

அவர்களின் உரையாடலை கேட்டுக் கொண்டிருந்த ஷா, "டாடா நினைவு மருத்துவமனை யிலிருந்து பரிந்துரை வந்தால் நிச்சயம் உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும்" என்று உறுதியளித்தார்.

நான் கிருஷ்ண கோபால் முகாபாத்யாய என்னும் மற்றொரு நோயாளியையும் சந்தித்தேன். அவர், மேற்கு வங்க மாநிலம், கிழக்கு மீர்ஸாபூர் பகுதியைச் சேர்ந்தவர். அவருக்கு நுரையீரல் பிரச்னை உள்ளது. அவருக்கு பரிசோதனைகள் முடிந்துவிட்டன. கீமோதெரபி சிகிச்சை மட்டும் தொடங்கப்பட வேண்டும். முன்னாள் அரசு ஊழியரான அவர், இப்போது ஓய்வூதியம் பெற்று வருகிறார். அவர் இங்கு மனைவி சுவாதி மற்றும் உறவினர் ஒருவருடன் தங்கியிருக்கிறார். இங்கு தங்கும் இடமும் நன்றாக இருக்கிறது. உணவும் சுவையாகவும் தரமானதாகவும் இருக்கிறது என்று சுவாதி மகிழ்ச்சியுடன் கூறினார். நான் உங்க குடியிருப்பின் சமையலறையை வந்து பார்க்கலாமா என்று கேட்டதற்கு, "நிச்சயமாக. நான் இங்குள்ள மின்சார அடுப்பில் தேநீர், காபி மற்றும் சப்ஜி தயாரிக்கிறேன். எல்லாம் நன்றாக இருக்கிறது. ஆனால், சமையலறையில் புகை மற்றும் அசுத்த காற்றை வெளியேற்றும் மின்விசிறி (எக்ஸாஸ்ட் ஃபேன்) அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும். நான் சமைத்த பிறகு அறையில் புகை சூழ்ந்திருக்கும். சமைத்த உணவின் வாசனையும் நீடித்திருக்கும்" என்கிறார்.



PRIP *கல்யாண் பானர்ஜி, புற்றுநோயிலிருந்து மீண்ட ஒருவருடன்.*

நாங்கள் வெளியேவந்தபோது, ஷா "நாங்கள் அவர்களுக்கு சைவ உணவை வழங்கி வருகிறோம். மேற்குவங்கத்தைச் சேர்ந்த பலரும் மீன் உணவு சாப்பிடுவார்கள். எனவே தங்களது குடியிருப்பிலேயே மீன் உணவை சமைக்கிறார்கள். அதனால் தான் எக்ஸாஸ்ட் ஃபேன் கேட்கிறார். அவரது கோரிக்கை பரிசீலிக்கப்படும்" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

பிப்ரவரி மாதம் நடுப்பகுதி வரை, இந்த வசதிகள் மூலம் 2,530 புற்று நோயாளிகள் பயனடைந்துள்ளனர். ஒவ்வொரு புதன் கிழமையும் திட்டத்தலைவர் இங்கு வந்து சில மணி நேரங்கள் செலவிட்டு அனைத்தும் பிரச்னை யில்லாமல் சீராக இயங்குகிறதா என்பதை உறுதி செய்வார். "அடுத்த பத்து மாதங்களில் இந்த வீட்டு வசதி குடியிருப்பில் மேலும் பல வீடுகள் காலியாக உள்ளன. எனவே நாங்கள் இப்போதுள்ள 100 தர்மசாலா குடியிருப்புகளை 300-ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்".

அதற்கான நிதிக்கு எங்கு போவீர்கள்? என்று கேட்டதற்கு, "நன்கொடையாளர்களை கண்டு பிடிக்கும் மிகப்பெரிய பொறுப்பை என்னிடம் சந்தீப் அகர்வாலா தந்துள்ளார்" என்றார் ஷா.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# குழந்தைகளுக்கான சுற்றுச்சூழல் பராமரிப்பு நிகழ்வு

ரோட்டரி செய்திக்குழு




3 முதல் 13 வயதுள்ள இளம் அன்னெட்களை ஒன்று திரட்டி ரோடாகிட்ஜ் என்ற துடிப்பான, சங்கங்களுக்கிடையிலான நிகழ்வை நடத்தியது சென்னை ஆன்கரேஜ் ரோட்டரி சங்கம், RID 3234, 3 வகைப் போட்டிகளில் கலந்து கொண்ட குழந்தைகள் சுற்றுச்சூழல்-கோள் திட்டம் என்ற கருப்பொருளை ஆர்வத்துடன் ஆராய்ந்தார்கள், படைப்பூக்கத்தை முதன்மையான சுற்றுச்சூழல் சிக்கல்களைப்பற்றிய விழிப்புணர்வுடன் கலந்து வழங்கினார்கள்.

மரத்தைப்போல் உடுத்திக் கொண்டு தோன்றிய சிறு குழந்தையில் தொடங்கி, புதுப்பிக்கக்கூடிய ஆற்றலுக்கான தேவையை விளக்கும் சிறுவர்வரை ஒவ்வொருவரும் பூமியைப்பற்றிய உண்மையான கவலையை வெளிப்படுத்தினார்கள். “அவர்களுடைய ஆற்றல் இந்த நிகழ்வை வெறும் போட்டியாக இல்லாமல், மாற்றத்தைக் கொண்டுவர விரும்பும் இளம் குரல்களின் கொண்டாட்டமாக ஆக்கிவிட்டது” என்றார் நிகழ்ச்சித் தலைவர் பாரதி சரவணன்.

இங்கு இயற்கை, நீரைப் பாது காத்தல், மறுசுழற்சி செய்தல், காட்டு உயிர்களைப் பாதுகாத்தல், புதுப்பிக்கக்கூடிய ஆற்றல், மாசுக் கட்டுப்பாடு உள்ளிட்ட தலைப்புகளில் ஓவியப் போட்டி, விதவிதமாக உடுத்தும் போட்டி போன்றவை நடைபெற்றன. குழந்தைகள் இந்தக் கருப்பொருட்களைக் கற்பனையோடும் தெளிவோடும் வெளிப்படுத்தினார்கள்.

சுற்றுச்சூழல் கருப்பொருளிலான புகைப்பட அரங்கம் ஒன்று குழந்தை களையும் பெற்றோரையும் வரவேற்று இந்தக் கொண்டாட்டச் சூழலை இன்னும் சிறப்பாக்கியது. அங்கு அவர்கள் எடுத்துக்கொண்ட உடனடிப் புகைப்படங்கள் frame போட்டு நினைவுச்சின்னங்களாகத் தரப்பட்டன. ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் பரிசுப் பொருட்கள் நிறைந்த பை, சான்றிதழ் வழங்கப்பட்டது. பெற்றோர்கள் அவர்கள் வழங்கிய ஊக்கத்துக்காகவும் ஆதரவுக்காகவும் பாராட்டப்பட்டார்கள்.

அமர்வுகளுக்கு நடுவில் நடைபெற்ற magic show மகிழ்ச்சியைப் பெருக்கியது, குழந்தைகளைச் சிறிதும் சோர்வின்றி ஆர்வத்துடன் பங்கேற்கச்செய்தது. “இந்த இளம் பங்கேற்பாளர்கள் தங்கள் தன்னம்பிக்கையால், உடைகளால், சிந்தித்து உருவாக்கப்பட்ட நிகழ்ச்சிகளால் அனைவரையும் ஈர்த்தார்கள், வளங்குன்றாப் பூமியின் வருங்காலப் பாதுகாப்பாளர்களான இந்தப் புதிய தலைமுறையின் உணர்வை உண்மையாகப் பிரதிபலித்தார்கள்” என்றார் பாரதி.

RC மெட்ராஸ் உறுப்பினர் சேஷ சாய், தொழில்முனைவோர் காவ்யா ரெட்டி, சென்னை நேஷனல் பப்ளிக் ஸ்கூல் ஆசிரியை திவ்யா ஆகியோர் இந்த நிகழ்ச்சியின் நடுவர்களாகச் செயல்பட்டார்கள். சங்கத் தலைவர் வினிதா வெங்கடேஷ் கவனத்துடன் திட்டமிட்ட Rotakidz போட்டியும் மகிழ்ச்சியும் நன்கு இணைந்த நிகழ்ச்சியாக இருந்தது, “பூமியின் வருங்காலம் திறமையான, அக்கறையுள்ள கைகளில் இருப்பதை நெகிழ்வுடன் நினைவூட்டியது.” ■




*வலமிருந்து: சங்கத்தலைவர் வினிதா வெங்கடேஷ், உஷா சரோகி, DGND S ரவி மற்றும் நிகழ்ச்சித் தலைவர் பாரதி சரவணன் ஆகியோர், ஒரு பங்கேற்பாளருடனும் அவரது தாயாருடனும்.*




*கிராமப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்களையும் அதற்கான உபகரணங்களையும் விநியோகித்த பிறகு, DG Y கல்யாண் சக்கரவர்த்தியுடன் (மையத்தில்) RC அனகாபள்ளி உறுப்பினர்கள்.*

# பழங்குடியின பெண்களுக்கு உதவும் ரோட்டரி சக்தி

ஜெய்ஸ்ரீ

விசாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள காட்டும் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சிற்றூர்களைச் சேர்ந்த சுமார் 1,250 பெண்கள், RC வைசாக் சுரபி (RID 3020)-ன் முன் முயற்சியான புராஜெக்ட் ரோட்டரி சக்தியின் கீழ், தையல் மற்றும் எம்பிராய்டரியில் மூன்று மாத கால பயிற்சியைப் பெற்று வருகின்றனர்.

ஆந்திரா-ஒடிசா எல்லையில் ஹுக்கும்பேட்டா மண்டலத்தின் மலைப்பகுதிகளில் உள்ள காதும் கிராமம், 'மிகவும் நலிந்த பழங்குடியின சமூகம்' பிரிவில் வகைப்படுத்தப்பட்ட பழங்குடியின குடியேற்றமாகும். "இது சமூக விரோதிகளின் நடமாட்டம் கொண்ட சவாலான நிலப்பரப்பு மற்றும் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லாத பகுதி," என்கிறார் RI மாவட்ட 3020-ன் தொழிற்பயிற்சி சேவைத் தலைவர் சீனிவாச ராவ் வுக்கினா. இவர் இந்திய அரசின் ஸ்கில் இந்தியா மிஷன் (SIM) நோடல் அதிகாரியாகவும், விசாகப்பட்டினம் ஜன் சிக்ஷன் சன்ஸ்தான் (JSS) திட்ட அதிகாரியாகவும் உள்ளார்.

2022 முதல் விசாகப்பட்டினம் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராக உள்ள வுக்கினா, இத்திட்டத்தை வடிவமைத்துச் செயல்படுத்த உதவினார். "கடந்த இரண்டு தசாப்தங்களாக நான் இந்த கிராம மக்களுடன் பணியாற்றியதால் அவர்களின் நம்பிக்கையைப் பெற்றேன். இல்லையெனில், இந்தப் பழங்குடியினர் வெளிநபர்களை எளிதில் நம்பமாட்டார்கள்," என்றார்.

பெண்கள் தங்கள் திறன்களைப் பயிற்சி செய்ய, வைசாக் சுரபி ரோட்டரி சங்கம் தையல் இயந்திரங்கள் மற்றும் துணி, நூல் போன்ற பயிற்சிப் பொருட்களை வழங்கியுள்ளது. ஒரு பயிற்சியாளர் இந்த மலைப்பாங்கான நிலப்பரப்பில் சுமார் 25 கி.மீ தூரம் நடந்து சென்று அந்த கிராமத்தை அடைகிறார். SIM மற்றும் JSS திட்டங்கள் மூலம், பயிற்சியாளரின் ஊதியத்தை வுக்கினா உறுதி செய்கிறார்.

மாவட்டத்தின் ரோட்டரி தொழிற்பயிற்சி மிஷன் திட்டத்தின் கீழ் 500 கிராமங்களைச் சேர்ந்த இரண்டு லட்சம் பெண்கள் தொழிற்பயிற்சிக்காக அடையாளம் காணப்பட்டுள்ளனர், இதற்கு RID 3020 முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் ஆதரவளிக்கின்றன. இதுவரை மாவட்டத்தில் சுமார் 2,000 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. "ஏப்ரல் மாதம் தொடங்கும் அடுத்த கட்டத்தில் மேலும் 1,000 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்," என்றார்.

ரோட்டரியில் சேருவதற்கு முன்பே, கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் சுமார் 2,000 பெண்களுக்கு தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி அளிப்பதற்காக அவர் தனது சொந்தப் பணத்திலிருந்து 2 லட்ச ரூபாயை முதலீடு செய்திருந்தார். "இந்த பெண்கள் இப்போது வெற்றிகரமாக பணம் சம்பாதிக்கிறார்கள். எனது சங்கமும் மற்ற ரோட்டரி சங்கங்களும் அவர்களுக்குத் தேவையான வாய்ப்பு களை இணைக்க உதவுகின்றன," என்று அவர் குறிப்பிடுகிறார்.

குறைந்த தன்னம்பிக்கையுடனும், வருமானம் இல்லாமலும் தையல் வகுப்பில் சேர்ந்த லட்சுமி என்ற இளம் பழங்குடியினப் பெண்ணைப் பற்றிய முக்கியமான உருமாற்றக் கதையை அவர் நினைவு கூர்கிறார். பயிற்சியை முடித்த சில மாதங்களிலேயே, அவர்

பள்ளி சீருடைகள் மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்குத் தேவையான எளிய ஆடைகளைத் தைக்கத் தொடங்கினார். “இன்று தனது குடும்பத்தை ஆதரிக்கும் அளவுக்கு சம்பாதிக்கிறார். சமீபத்தில் நான் அந்த கிராமத்திற்குச் சென்றபோது, அவர் தனது வீட்டில் அமைத்துள்ள சிறிய தையல் பகுதியை என்னிடம் பெருமையுடன் காட்டினார். அந்தத் தருணம் எடுத்த அனைத்து முயற்சிகளையும் பயனுள்ளதாக்கியது.”

அனகாபள்ளி ரோட்டரி சங்கம், கருடபள்ளி என்ற தொலைதூர கிராமத்தில் 1,000 பெண்களுக்கு பயிற்சி அளிக்க ஆதரவளித்து, பயிற்சி தொடர்ச்சியாக நடைபெற கிராம பஞ்சாயத்திற்கு ஆறு தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது. தற்போது நவீன அதிவேக தையல் இயந்திரங்களுடன் உற்பத்திப் பிரிவை அமைத்து பெண்களுக்கான ஆடைகள், நைட்டிகள் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளது; மேலும் பெண்கள் தைத்த பொருட்களை சந்தைப்படுத்தவும் தேவையான மூலப்பொருட்களை வழங்கவும் அந்த சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

தையல் தவிர, கிராமப் பெண்களுக்கு சுத்திகரிப்புப் பொருட்கள், ஜாம்கள், அகர்பத்திகள் மற்றும் மெழுகுவர்த்திகள் தயாரித்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அனகாபள்ளியில் உள்ள ரோட்டரி திறன் மையத்தில் அந்த சங்கம் ஏற்பாடு செய்திருந்த கண்காட்சியை மாவட்ட ஆளுநர் கல்யாண் சக்ரவர்த்தி பார்வையிட்டார், அங்கு கிராமப்புறப் பெண்கள் தாங்கள் கற்றுக்கொண்ட திறன்களை வெளிப்படுத்தினர்.



RC *அனகாபள்ளி ஏற்பாடு செய்த கண்காட்சியை* DG *சக்கரவர்த்தி பார்வையிடுகிறார்.*

பெருந்தொற்று காலத்தில் இந்த முயற்சி எவ்வளவு பயனுள்ளதாக இருந்தது என்பதையும் வுக்கினா நினைவு கூர்கிறார். “2020-ல் கோவிட் அறிவிக்கப்பட்ட இரண்டு நாட்களுக்குள், இந்தத் திட்டத்தில் பயிற்சி பெற்ற 200 கிராமப்புறப் பெண்கள் மாவட்டம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் மூலம் இரண்டு லட்சம் துணி முகக்கவசங்களைத் தைத்து விநியோகித்தனர்,” என்றார்.

இந்தப் பெண்கள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு ஆன்லைன் தளத்தை உருவாக்க தனது அதிகாரப்பூர்வ பதவியைப் பயன்படுத்த அவர் விரும்புகிறார். மேலும், புது தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் அவர்களின் பணிக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்து வருகிறார். இந்த ரோட்டரி திட்டத்தை, நாட்டின் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் கடைக்கோடி மனிதருக்கு அதிகாரமளிக்கும் தொலை நோக்குப் பார்வையுடன் ஒத்துப்போகும் ஒரு மாதிரித் திட்டம் என்று மத்திய திறன் மேம்பாட்டு அமைச்சகம் அங்கீகரித்துள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

“இந்தப் பெண்கள் படிப்படியாக நிதி ரீதியாக சுயநிறைவு அடைவதைப் பார்ப்பது மிகுந்த திருப்தி அளிக்கிறது. ஒரு பெண் தன்னம்பிக்கை பெறும் போது அதன் தாக்கம் முழுக் குடும்பத்திலும் பரவி, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி, குடும்பத்திற்கு ஆரோக்கியமான உணவு மற்றும் பாதுகாப்பான எதிர்காலம் கிடைக்கிறது,” என்று அவர் புன்னகையுடன் கூறுகிறார்.

அவரது சொந்த சங்கமான RC விசாகப்பட்டினம், பழங்குடியினப் பயிற்சியாளர்களின் அடிப்படை எழுத்தறிவிலும் கவனம் செலுத்துகிறது. “ஒரு கிராமத்தில் தொழிற்பயிற்சி தொடங்கும்போது, முதல் இரண்டு வாரங்களுக்கு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆங்கிலம், தெலுங்கு எழுத்துக்கள், எண்கள் மற்றும் அடிப்படை கணிதத்தில் எழுத்தறிவு வகுப்புகளை நடத்துகிறோம்; இது அவர்கள் ஏமாற்றப்படுவதிலிருந்து பாதுகாக்க உதவுகிறது” என்று அவர் விளக்குகிறார். பயிற்சியை முடித்த பிறகு, இந்திய அரசின் வாழ்வாதாரப் பிரிவின் மூலம் அந்தப் பெண்கள் சுயதொழில் வாய்ப்புகளை நோக்கி வழிநடத்தப்படுகிறார்கள்.

ரோட்டரி சங்கங்கள் இந்த கிராமங்களில் அவ்வப்போது மருத்துவ முகாம்களையும் ஒருங்கிணைத்து, பின்னர் தொடர்ச்சியான சுகாதார ஆதரவையும் வழங்குகின்றன.■

RC *வைசாக் சுரபி தலைவர் சத்யஸ்ரீ லட்சுமிதேவி, ஒரு பெண்ணுக்குத் தையல் இயந்திரத்தை வழங்குகிறார். அவருக்கு இடதுபுறத்தில், மாவட்டத் தொழிற்கல்விச் சேவைகள் தலைவர் சீனிவாச ராவ் உக்கினா உள்ளார்.*



# சாத்தியமற்றதைச் சாதிக்க ஒரு குழுவாக இணைந்து செயல்படுங்கள்

ரஷீதா பகத்

"எங்களது சிறுவயதில், அவர் மிகவும் பிஸியான மனிதராக இருந்தார். ரோட்டரி மற்றும் யுபிஎல் (UPL) பணிகளில் மூழ்கியிருப்பார். ஒரு சராசரி தந்தை செலவிடும் நேரத்தை விட மிகக்குறைந்த நேரமே அவர் எங்களுடன் செலவிட்டார். ஆனால் அவர் செலவிட்ட அந்த ஒவ்வொரு நிமிடமும் அர்த்தமுள்ளதாக இருந்தது. யுபிஎல் நிறுவனத்தில் ஒரு மணிநேரம் மதிய உணவு இடைவேளை இருக்கும். அந்த நேரத்தில் அவர் வீட்டுக்கு வருவார். சாப்பிடுவதற்கு முன்பு, எங்கள் வீட்டு வளாகத்தில் 15–20 நிமிடங்கள் எங்களுடன் கிரிக்கெட் விளையாடுவார். அது மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவர் நகைச்சுவையை ரசிப்பவர், தனது பேச்சுகளிலும் அதைச் சேர்ப்பார். அவரது நகைச்சுவை உணர்வு குறும்புத்தனமானது. அது அவ்வப்போது வெளிப்படும். ஒரு தந்தையாக, ஒரு மனிதராக, அவர் மிகவும் உறுதியானவர் மற்றும் ஒரு மாபெரும் ஆளுமை கொண்டவர். எங்கள் குடும்பமே அவரையும், யுபிஎல் மற்றும் ரோட்டரியில் அவர் செய்த பணிகளையும் சுற்றியே இயங்குகிறது. அவர் எப்போதும் நம்பகமானவர். இன்றும் கூட, அவர் எங்களைச் சார்ந்திருப்பதை விட, பிள்ளைகளாகிய நாங்கள்தான் அவரை அதிகம் சார்ந்திருக்கிறோம் என்று நினைக்கிறேன்."

முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜியின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகமான 'டயர்லெஸ்லி யுவர்ஸ்' வெளியீட்டு விழாவில், RID 3141 முன்னாள் ஆளுநர் சந்தீப் அகர்வாலா இந்த பகுதியை வாசித்தார். அவர் பானர்ஜியின் மகள் ரமா சாட்டர்ஜியின் வரிகளை மேற்கோள் காட்டினார். கணேஷ் வஞ்சீஸ்வரன் எழுதியுள்ள இந்தப் புத்தகம், யுனைடெட் பாஸ்பரஸ் மற்றும் ரோட்டரி ஆகிய இரண்டிலும் இந்த ரோட்டரி தூணின் நீண்டகாலப் பயணத்தைத் தொகுத்துக் கூறுகிறது.

பானர்ஜியுடன் கேள்வி-பதில் அமர்வில் ஈடுபட்ட அகர்வாலா, வாபியின் தொழில் மையத்திலிருந்து சர்வதேச ரோட்டரி தலைவர் பதவி வரையிலான பானர்ஜியின் பயணம் விதிவிலக்கானது என்றும், "சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கையின் வரைபடம்



இது” என்றும் கூறினார், இது இந்தப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலேயே, இந்தப் புத்தகம் தனது யோசனை அல்ல, தனது சங்க உறுப்பினர்களின் யோசனை என்று பானர்ஜி தெளிவுபடுத்தினார். இதை எழுதுவதற்காக ஆசிரியர் அவரை சில முறையும், அவரது இரண்டு குழந்தைகள், நண்பர்கள், ரோட்டேரியர்கள் மற்றும் வணிக கூட்டாளிகளையும் நேர்காணல் செய்துள்ளார். இந்தப் புத்தகத்தின் மற்றும் அவரது வாழ்க்கை கதையின் மையச் செய்தி என்னவென்றால், “நீங்கள் ஒரு குழுவாகச் செயல் பட்டால், சாத்தியமற்றதையும் சாதிக்க முடியும்” என்பதுதான்.

அவரது வாழ்க்கை மற்றும் பணியின் இரண்டு அடிப்படை மந்திரங்கள், இரண்டு சர்வதேச ரோட்டரி தலைவர்களின் கருப்பொருள்களில் சிறப்பாகத் தொகுக்கப்பட்டுள்ளன... கற்பனை செய்யுங்கள் (“அனைத்து ரோட்டரி தலைமைகளிலும் நிறைய கற்பனைத் திறன் உள்ளது”) மற்றும் நீங்கள் கற்பனை செய்தவுடன், உங்கள் கனவுகளை நனவாக்குங்கள். கனவுகளை நனவாக்குங்கள் என்பது முன்னாள் RI தலைவர் D K லீ-யின் கருப்பொருளாக இருந்தது, இமேஜின் ரோட்டரி என்பது ஜெனிபர் ஜோன்ஸின் கருப்பொருளாக இருந்தது.

இந்தியாவில் ரோட்டரியின் வளர்ச்சி குறித்து பானர்ஜி கூறுகையில், “இந்தியா கற்பனை செய்ய முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. அமெரிக்காவில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இருக்கலாம் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் TRF-க்கு அதிக பணம் கொடுக்கலாம், ஆனால் நாம் இரண்டிலும் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். இந்தியாவில் உறுப்பினர்களின் வளர்ச்சி வியக்கத்தக்கது. அதை நாம் ஆண்டுதோறும் தக்கவைத்துக் கொண்டுள்ளோம். சில நேரங்களில் இதை நாம் சிறிது கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் உணர்கிறேன், ஏனெனில் அது கையை மீறிச் செல்கிறது... ஆனால் நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை.”

அவர் TRF அறங்காவலர் தலைவராக இருந்த ஆண்டை நினைவு கூர்ந்த பானர்ஜி, முந்தைய ஆண்டில் 230 மில்லியன் டாலராக இருந்த அறக்கட்டளைக்கான நிதி, அந்த ஆண்டில் முதன்முறையாக 300 மில்லியன் டாலராக உயர்ந்தது என்றார். “இந்த எண்ணிக்கை அடுத்த இரண்டு ஆண்டுகளில், அல்லது அதற்கு முன்பே 500 மில்லியன் டாலர்களை நோக்கிச் செல்லக்கூடும்.”

போலியோ ஒழிப்பு மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பானர்ஜி கூறுகையில், போலியோ முற்றிலும் ஒழிக்கப்படும் வரை, ரோட்டேரியர்கள் நாம் செய்து வருவது போலவே உலக குழந்தைகளுக்குத் தடையின்றித் தொடர்ந்து தடுப்பூசி போட வேண்டும். ஏனெனில் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் இன்னும் போலியோ இருந்தால், அது எப்போது வேண்டுமானாலும் மீண்டும் வரலாம்.

எழுத்தறிவு, நீர் மேலாண்மை மற்றும் சுகாதாரம் ஆகியவை ரோட்டரியின் பிற முக்கிய குறிக்கோள்கள், இதில் ஏற்கனவே நிறைய பணிகள் நடந்து வருகின்றன. மேலும் “ரோட்டரி இப்போது உலகம் முழுவதும் அமைதி முயற்சிகளையும் கவனித்து வருகிறது.”

சர்வதேச தலைவராக இருந்த போது கடினமான தருணங்களைப் பற்றி விவரிக்குமாறு அகர்வாலா



*இடமிருந்து: RC வாபியின் உறுப்பினர்களான குருஷித் ஷா, பிரஃபுல் தவானி மற்றும் ராம் ஜனம் சிங்; PDG சந்தீப் அகர்வாலா, RC பாம்பே தலைவர் பிமல் மேத்தா, PRIP கல்யாண் பானர்ஜி, TRF அறங்காவலர்-தேர்வு A S வெங்கடேஷ் மற்றும் DG மனிஷ் மோட்வானி ஆகியோர் புத்தக வெளியீட்டு விழாவில்.*

# RC பம்பாய்-க்கு உயரிய பாராட்டு

RID 3141 முன்னாள் ஆளுநர் சந்தீப் அகர்வாலா, ரோட்டரியின் உலகளாவிய நோக்கம் மற்றும் பணியை மேம்படுத்துவதில் RC பம்பாய் போன்ற தனிப்பட்ட சங்கங்கள் என்ன பங்கு வகிக்க முடியும் என்று கேட்டபோது, மூத்த தலைவர் கல்யாண் பானர்ஜி புன்னகையுடன் கூறினார்: “இதற்குப் பதில் சொல்வது மிகவும் எளிது. உலகின் சிறந்த ரோட்டரி சங்கம் ரோட்டரி கிளப் ஆஃப் பம்பாய் என்று நான் உலகம் முழுவதும் சொல்லியிருக்கிறேன். அதை நான் எங்கேயும் சொல்வேன்! உங்களிடம் மிகவும் சிறந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள உறுப்பினர்கள் உள்ளனர்... அவர்கள் கையில் எடுத்த பணியில் முற்றிலும் அர்ப்பணிப்புடன் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொள்கிறார்கள்.

உங்களிடம் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் இல்லையென்றாலும், ஆண்டுதோறும் ரோட்டரி அறக்கட்டளைக்கு நீங்கள் வழங்கும் ஆதரவு உலகிலேயே மிக அதிகம். நீங்கள் செய்யும் திட்டங்கள், நீங்கள் கட்டிய வீடுகள்... சிறிய வீடுகள், தங்குமிடங்கள்... அவை அனைத்தும் ஆச்சரியமானவை. நீங்கள் சிறிய மற்றும் பெரிய திட்டங்கள் இரண்டையும் செய்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்... மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் அடுத்த தலைமுறையினருடன் உங்கள் பணி அற்புதம்.

இங்குள்ள இளைஞர்களின் உற்சாகத்தை நான் பார்த்திருக்கிறேன்; எனவே, மற்ற சங்கங்கள் என்ன செய்ய முடியும் என்றால், நீங்கள் செய்வதையே அவர்களது சூழலுக்கு ஏற்ற அளவில் செய்யலாம். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம்... உங்கள் அர்ப்பணிப்பு, ஈடுபாடு ஆகியவற்றைப் பின்பற்றுவதுதான், அதுவே ரோட்டரிக்குத் தேவை.”

RC பம்பாய் இந்தியாவின் பழமையான சங்கங்களில் ஒன்றாகும், இது 1929-ல் தொடங்கப்பட்டது மற்றும் இன்னும் சில ஆண்டுகளில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாட உள்ளது.

PRIP கல்யாண் பானர்ஜி, PDG சந்திப் அகர்வாலாவுடன் உரையாடுகிறார்.






கேட்டபோது, பல தரப்பிலிருந்து எதிர்ப்பு இருந்த போதிலும் குழந்தைகளுக்குப் போலியோ சொட்டு மருந்து வழங்கப் படுவதை உறுதி செய்யப் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் சென்றதை அவர் குறிப்பிட்டார். பாகிஸ்தானில் ஜனாதிபதியைச் சந்தித்த பிறகு, “எதிர்க்கட்சித் தலைவரைச் சென்று சந்தியுங்கள்” என்று அவர் கூறினார். ஆனால் அவர் அப்போது இல்லை, அதிகாலை 2 மணிக்குத்தான் வருவதாக கூறப்பட்டது. “எனவே நாங்கள் அவருக்காகக் காத்திருந்தோம்; அதிகாலை 2 மணிக்கு அவரைச் சந்தித்து உங்கள் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட வேண்டும் என்று சொன்னோம். அவர் சொன்னார்: எங்களுக்குப் பிரச்சினையில்லை. ஆனால் அமெரிக்கா எங்கள் மீது குண்டு வீசுவதை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? முதலில் எங்களுக்குச் சிறிது அமைதியைக் கொடுங்கள். அதன் பிறகு, நாங்கள் உங்கள் பேச்சைக் கேட்கிறோம்.”!

ஆனால் அவர் சர்வதேச தலைவராகச் செய்த மிகவும் ஆபத்தான காரியம், ஜனாதிபதி ஹமீத் கர்சாயைச் சந்திக்க ஆப்கானிஸ்தானுக்குச் சென்றதுதான். அந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. ரோட்டரியிலிருந்து யாரும் அவருடன் வரமாட்டார்கள்,




*இடமிருந்து:* PDG *அகர்வாலா, கணேஷ் வான்சீஸ்வரன்* (PRIP *பானர்ஜியின் வாழ்க்கை வரலாற்று நூலான* 'Tirelessly Yours'-*ன் ஆசிரியர்), சங்கத்தலைவர் மேத்தா, முன்னாள்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி,* PRIP *பானர்ஜி,* PRID *அசோக் மகாஜன், அறங்காவலர் எலக்ட்* A S *வெங்கடேஷ் மற்றும்* DG *மோட்வானி.*

அவர் தனியாகத்தான் செல்ல வேண்டும் என்று எவன்ஸ்டனில் உள்ள ரோட்டரி பணியாளர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டனர். "சரி, நான் தனியாகப் போகிறேன், ஆனால் அவரை எப்படிச் சந்திப்பேன் என்று கேட்டேன். ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க ராணுவம் ஜனாதிபதி கர்சாயைச் சந்திக்க உதவும் என்று என்னிடம் கூறப்பட்டது. ஆப்கானிஸ்தானில் என்ன நடக்கும் என்று தெரியாது என்று கூறி எனது மனைவி பினோட்டாவை பம்பாய்க்குத் திருப்பி அனுப்பினார்கள்! தான் ஏன் திருப்பி அனுப்பப்பட்டோம் என்று அவருக்கு அப்போது தெரியாது! எப்படியோ, நான் பாகிஸ்தான் வழியாக ஆப்கானிஸ்தான் சென்றேன். அங்கிருந்த சூழல் மிகவும் பயமுறுத்துவதாக இருந்தது."

தான் தங்கியிருந்த விருந்தினர் இல்லம் ஒரு சாதாரண ஹோட்டலைப் போன்றது அல்ல என்று பானர்ஜி நினைவு கூர்ந்தார். "அது வெறும் ஒரு அறைதான். கதவு மற்றும் ஜன்னல்களைப் பூட்டியே வைத்திருக்குமாறும், யாராவது தட்டினாலும் திறக்க வேண்டாம், வெளியே செல்ல வேண்டாம் என்றும் கூறினார்கள். மூன்றாவது நாள், என்னை ராணுவத் தலைமையகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே ஒரு பிரிகேடியர் என்னை ஒரு ஜீப்பில் ஏற்றிக் கொண்டு காபூல் வழியாக அழைத்துச் சென்றார். கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன, ஒவ்வொரு கட்டிடத்தின் உச்சியிலும் துப்பாக்கி ஏந்திய ராணுவ வீரர்கள் நின்றிருந்தனர். அது ஒரு போரினால் பாதிக்கப்பட்ட நகரம். ஒவ்வொரு இடத்திலும் பாதுகாப்புச் சோதனையுடன் மூன்று நுழைவாயில்களைக் கடக்க வேண்டியிருந்தது. இறுதியாக, கர்சாயின் அறையை அடைந்தோம். அவர் உள்ளே வந்து, வரவேற்கிறோம், இங்கு வந்ததற்கு நன்றி என்று கூறினார். அவ்வளவுதான்." வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன, ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை என்று அவர் வருத்தத்துடன் கூறினார்.

இளம் தலைமுறை ரோட்டேரியர்கள் குறித்து பானர்ஜி கூறுகையில், மூத்த ரோட்டேரியர்கள் இளைஞர்கள் சற்று வித்தியாசமாகச் செயல்படுவார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கு அதற்கான இடத்தைக் கொடுக்க வேண்டும் என்றார். ஆனால் இளம் ரோட்டேரியர்களும் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்: "சங்கத்தில் சேர்ந்த பிறகு, அவர்கள் தாங்களாகவே முற்றிலும் மாறுபட்ட மற்றும் புதிய ஒன்றை ஆரம்பிக்க முடியாது. சங்கங்கள் செய்து வரும் பணிகளையும், அமைக்கப்பட்ட பாரம்பரியங்களையும் அவர்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். ஒரு புதிய சங்கத் தலைவராக, நீங்கள் உங்களது சொந்த புதிய திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் சென்ற பிறகு, நீங்கள் செய்ததை யாரும் நினைவில் கொள்ள மாட்டார்கள். உங்கள் சங்கம் செய்து வரும் பணிகளைத் தொடருங்கள், நீங்கள் சென்ற பிறகும் அது நீடிக்கும் வகையில் செயல்படுங்கள்."

படங்கள்: ரஷீதா பகத்



*இடமிருந்து: திஷா செயலாளர் அகில் மிஸ்ரா, நிகழ்வு தலைவர் P கோபாலகிருஷ்ணன் மற்றும் அவரது மனைவி நீலாவதி, சுமதி மற்றும் RI இயக்குனர் M முருகானந்தம், PRID-கள் C பாஸ்கர் மற்றும் P T பிரபாகர், RIDE குர்ஜித் சிங் சிகான் மற்றும் பாசு தேவ் கோலியன், PDG ஆனந்த ஜோதி மற்றும் TRF அறங்காவலர் PRID A S வெங்கடேஷ்.*

# தலைமைத்துவத்துக்கான பாதையை அமைத்தல்

ஜெய்ஸ்ரீ

“ரோட்டரியின் அழகு அதன் தலைமைத்துவ மாற்றத்தில் அடங்கியுள்ளது. 120 ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் பொருத்தமானவர்களாக இருக்கிறோம்” என்று RI இயக்குநர் M முருகானந்தம் கோவையில் நடைபெற்ற மண்டலங்கள் 5 மற்றும் 6-ன் உள்வரும் மாவட்டத் தலைவர்களுக்கான மூன்று நாள் திஷா கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். 16 வயதில் ஒரு ரோட்ராக்டராக இருந்த தனது பயணத்தை விவரித்த அவர், தனிநபர்களுக்கு அதிகாரம் அளிப்பதில்தான் ரோட்டரியின் பலம் அடங்கியுள்ளது என்பதை எடுத்துரைத்தார். “பொறுப்புகளை ஏற்பதுதான் உங்களை நீங்கள் உயர்த்திக் கொள்ள ஒரேவழி. நீங்கள் உங்கள் சங்கத்தையும், உங்கள் மாவட்டத்தையும் சமூகத்தையும் உயர்த்துகிறீர்கள்” என்று அவர் கூறினார்.

சிவப்பு-பச்சை-மஞ்சள் பகுப் பாய்வின் மூலம், தரவுகளின் அடிப் படையிலான ஒரு அணுகு முறையை முன்வைத்த அவர், 25-க்கும் குறைவான உறுப்பினர்கள் கொண்ட சங்கங்கள் சிவப்பு பிரிவிலும், 25-லிருந்து 50 மஞ்சள் பிரிவிலும், 50 உறுப்பினர்களுக்கு மேல் உள்ள சங்கங்கள் பச்சை பிரிவிலும் வரும் என்று அவர் சுட்டிக்காட்டினார். “நாம் ஒரு மாயையில் வாழ்கிறோம் நாம் வளர்ந்துவருவதாக நினைக்கிறோம். ஆனால், உண்மையான தரவுகளின்படி இந்தியாவில் 42 சதவீத ரோட்டரி சங்கங்கள் சிவப்பு பிரிவிலும், 35 சதவீதம் மஞ்சள் பிரிவிலும், 23 சதவீதம் பச்சை பிரிவிலும் உள்ளன.”



சங்கங்களை சிவப்புப் பிரிவிலிருந்து மஞ்சள் பிரிவுக்கும், மஞ்சள் பிரிவை பச்சைப் பிரிவுக்கும் கொண்டு செல்ல மாவட்ட தலைவர்கள் பணியாற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இதற்காக எளிமையான ஆனால் எட்டக் கூடிய 1:2:3 சூத்திரத்தை அவர் முன்மொழிந்தார். "ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒரு ரோட்டேரியன், 2 ரோட்ராக்டர்கள் மற்றும் 3 இன்டராக் டர்களைச் சேர்க்க வேண்டும். இதேபோல ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் குறைந்தது 2 ரோட்ராக்ட் மற்றும் 3 இன்டராக்ட் சங்கங்களை தொடங்க இலக்கு நிர்ணயிக்க வேண்டும்". பல சங்கங்கள் ஒரு ரோட்ராக்ட் அல்லது ஒரு இன்டராக்ட் சங்கத்தைக்கூட புதிதாக தொடங்கவில்லை என்று குறிப்பிட்ட அவர், "அடுத்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ரோட்டரி வளர்வதை காண விரும்பினால், நாம் நமது அமைப்பில் இளைஞர்களை அறிமுகப்படுத்த வேண்டும்" என்றார்.

ரோட்டேரியன்கள் TRF-க்கு தாராளமாக நிதிப் பங்களிப்புச் செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று பிரதிநிதிகளை அவர் வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். "அதிக திட்டங்களைச் செயல்படுத்துங்கள். ஆனால் வலுவான நிர்வாகத்தை கொண்டிருங்கள்" என்று கூறிய அவர், அரசு அமைப்புகள் மற்றும் கார்ப்பொரேட் நிறுவனங்களுடன் வலுவான உறவு வைத்திருக்குமாறு யோசனை தெரிவித்தார்.

சங்கங்களை சிறப்பாக நிர்வகிக்க வசதியாக அவற்றை இரண்டாகப் பிரிப்பது குறித்து உள்வரும் தலைவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று RI இயக்குநர் K P நாகேஷ் பரிந்துரைத்தார். பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், 15 உறுப்பினர்களுக்கு குறைவாக உள்ள சங்கங்களை மூடிவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். "இதுபோன்ற சங்கங்கள் ரோட்டரி மீதான நன்மதிப்பை குறைப்பவை. ஒரு சங்கம் துடிப்புள்ளதாகவும் பயனுள்ளதாகவும் செயல்பட வேண்டுமானால் குறைந்த பட்சம் 40 உறுப்பினர்களாவது இருக்கவேண்டும்" என்று அவர் கூறினார். ரோட்டரி தனது 125-வது ஆண்டுவிழாவை 2030-ல் கொண்டாடும் போது உலகளாவிய அளவில் உறுப்பினர்கள் எண்ணிக்கை 1.25 மில்லியனாக இருக்க வேண்டும் என RI இலக்கு நிர்ணயித்துள்ளது. அதில் நமது பங்களிப்பு முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

TRF அறங்காவலராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள A S வெங்கடேஷ், தலைமைத்துவத்தை மறுவரை செய்து, "ரோட்டரியில் பதவிகளுக்கு எந்த மதிப்பும் இல்லை. ஆனால், அவை மாற்றத்தை ஏற்படுத்தவும், பயனுள்ள செயல்களைச் செய்யவும் உங்களுக்கு வாய்ப்பு தருகிறது" என்றார்.

திஷா, "தலைமைத்துவத்துக்கான ஆயத்த மேடை" என்று வர்ணித்தார் PRID C பாஸ்கர். "ரோட்டரி தலைமைத்துவம் என்பது தனிநபர்கள் பற்றியது அல்ல, அது ஒன்றிணைந்து செயல்படும் குழுவைப் போன்றது". இலக்குகளை நிர்ணயித்தால் மட்டும் போதாது. அவற்றை தொடர்ந்து ஆய்வு செய்து கண்காணிப்பதும் முக்கியமானது என்று அவர் நினைவுபடுத்தினார்.

மும்பையை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தொழில் முனைவோர் ஹரக்சந்த் சாவ்லா, தினமும் புற்றுநோயாளிகள் 1,000 பேருக்கு உணவளித்து வரும் கதையை குறிப்பிட்டு பேசிய PRID P T பிரபாகர், "வசதியற்ற ஒருவரால் இதைச் செய்ய முடிகிறது என்றால், ரோட்டேரியன்களாகிய நம்மால் என்னவெல்லாம் செய்யமுடியும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்! சாத்தியமற்ற இலக்குகளை நிர்ணயித்து அவற்றை சாத்தியமாக்குங்கள்" என்றார்.

RIDE வாசுதேவ் கோல்யான், "நாம் எத்தனை திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம் என்பதை கணக்கிடக்கூடாது. எத்தனை பேர் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தான் கணக்கிட வேண்டும். உறுப்பினர்கைத் தக்கவைக்காமல் உறுப்பினர் வளர்ச்சி முழுமையாக பூர்த்தியாகாது" என்று கூறினார்.

RIDE குர்ஜீத் சிங் சிகான், ரோட்டரியின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் விரிவாக்கத்தின் ஆறு பரிமாணங்களை கோடிட்டு காட்டினார். அவை உறுப்பினர் எண்ணிக்கை, மக்கள்தொகை, புவியியல், கூட்டாண்மைகள், டிஜிட்டல் வருகை மற்றும் தலைமைத்துவ வரிசை. உறுப்பினர் எண்ணிக்கை என்பது வெறும் எண் அல்ல, அது சேவை செய்வதற்கான ரோட்டரியின் திறன் என்றார்.

பிரதிநிதித்துவம் இல்லாத பகுதிகளில் ரோட்டரி சங்கங்களை நிறுவுமாறு மாவட்டத் தலைவர்களை அவர் வலியுறுத்தினார். நாம் இருப்பது வெளிஉலகுக்கு தெரிய வேண்டும். ரோட்டரி செய்யும் பணி வெளி உலகிற்கு தெரியாமல் இருந்தால் அதன் தாக்கம் குறைவாகவே இருக்கும். என்றார்.

ரோட்டரியின் தலைமைத்துவத்தை

விரிவுபடுத்துவது பற்றி அவர் கூறுகையில், “இளம் தலைவர்களுக்கு அதிகாரம் அளித்து, புதுமைகளை ஊக்குவித்து, புதிய யோசனைகளை ஏற்று, எதிர்கால மாவட்ட மற்றும் சங்கத்தின் தலைவர்களுக்கு வழிகாட்டும் சங்கங்கள்தான் வெற்றி பெறுகின்றன” என்றார்.

முன்னதாக கருத்தரங்கில் பங்கேற்ற பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய திஷா தலைவர் PDG P கோபாலகிருஷ்ணன், “திஷா என்பது நமது பணி என்ன என்பதைப் புரிந்துகொள்வது, நிலைமையை ஆராய்வது மற்றும் அர்த்தமுள்ள, விருப்பமான லட்சிய இலக்குகளை நிர்ணயிப்பது. சாதனைகள் எப்போதும் இலட்சிய இலக்குகளிலிருந்தே தொடங்குகின்றன” என்றார்.■




*இடமிருந்து: திஷா தலைவர் கோபாலகிருஷ்ணன், RI இயக்குநர்கள் K P நாகேஷ் மற்றும் M முருகானந்தம்.*

Rotary PEOPLE OF ACTION

# வலுவான பல்லுக்கு ஃப்ளூரைட்

ரோட்டரி செய்திக்குழு

RI மாவட்டம் 3011-ஐ சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் குழந்தைகளின் பற்சிதைவைத் தடுக்க உதவுவதற்காகச் சிறப்பு ஃப்ளூரைட் வழங்கல் முகாம்களை நடத்தின. “வாய் நலத்தில் ஃப்ளூரைட் ஆற்றும் முதன்மைப் பங்கைப் பலர் அறிந்திருப்பதில்லை. அது பல்லை வலுவாக்குகிறது, பற்குழிகளைத் தடுக்கிறது, தொடக்கப் பற்சிதைவைப் பழுது பார்க்கவும் உதவுகிறது” என்றார் DG ரவி குக்னானி. இந்த விழிப்புணர்வு, செயல்படுத்தல் முன்னெடுப்புகள் இந்த மாவட்டம் முழுவதும் இளம் புன்னகைகளைப் பாதுகாப்பதற்கான கவனமான மற்றும் தாக்கம் நிறைந்த முயற்சியாக மாறியிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.



*டெல்லியில் நடைபெற்ற பல் மருத்துவமுகாமில் பரிசோதிக்கப்படும் ஒரு குழந்தை.*

சமீபத்தில், டில்லி ஹைட்ஸ் மற்றும் டில்லி சஃப்தார்ஜங் ரோட்டரி சங்கங்கள் நஜாஃப்கர்ஹில் உள்ள சோஷியல் விஷன் சிறப்புப் பள்ளியில் நடத்திய ஒரு முகாமில், சிறப்புத் தேவைகளுள்ள 65 குழந்தைகள் பலன் பெற்றார்கள். ஃப்ளூரைட் பல்லின்மீது நேரடியாக வழங்கப்பட்டு எனாமலை வலுவாக்கியது, பற்குழி ஆபத்தைக் குறைத்தது.

“செயல்திறனோடு பல் தேய்க்காத குழந்தைகளுக்கு ஃப்ளூரைட் பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுகிறது,” என்றார். இந்த மாவட்டத்தின் பல் தூய்மை மற்றும் விழிப்புணர்வுத் தலைவர், பல் அறுவைச் சிகிச்சை வல்லுனர் Dr பிரியா ஓபராய்.■

# வட கேரளத்தில் மாணவர்களுக்குப் பயன் தருகிற நடமாடும் கண் மருத்தகம்

ரோட்டரி செய்திக்குழு

RC மெட்ரோ கோலாலம்பூர், RID 3300, ஆதரவிலான ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக, நடமாடும் பார்வை என்ற பெயரிலான நடமாடும் கண் மருந்தகம் ஒன்றை RC பையனூர், RID 3204 தொடங்கியுள்ளது. இந்த மருந்தகம் வட கேரளத்தின் காசர்கோடு, கண்ணூர் மாவட்டங்களில் உள்ள மாணவர்கள், ஏழைகளுக்குக் கண் பராமரிப்புச் சேவைகளை வழங்கும்.

எல்லா வசதிகளையும் கொண்ட இந்த வேனின் மதிப்பு ரூ.38 லட்சம். இது பையனூர் கண் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. இதன் முதல் பரிசோதனை முகாம் பெரும்பாலும் அரசு உயர் தொடக்கப்பள்ளி மாணவர் களுக்காக நடத்தப்பட்டது.

இந்த முன்னெடுப்பு காசர்கோட்டில் 778 பள்ளிகள், கண்ணூரில் 1,608 பள்ளிகள் எனச் சுமார் 5.2 லட்சம் மாணவர்களுக்குப் பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நடமாடும் மருந்தகத்தில் கண் மருத்துவர்கள், கண்களைப் பரிசோதிப்போர், ஆதரவாளர்களைக் கொண்ட குழு உள்ளது. இதில் நவீன நோய் கண்டறிதல் கருவிகளும், மூக்குக் கண்ணாடிகளை வழங்கும் ஒரு நிலையமும் உள்ளன. இந்த வேன் பள்ளிப் பரிசோதனைகளைச் செய்வதுடன், கிராமப் பகுதிகளில் மூத்த குடிமக்களுக்கான இலவசக் கண் முகாம்களை நடத்தவும் பயன்படுத்தப்படும்.

இந்தத் திட்டம் இந்தச் சங்கத்தின் முன்னாள் தலைவர் P சாஜித் தலைமையில் செயல்படுத்தப்பட்டது. சங்க உறுப்பினர் CR நம்பியார் செயல்படுத்தல் குழுவுக்குத் தலைமை தாங்கினார். “இந்த முன்னெடுப்பு பள்ளிக் குழந்தைகளிடையில் தடுக்கக் கூடிய பார்வைச் சிக்கல்களைக் கையாள்வதில் ஒரு குறிப்பிடக்கூடிய முன்னெடுப்பாகும். இது கண் பராமரிப்புச் சேவைகளுக்கான அணுகலைக் கிராமப்புறக் கேரளத்துக்கு விரிவுபடுத்துகிறது” என்றார் நம்பியார்.

DG சந்தோஷ் ஸ்ரீதர், பையனூர் MLA TI மதுசூதனன் இந்த வேனுக்கான திறவுகோல்களைப் பையனூர் கண் அறக்கட்டளை இயக்குநர் Dr K சுகுமாரனிடம் வழங்கினார்கள். நகராட்சி அலுவலர்கள், ரோட்டரித் தலைவர்கள், நலப்பராமரிப்புப் பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஆகஸ்ட் 2025-ல் தொடங்கப்பட்ட இந்த வேனில் 63-க்கும் மேற்பட்ட பரிசோதனை முகாம்கள் நடத்தப் பட்டுள்ளன, சுமார் 15,000 மாணவர்கள் இதன்மூலம் பலன் பெற்றுள்ளார்கள். ஒவ்வொரு மாதமும் சுமார் 15 முதல் 18 முகாம்கள் நடத்தப்படும். RC பையனூர் உறுப்பினர்கள், பையனூர் கண் அறக்கட்டளை உறுப்பினர்களைக் கொண்ட இணைச் செயல்பாட்டுக் குழு ஒன்று இதை ஒருங்கிணைக்கும்.■




*ஒரு பள்ளியில் நிறுத்தப்பட்டுள்ள* **Vision on Wheels** *நடமாடும் மருத்துவ நிலையத்தில் மாணவர்கள் கண் பரிசோதனை செய்துகொள்கின்றனர்.*

# வெங்கியுடன் ஒரு உரையாடல்

**ரஷீதா பகத்**

*"TRF செயல்படுவதற்கும் முடிவெடுப்பதற்கும் சிறிது காலம் எடுத்துக்கொள்ளக்கூடும்; ஆயினும், நெருக்கடி காலங்கள், அவசர நிலைகள் அல்லது உடனடித் தேவைகளின்போது அது மிக விரைவாகச் செயல்படுகிறது," என்று, RC Bombay ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில், RID 3141-ன் PDG சந்தீப் அகர்வாலாவுடன் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின்போது, TRF-ன் புதிய அறங்காவலர் A S வெங்கடேஷ் தெரிவித்தார்.*

**சந்தீப் அகர்வாலா:** காலநிலை மாற்றம் அல்லது பெருந்தொற்றுக்குப் பிந்தைய மீட்பு போன்ற வளர்ந்து வரும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள, ரோட்டரி அறக்கட்டளை தனது நிதியுதவி முன்னுரிமைகளை எவ்வாறு மாற்றியமைக்கிறது? இவை தற்போதுள்ள ஏழு முக்கியப் பகுதிகளில் சரியாகப் பொருந்தாமல் இருக்கக்கூடும் அல்லவா?

**A S வெங்கடேஷ்:** தகவமைப்பு என்பது எங்களது செயல் திட்டத்தின் முக்கியப் பகுதிகளில் ஒன்றாகும்; வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப எங்களை மாற்றிக்கொள்ளும் திறன் எங்களிடம் உள்ளது. இருப்பினும், ரோட்டரி அறக்கட்டளை என்பது ஒரு யானையைப் போன்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, அது நகர நேரம் எடுக்கும். இது வேகமாகத் திரும்பக்கூடிய சிறுத்தை அல்ல. நாம் 200-க்கும் மேற்பட்ட நாடுகளில், 12 லட்சம் உறுப்பினர்களுடன் ஒரு பெரிய அமைப்பாக இருப்பதால், மாற்றங்களைச் செய்ய நேரம் எடுக்கும்.

ஆனால் நெருக்கடி காலங்களிலோ, அவசரத் தேவைகளின் போதோ நாங்கள் ஒருபோதும் பின்தங்கியதில்லை. உதாரணமாக, கோவிட் காலத்திற்குப் பிறகு, உடனடியாக கோவிட் நிதியுதவிகளை வழங்கினோம். கிட்டத்தட்ட 175 மாவட்டங்களுக்கு உடனடியாக அந்த நிதிகள் சென்றடைந்தன. அதேபோல், உக்ரைனுக்காக அரசியல் காரணங்கள் இன்றி, மனிதாபிமான அடிப்படையில் ஒரு நிதியை உருவாக்கினோம்.

நீங்கள் குறிப்பிட்ட முக்கியப் பகுதிகளைப் பொறுத்தவரை, உண்மையைச் சொல்வதானால், கட்டிடம் கட்டுவதைத் தவிர, மற்ற எந்தவொரு திட்டமும் இந்த ஏழு பகுதிகளுக்குள் அடங்காமல் போனதை நான் பார்த்ததில்லை.

*இடமிருந்து: PDG சந்திப் அகர்வாலா, PRIP கல்யாண் பானர்ஜி, TRF அறங்காவலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட A S வெங்கடேஷ், DG மனிஷ் மோட்வானி மற்றும் RC பம்பாய் தலைவர் பிமல் மேத்தா.*



நீங்கள் குறிப்பிட்ட காலநிலை மாற்றம் கூட சுற்றுச்சூழல் பகுதிக்குள் அடங்கிவிடும்.

கட்டிடம் கட்டுவதைத் தவிர, ஒரு திட்டம் இந்தப் பகுதிகளில் பொருந்த வில்லை என்று நீங்கள் கருதினால், அதை அறங்காவலர்களிடம் கொண்டு சென்று தேவைப்பட்டால் புதிய பகுதியை உருவாக்க நான் தயாராக இருக்கிறேன். மனிதாபிமானத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதே எங்களது நோக்கம்; அதற்கு என்ன வேண்டுமானாலும் செய்வோம்.

**சந்தீப்:** புதிய மற்றும் இளைய உறுப்பினர்களுக்கு, குறிப்பாக டிஜிட்டல் முறையில் செயல்படுபவர் களுக்கு, நிதியுதவிகளின் தாக்கத்தை எவ்வாறு கொண்டு செல்கிறீர்கள்? உள்ளூர் நிதி திரட்டலை உலகளாவிய முடிவுகளுடன் நேரடியாக இணைக்க அவர்களுக்கு அறக்கட்டளை எவ்வாறு உதவுகிறது?

**A S வெங்கடேஷ்:** எந்தவொரு ரோட்டேரியருக்கும் ரோட்டரியிலோ அல்லது அறக்கட்டளையிலோ ஈடுபடுவதற்கு நிதி திரட்டுவது தொடக்கப்புள்ளி அல்ல. ஒரு திட்டத்தின் அங்கமாக இருப்பதே ஈடுபாட்டின் தொடக்கமாக இருக்க வேண்டும். நிதி திரட்டுவது என்பது நீங்கள் ஒரு திட்டத்தில் ஈடுபட்டு, அது சமூகத்திற்கும் பயனாளிகளுக்கும் ஏற்படுத்தும் மாற்றத்தை நேரில் அனுபவிக்கும்போது தானாகவே வரும். எனவே, ஏதாவது ஒரு செயலில் ஈடுபடுவதே ஆரம்பப் புள்ளியாக இருக்க வேண்டும்.

இளைய தலைமுறை யினருக்கு ஒரு திட்டத்தில் பங்கு வகிக்க வாய்ப்பளியுங்கள். “எனது திட்டம்” என்ற உணர்வோடு மாற்றத்தை ஏற்படுத்துவதன் மகிழ்ச்சியை அவர்கள் அனுபவிக்கட்டும். நிதி திரட்டுவது என்பது அதன் பிறகு தானாக நடக்கும்.

**சந்தீப்:** புதிய உறுப்பினர்களிடமும் பொதுமக்களிடமும் ரோட்டரி அறக்கட்டளையின் மதிப்பை சிறப்பாக எடுத்துரைக்க உறுப்பினர்களுக்கு அறக்கட்டளை எவ்வாறு உதவ முடியும்? போலியோவைத் தவிர, அறங்காவலர்களுக்குப் பிடித்த மற்ற வெற்றிக் கதைகள் என்ன?

**A S வெங்கடேஷ்:** போலியோ என்பது ரோட்டரியின் வெற்றிக் கதை, ஆனால் அது ஒரு தனிநபரின் வெற்றிக் கதை அல்ல. எது என்னை பாதித்ததோ அல்லது எது எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தியதோ அதைத்தான் நான் எனது குழந்தைகளிடமோ அல்லது பேரக்குழந்தைகளிடமோ சொல்ல விரும்புவேன்.

குளோபல் கிராண்ட்ஸ் முறைக்கு முன்பு மேட்சிங் கிராண்ட்ஸ் இருந்தது. அப்போது சென்னையில் நடந்த ஒரு சிறிய நிகழ்ச்சியில் எனது சங்கம் சார்பில் மாணவர்களுக்கு 50 பள்ளி பெஞ்சுகள் வழங்கப்பட்டன. அது எனது ரோட்டரி பயணத்தின் ஆரம்ப நாட்கள்; எனக்கு அறக்கட்டளை அல்லது நிதியுதவி பற்றி எதுவும் தெரியாது. நான் கூட்டங்களில் கலந்து கொண்டு நட்பை மட்டும் அனுபவித்து வந்தேன். அந்த நிகழ்ச்சியின் சார்ஜென்ட்-அட்-ஆர்ம்ஸ் ஆக, நிகழ்ச்சி முடிந்ததும் பேனரைச் சேகரிப்பதே எனது வேலை.

நிகழ்ச்சி முடிந்ததும், அனைவரும் சமோசா மற்றும் தேநீர் அருந்த வெளியே சென்றனர். ஆனால் ஒரு சிறுமி மட்டும் அங்கேயே அமர்ந்திருந்தாள்.

அவள் சொன்னாள், “இத்தனை ஆண்டுகளில், நான் தரையில் அமராமல் ஒரு பெஞ்சில் அமர்ந்திருப்பது இதுவே முதல் முறை. இன்னும் கொஞ்ச நேரம் இதை அனுபவிக்க விடுங்கள்... எனக்கு இந்த வாய்ப்பைத் தந்த நீங்கள் கடவுள்.”

எனக்கு எந்தப் பங்கும் இல்லாத ஒரு விஷயத்திற்கு எனக்குப் பாராட்டு கிடைப்பதை எண்ணி நான் வெட்கப்பட்டேன். நான் அறக்கட்டளைக்கு ஒரு ரூபாய் கூட கொடுத்ததில்லை, ஆனால் அந்தச் சிறுமி என்னை கடவுள் என்றாள். பிறகு எனது சங்கத் தலைவரிடம் அறக்கட்டளை பற்றி விசாரித்து அறிந்து, அன்றே 1,000 டாலருக்கு (அப்போது ஒரு டாலர் 32 அல்லது 33 ரூபாய்) செக் எழுதிக் கொடுத்தேன். அந்த இரவு, அந்தச் சிறுமி கொடுத்த பாராட்டில் 1 சதவீதத்தையாவது நான் பெற தகுதியுடையவன் என்று உணர்ந்தேன். இந்த அனுபவம் என்னை மாற்றியது. இளைஞர்களுக்கு எனது அறிவுரை இதுதான்: இதில் ஒரு பங்கெடுப்பவராக இருங்கள்; வெறும் பார்வையாளராக இருக்காதீர்கள்.



**சந்தீப்:** போலியோபிளஸ் தவிர, இது போன்ற மற்றொரு மிகப்பெரிய பிரச்சாரத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**A S வெங்கடேஷ்:** போலியோவை முழுமையாக ஒழிக்கும் வரை, 35 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் போராடி வரும் இந்த லட்சியத்திலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் மற்றொரு திட்டத்தைப் பற்றிப் பேசுவது சரியாக இருக்காது.

போலியோ முடிந்த பிறகு... இது எனது கணிப்பு மட்டுமே... கடந்த சில ஆண்டுகளில் அறக்கட்டளை செயல்படும் விதத்தைப்

பார்க்கும்போது, வட்டாரமயமாக்கல் நோக்கி அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதைக் காண்கிறேன். அமெரிக்காவில் வேலை செய்யும் ஒரு திட்டம் ஜப்பானில் பலன் தராது, ஜப்பானில் நடப்பது இந்தியாவில் நடக்காது. ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தாது என்பதை ரோட்டரி உணர்ந் துள்ளது. எதிர்காலத்தில் வெவ்வேறு பிராந்தியங்களுக்குத் தேவையான பல்வேறு விருப்பங்கள் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

**சந்தீப்:** உங்கள் ரோட்டரி பயணத்தைப் பற்றி சொல்லுங்கள். ரோட்டரியில் சேர உங்களைத் தூண்டியது எது? ஆளுநர், RI இயக்குனர் மற்றும் இப்போது அறங்காவலராக உயரும் அளவிற்கு உங்களை ஈடுபாட்டுடன் வைத்திருப்பது எது?

**A S வெங்கடேஷ்:** உண்மையைச் சொன்னால், நான் சேவை செய்வதற்காக ரோட்டரியில் சேரவில்லை; அது என் எண்ணத்திலேயே இல்லை. எனது தொழில் மற்றும் வியாபாரத்திற்கு வெளியே நண்பர்களை உருவாக்கவே நான் ரோட்டரியில் சேர்ந்தேன். ஆனால், மக்களின் வாழ்க்கையில் என்னால் ஏற்படுத்த முடிந்த மாற்றமே என்னை ரோட்டரியில் தொடரச் செய்கிறது. எனது IIT படிப்பு முழுமைக்கும் கட்டணம் 2,000 ரூபாய்க்கும் குறைவுதான். அதாவது ஆயிரக் கணக்கான வரி செலுத்துவோர் எனது கல்விக்காகப் பணம் கொடுத்துள்ளனர்; பயனாளி யார் என்று தெரியாமலேயே அவர்கள் செய்த உதவி அது. மற்றவர்களின் பங்களிப்பால் நான் பலன் பெற்றிருக்கும்போது, நான் தகுதியான நிலையில் இருக்கும்போது அந்தச் சமூகத்திற்குத் திருப்பிச் செய்ய வேண்டிய கடமை எனக்கு உள்ளது. எனது நன்கொடையால் பயன்பெறுபவர் யார் என்று தெரியாமலேயே தானம் செய்யும் வாய்ப்பை அறக்கட்டளை எனக்கு வழங்கியுள்ளது. சமூகத்திற்கு நான் பட்டிருக்கும் கடனைத் தீர்க்க இதுவே சிறந்த வழி என்று நான் கருதினேன்.

**சந்தீப்:** அமைதித் திட்டம் என்பது அறக்கட்டளைக்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது? அதை ஆதரிக்க ரோட்டரி ஏன் இவ்வளவு முயற்சி எடுக்கிறது?

**A S வெங்கடேஷ்:** அற்புதமான கேள்வி! அமைதி என்பது போர் இல்லாத நிலை மட்டுமல்ல. நம்மில் பலர் போரைப் பார்த்ததே இல்லை, ஆனால் நாம் அமைதியாக இருக்கிறோமா? நம்மைச் சுற்றியுள்ள சமூகம் அமைதியாக இருக்கிறதா? இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்.

அமைதி என்பது, அடுத்த வேளை உணவுக்கு எங்கே போவது என்ற கவலை இல்லாமல் என்னால் தூங்க முடிவதே ஆகும்... நாளை காலை நான் ஆரோக்கியமாக எழுவேன், நோய் எதுவும் என்னைத் தாக்காது என்ற நம்பிக்கை இருப்பதே அமைதி. இவைதான் அமைதியின் கூறுகள், போர் இல்லாத நிலை மட்டுமல்ல.

உலகெங்கிலும் உள்ள மக்கள் கவலையின்றி வாழ்வதற்கான ஒரு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே ரோட்டரியின் அமைதி பற்றிய கருத்தாக்கம். சமீபத்தில் புனேவில் உள்ள சிம்பயாசிஸ் பல்கலைக்கழகத்தில் எங்களது புதிய அமைதி மையம் திறக்கப்பட்டது; நான் அங்கு சென்றிருந்தேன். இந்த அமைதிப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுபவர்கள் உலகம் முழுவதும் சென்று மோதல்கள் உள்ள பகுதிகளில் தீர்வுகளை வழங்கி, அந்தச் சமூகம் அமைதியாக வாழ வழிசெய்வார்கள்.

அமைதியை உருவாக்குவதற்கும் மோதல்களைத் தீர்ப்பதற்கும் ரோட்டரி இவ்வளவு பணம் செலவழிப்பதற்குக் காரணம், இது அனைத்து திட்டங்களுக்கும் தாய் போன்றது.

**சந்தீப்:** CSR நிதிக்கும், நமது சங்கங்களின் அடிப்படைச் சேவை மாதிரிக்கும் இடையே உள்ள இடைவெளியை ரோட்டரி எவ்வாறு குறைக்க முடியும்?

**A S வெங்கடேஷ்:** எந்தவொரு அமைப்பும் ஒரு பெரிய வளர்ச்சியை எட்ட வேண்டுமெனில், கூட்டாண்மை அவசியம். எல்லாவற்றையும் நீங்களே தனியாகச் செய்துவிட முடியாது. கார்ப்பரேட் உலகில் இதை இணைப்பு மற்றும் கையகப்படுத்துதல் என்பார்கள், ரோட்டரியில் நாம் இதை கூட்டாண்மை என்கிறோம். ஒத்த கருத்துடையவர்களுடனும், உங்கள் திட்டத்தில் உள்ள குறைகளை நிரப்பக்கூடியவர்களுடனும் கைகோர்க்க வேண்டும். இங்குதான் கார்ப்பரேட் நிறுவனங்கள் வருகின்றன; அவை நமது பலத்தை ஈடுகட்டுகின்றன. இருவரும் இணைந்தால் அற்புதங்களைச் செய்யலாம். அவர்களிடம் நம்மைப் போன்ற தன்னார்வலர்கள்




இல்லை. நம்மிடம் அவர்களைப் போன்ற நிதி வசதி இல்லை. எனவே இருவரும் கைகோர்த்தால் இருவரின் நோக்கங்களும் நிறைவேறும்.

இந்தியாவில் CSR மூலம் அதிக நிதி திரட்ட வாய்ப்பு இருந்ததால், வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப இந்தியாவிற்கு என பிரத்யேகமாக அறக்கட்டளை சில மாற்றங்களைச் செய்துள்ளது.

**சந்தீப்:** இளைஞர்களை ஈர்ப்பது பற்றி நாம் அடிக்கடி பேசுகிறோம். நெகிழ்வுத்தன்மைக்கு அப்பால், நாம் செய்ய வேண்டிய அடிப்படை மாற்றம் என்ன?

**A S வெங்கடேஷ்:** 20–35 வயதுடைய இளைஞர்களிடம் கருத்து கேட்டபோது, அவர்களுக்கு மேடைப் பேச்சுகளோ அல்லது கட்டாயமான நேரக் கட்டுப்பாடோ பிடிக்கவில்லை என்று கூறினர். பெரும்பாலும், வருகையையே நாம் ஈடுபாடு என்று தவறாகக் கருதுகிறோம். இது மாற வேண்டும். வருகை என்பது ஈடுபாடு அல்ல. ஒரு சங்கத்தில் உள்ள அனைவரும் எல்லா கூட்டங்களுக்கும் வந்தால், சந்தா தொகையை இரட்டிப்பாக்க வேண்டியிருக்கும். ஏனெனில், வராத உறுப்பினர்கள் தரும் பணத்தைக் கொண்டே இன்றைய சங்கங்கள் நடக்கின்றன. இது ஒரு நிதி சார்ந்த உண்மை.

இளைஞர்களுக்குப் பேச்சுகள் தேவையில்லை, அதை அவர்கள் கூகுள் அல்லது AI தளங்களிலேயே பெற்றுக்கொள்கிறார்கள். நாம் இன்னும் நேரில் சந்தித்துப் பழகுவதைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் அடுத்த தலைமுறையினர் 24 மணி நேரமும் இன்ஸ்டாகிராம் போன்ற தளங்கள் மூலம் தொடர்பில் இருக்கிறார்கள். எனவே, நமது பழைய பாணி இனி செல்லுபடியாகாது. நாம் நமது மனநிலையை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களை கவர இளைஞர்களுக்கு என்ன தேவையோ அதை வழங்க வேண்டும். அவர்கள் கூட்டங்களுக்கு வராமல் இருக்கலாம், ஆனால் தங்கள் பகுதியில் ஒரு திட்டத்தை முன்னின்று நடத்துவார்கள். அவர்களை ஊக்குவியுங்கள். காலப்போக்கில் அவர்கள் நம்மிடம்




வருவார்கள். அவர்களின் கனவுகளை நனவாக்க உதவுங்கள், அவர்களை நமது கனவின் ஒரு பகுதியாக மாற்ற முயற்சிக்காதீர்கள். வரும் காலங்களில் அவர்கள் நமது சகோதரத்துவத்தில் ஒரு அங்கமாக இருப்பார்கள்.

**சந்தீப்:** பல மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு பெரிய அறக் கட்டளையை நடத்துவதையும், ரோட்டரியின் அடையாளமான அந்தத் தன்னார்வ உணர்வையும் நீங்கள் எவ்வாறு சமநிலைப்படுத்துகிறீர்கள்?

**வெங்கடேஷ்:** அறக்கட்டளையிடம் நிதி மட்டுமே உள்ளது. ரோட்டரி இன்டர்நேஷனல் (RI) மற்றும் அதன் மாவட்டங்கள், சங்கங்களிடம் மக்கள் (தன்னார்வலர்கள்) உள்ளனர். எனவே இங்கு போட்டிக்கு இடமில்லை. நிதி அதிகமாக இருந்தால், அதிகமான மக்கள் ஈடுபடுவார்கள். அறக்கட்டளை மக்களுக்கு உதவவே இருக்கிறது. இது ஒரு தனி அமைப்பு அல்ல, மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நமது முயற்சிகளுக்கு உதவும் ஒரு பகுதி மட்டுமே. யாரிடம் இருக்கிறதோ அவர்கள் கொடுக்கிறார்கள், யாருக்குத் தேவையோ அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

எதிர்காலத்தில், அறக்கட்டளை சிறிய திட்டங்களிலிருந்து வெளியே வர வேண்டும் என்று நான் கருது கிறேன். சிறிய திட்டங்களை மாவட்டங்களும் சங்கங்களும் தாங்களாகவே பார்த்துக்கொள்ளட்டும். அறக்கட்டளை பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும். ஜாம்பியாவில் மலேரியா ஒழிப்பு, எகிப்தில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி அல்லது மகாராஷ்டிரா மற்றும் குஜராத் விவசாயி களுக்கான திட்டங்கள் போன்ற ப்ரோக்ராம் ஆப் ஸ்கேல்ஸில் கவனம் செலுத்தும் போதுதான் நிலையான மாற்றம் ஏற்படும்.

**சந்தீப்:** இங்கு வருங்காலத் தலைவர்கள் பலர் உள்ளனர்; சர்வதேச அளவில் தலைமை தாங்க விரும்பும் ரோட்டேரி யர்களுக்கு நீங்கள் என்ன அறிவுரை கூறுவீர்கள்?

**A S வெங்கடேஷ்:** அறிவுரை என்பது மிகப் பெரிய வார்த்தை. ஆனால் எனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறேன்; முதல் நாளிலிருந்து, எனக்குக் கொடுக்கப்பட்ட எந்தவொரு பொறுப்பையும் நான் மறுத்ததில்லை. அது சங்கம், மாவட்டம் அல்லது சர்வதேச அளவு என எதுவாக இருந்தாலும் சரி. எனவே ரோட்டரியில் வளர விரும்பும் எவருக்கும் நான் சொல்வது; எதற்கும் இல்லை என்று சொல்லாதீர்கள். வரும் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குத் திறமை இருப்பதாக நீங்கள் கருதினால், அந்தப் பதவியில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டுங்கள்.■

# RIDE சிகானுக்கு ரோட்டரித்தலைவர்கள் பாராட்டு

ஜெய்ஸ்ரீ

2027–29-ம் ஆண்டுக்கு மண்டலங்கள் 4 மற்றும் 7-க்கு RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குர்ஜீத் சிங் சிகானுக்கு அமிர்தசரசில் உற்சாகமான கைதட்டல்களுடன் பாராட்டுவிழா நடைபெற்றது. இந்தியா முழுவதிலிருந்து வந்திருந்த ரோட்டரி தலைவர்கள் அவருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர். ஆழ்ந்த சிந்தனையும், எதையும் பகுப்பாய்வு செய்யும் திறனும், பணிவும் கொண்ட தலைவர் என்றும் உலகளவில் ரோட்டரி அரஙகில் இந்தியாவை சிறப்பாக பிரதிநித்துவபடுத்துவார் என்றும் வர்ணித்தனர். சிகான் 2014–15ம் ஆண்டில் RID 3070-ன் மாவட்ட ஆளுநராகப் பணியாற்றியவர்.

அவருக்கு பாராட்டு தெரிவித்து பேசிய PRIP கல்யாண் பானர்ஜி, "ரோட்டரி வாரியத்தில் பணியாற்றும் உங்களுக்கு உலெகங்கிலும் உள்ள சிறந்த தலைவர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைக்கும். மேலும் தலைமைத்துவ சிந்தனையை விரிவுபடுத்தும் கண்ணோட்டம் கிடைக்கும். இந்தியாவைப் போன்ற நாடு, இரண்டு ஆண்டு பதவிக்காலத்தில் உங்களுக்கு சிறந்த காலங்களையும் கடினமான காலங்களையும் வழங்கும். உங்கள் தலைமைத்துவத்தில் இந்தியா எப்போதும் சமநிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். ரோட்டரி அதைச்சார்ந்தே இருக்கும்" என்று கூறினார்.

அவரது மனைவி அமன்தீப், தமது கணவரின் வாழ்க்கை மற்றும் செயல்பாடுகளை அழகாக எடுத்துக் கூறினார். ஒரு விஞ்ஞானியின் மகனான சிகான், லூதியானாவில் வேளாண்துறையில் படிப்பை முடித்துவிட்டு கார்ப்பொரேட் துறையில் நுழைந்து பின்னர் அமிர்தசரசில் தொழில்முனைவோரானார். 1994-ம் ஆண்டு அமிர்தசரஸ் சிவில் லைன்ஸ் ரோட்டரி சங்கத்தின் பட்டய உறுப்பினரானராக ரோட்டரி பயணத்தை தொடங்கினார்.

உறுப்பினர் சேர்க்கைக்கான உத்திகள் மற்றும் நிறுவனத் தரவுகள் குறித்த கலந்துரையாடல்களை நினைவுகூர்ந்த PRID மற்றும் TRF அறங்காவலராக தேர்ந்தெடுக்கப்பட்ட A S வெங்கடேஷ் கூறுகையில், "எந்த ஒரு விஷயத்தையும் சிந்தித்துப் பார்ப்பது மற்றும் கவனத்துடன் தயாரிப்பது அவரது தனிச்சிறப்பு. எதையும் காது கொடுத்து கேட்பது, புதியனவற்றை கற்றுக்கொள்ளும் ஆர்வம், எவரை பற்றியும் தவறாகப் பேசாமல் இருப்பதும் அவரது சிறப்பு பண்புகளாகும்" என்று கூறினார்.

PRID ராஜு சுப்பிரமணியன் பேசுகையில், "எதையும் துல்லியமாக கணிப்பது, ஒழுங்கு நேர்மையை கடைப்பிடிப்பது மற்றும் தலைவர்களுக்கு ஆர்வத்துடன் பயிற்சி



*இடமிருந்து:* PRIDகள் *அனிருதா ராய்சௌத்ரி மற்றும் மகேஷ் கோட்பாகி,* TRF *அறங்காவலர் எலெக்ட்* A S *வெங்கடேஷ்,* RIDE *பாசுதேவ் கோலியன், அமந்தீப் மற்றும்* RIDE *குர்ஜீத் சிகான்,* TRF *அறங்காவலர் பரத் பாண்டியா,* DG *ரோஹித் ஒபராய்,* PRIP *கல்யாண் பனர்ஜி மற்றும்* PRID *ராஜு சுப்ரமணியன்.*

அளிப்பது அவரது நற்பண்புகளாகும் என்று கூறினார்.

அசாதாரணமாக சாதனை புரியும் விளையாட்டு வீரர்களுடன் செகானை ஒப்பிட்டுப் பேசினார் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா. ஒரு தலைமைக்கு தேவையான மூன்று ‘சி’க்கள் அதாவது அர்ப்பணிப்பு, திறமை மற்றும் துணிச்சல் ஆகிய குணங்களைக் கொண்டிருப்பவர் செகான். ரோட்டரியின் பலம் அதன் அடிமட்ட தொண்டர்கள்தான் என்பதை உணர்ந்து ரோட்டரியை மேலும் பலப்படுத்துவதில் கவனம் செலுத்துமாறு அவரை பாண்ட்யா வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

ஒரு காணொளி செய்தி மூலம் PRID பாஸ்கர், “சிகானின் பயணம், இரக்கம் மற்றும் திறமையை பிரதிபலிக்கிறது. உறுப்பினர்கள் எண்ணிக்கையை பலப்படுத்துவது முதல் இளம் தலைவர்களை வளர்ப்பது வரை அவரது பணி சுற்றியுள்ள ரோட்டேரியன்களை ஈர்க்கும் வகையில் இருக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

PRID அனிருதா ராய்சௌத்ரி, “மாறிவரும் உலகில் ரோட்டரி தனது பங்கை மறுவரையறை





PRIP *பானர்ஜி,* RID 3070 DG *ஓபராய் மற்றும்* PDG *அவினாஷ் மொஹிந்த்ருவுடன் சிகான்.*

செய்து வரும் நிலையில் சிகான் நல்ல சிந்தனையுள்ள தலைமைத் துவத்தையும், நேர்மையான நிர்வாகத் தையும் ரோட்டரிக்கு கொண்டு வருவார் என நம்பிக்கை தெரிவித்தார். PRID மகேஷ் கோட்பாகி, “உறுப்பினர் வளர்ச்சியில் அவரது அர்ப்பணிப்பும், இந்த பதவிக்கு அவர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவரது சிறப்பான சேவைக்கான அங்கீகாரம்” என்று குறிப்பிட்டார்.

RI இயக்குநர் M முருகானந்தம், உறுப்பினர்கள் வளர்ச்சி, அரசாங்கங்களுடன் நெருங்கிய கூட்டுறவு மற்றும் ரோட்டரிக்குள் உலகளவில் இந்தியாவை பற்றிய நல்லெண்ணம் ஆகியவற்றை வளர்ப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார். RI இயக்குநர் K P நாகேஷ், “உறுப்பினர் சேர்க்கையில் செகானுக்கு உள்ள ஆர்வம், இந்தியாவில் ரோட்டரியை விரிவுபடுத்தும் நீண்டகால இலக்கிற்கு முக்கிய பங்களிக்கும் என்று கூறினார்.

நேபாளத்தைச் சேர்ந்த (மண்டலங்கள் 5 மற்றும் 6) RIDE வாசுதேவ் கோல்யான் நிகழ்ச்சியில் பங்கேற்றார். “குர்ஜீத் சிங், ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராகத் தேர்வுபெற்றது தனிப் பட்ட நபரின் சாதனை மட்டுமல்ல, அது மாவட்டம் முழுமைக்கும் பெருமை சேர்ப்பதாகும்” என்று DG ரோஹித் ஓபராய் கூறினார்.

பாராட்டுகளுக்கும் வாழ்த்துரை களுக்கும் பதிலளித்துப் பேசிய RIDE குர்ஜீத் சிகான், புதிய பொறுப்பை ஏற்க தம்மை ஊக்குவித்த PRID ராஜு சுப்ரமணியன் மற்றும் அறங்காவலர் பரத் பாண்ட்யாவுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். தமது வழிகாட்டியான PDG அவினாஷ் மொஹிந்துருவுக்கும் அவர், தமது ஆழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

“தலைமைப்பதவி என்பது ஓர் ஆண்டோ அல்லது குறிப்பிட காலத்துக்கோ பதவியை நிர்வகிப்பது அல்ல, அது நிறுவனத்தை வலுப் படுத்துவதாகும்” என்று அவர் கூறினார். ரோட்டரித் தலைவர்கள் ஆண்டுக்கு ஆண்டு மாறினாலும், அமைப்பின் செயல்பாடுகளும், அதன் மீதான மதிப்புகளும் நிலையானதாக இருக்க வேண்டும். ரோட்டரி திட்டமிட்டு வளருமா அல்லது சௌகரியத்துக்கு செல்லுமா என்பதை 8 விதமான கட்டமைப்புகள் மூலம் தெரிந்துகொள்ள முடியும் என்று அவர் கோடிட்டு காட்டினார்.

முதலாவதாக தனிநபர் சார்ந்த செயல்பாட்டிலிருந்து செயல்முறை சார்ந்த செயல்பாட்டுக்கு மாற வேண்டும். ரோட்டரி ஆற்றல் மிக்க தலைவர்களைக் கொண்டாடி வந்தாலும், ஒரு அமைப்பானது தனிப் பட்ட நபரின் புத்திசாலித்தனத்தை மட்டும் சார்ந்திருக்க முடியாது. “தனிநபரின் புத்திசாலித்தனத்திலிருந்து நிறுவனத்தின் சிறப்புக்கு மாற வேண்டும். மேலும் இந்த நடைமுறை மனிதர்களைவிட நீடித்திருக்க வேண்டும்” என்று அவர் குறிப்பிட்டார்.



*இடமிருந்து: RI இயக்குநர்கள் KP நாகேஷ், M முருகானந்தம் மற்றும் RIDE சிகான்.*

அடுத்து கற்றல் மற்றும் தலைமைத்துவ பயிற்சியை தொழில் முறையாக்க வேண்டும் என்று அவர் கோரினார். பெருங்கூட்டத்தைவிட பேசப்படும் உள்ளடக்கம் முக்கியம். “வருகை மட்டுமே எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மதிப்பு தான் அதைச் செய்கிறது. நாம் திஷாவை மறுபரிசீலனை செய்து மண்டல கழகங்களை மறு ஆய்வு செய்ய வேண்டும்” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

TRF-க்கு நன்கொடை கொடுப்பதில் பங்கேற்பை விரிவு படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சிகான் வலியுறுத்தினார். மொத்த பங்களிப்பில் மட்டும் கவனம் செலுத்துவதற்கு பதிலாக பங்களிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். நன்கொடை கொடுக்காத ஒவ்வொரு உறுப்பினரும் பயன் படுத்தபடாதவர்கள். விசுவாசியாக இருக்கும் அவர்களை நாம் தான் அணுக வேண்டும். “கொடுப்பது என்பது பகிரப்பட்ட அர்ப்பணிப்பாகும். அதுபோன்ற கலாசாரத்தை உருவாக்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

திட்டங்கள் பற்றி அவர் குறிப்பிடுகையில், வலுவான நிர்வாகத்தையும், காலவரைக்குள் உலகளாவிய மானியம் கிடைப்பதை உறுதிசெய்வதாக இருக்க வேண்டும். உலகளாவிய மானியங்கள் முடிந்த பின்னரும் சங்கங்கள் மற்றும் மாவட்டங்கள் பயனாளிகளுடன் தொடர்பில் இருக்க வேண்டும், என்றார்.

தலைமைத்துவ மேம்பாடு மற்றும் சங்கத்தின் நிலைத்தன்மை ஆகியவற்றில் ரோட்டரி தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கூறிய அவர், புதிய தலைவர்களை நாம் உருவாக்காவிட்டால், வீழ்ச்சி அடைந்துவிடுவோம் என எச்சரித்தார்.

ரோட்டரியின் நிலைத்தன்மைக்கு உறுப்பினர்களின் ஈடுபாடு முக்கியம். உறுப்பினர்களை தக்க வைப்பது என்பது வெறும் எண்ணிக்கை சார்ந்தது அல்ல, அது உணர்ச்சிப்பூர்வமானது என்று அவர் கூறினார். “உறுப்பினர்கள் தங்களின் நேரம், வளங்கள் மற்றும் நம்பிக்கையை அளிக்கிறார்கள். அதை நாம் மதிக்க வேண்டும். உறுப்பினர்கள் சேர்க்கை என்பது ஒரு வருடாந்திர செயல் அல்ல, அது தொடர் நடவடிக்கையாக இருக்க வேண்டும். அப்போது நாம் வளர்ச்சியை துரத்திச் செல்ல வேண்டியிருக்காது. வளர்ச்சி தானாகவே ஏற்படும்” என்று அவர் கூறினார். ■

*சிகான் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன். அவர்களின் மகள் மன்னத், வலது ஓரத்தில் உள்ளார்.*




# நவி மும்பையில் ரோட்டரி–பொதுமக்கள் உரையாடல்

ரோட்டரி செய்திக்குழு

நெருலில் உள்ள அழகான, சுற்றுச்சூழலுக்கு இதமான நகரப் பூங்காவான "ஜூவல் ஆஃப் நவி மும்பை"யில், "மகிழ்ச்சித் தெருக்கள்" என்ற பெயரில் உடற்கட்டு, சமூகப் பிணைப்பு மற்றும் தோழமையைக் கொண்டாடும் ஒரு நிகழ்ச்சியை RCகள் நவி மும்பை இன்டஸ்ட்ரியல் ஏரியா, நவி மும்பை பால்ம் பீச் உடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது RC நவி மும்பை சமாரிட்டன்ஸ், RID 3142. இந்த நிகழ்ச்சியில் ரோட்டரியன்கள், உடற்கட்டு ஆர்வலர்கள், கலைஞர்கள், எல்லா வயதைச் சேர்ந்த பொதுமக்கள் ஒன்றுகூடி உரையாடினார்கள்.

சமூக விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக, டிஸ்ஸெர் ஆர்ட்டிசன் ஃபாரம், ஸ்க்ராப்ஜி ஆகிய NGOக்கள் திடக் கழிவு மேலாண்மையைப்பற்றிப் பேசினார்கள், பழைய துணிகள், பொம்மைகள், எலக்ட்ரானிக் குப்பைகளை மறுசுழற்சி செய்தல், வளங்குன்றா வாழ்க்கைமுறையை ஏற்றுக்கொள்ளுதலின் தேவையை விளக்கினார்கள். டாக்டர் அங்கிதா சாவந்த் உடல் நலத்தில் கவனம் செலுத்திய ஃபிசியோதெரபி, நலமான வாழ்க்கைக்கான பழக்கங்களைப்பற்றிப் பேசினார்.



*சக்தி அறக்கட்டளையின் தலைவர் விமலா நந்தகுமாருக்கு DGN ஸ்ரீஜித் பூத்தன் தொழில்சார் சிறப்பு விருதை வழங்கினார். RC நவி மும்பை சமாரிடன்ஸ் தலைவர் அபிஜித் சௌத்ரி வலதுபுறம் இருக்கிறார்.*

*ஹேப்பி ஸ்ட்ரீட்ஸ் நிகழ்வில் ஒரு ஜூம்பா நடன அமர்வு.*



DG ஹர்ஷ் மகோல் இந்த முன்னெடுப்புக்காக இந்த ரோட்டரி சங்கங்களைப் பாராட்டினார். RC நவி மும்பை சமாரிட்டன்ஸ் தலைவர் அபிஜித் சௌத்ரி பேசுகையில் "மகிழ்ச்சித் தெருக்கள் சமூக நலத்தை முன்னிறுத்துதலுக்கான ரோட்டரியன்கள், பொது மக்களிடையில் தோழமையை வலுப்படுத்துகின்றன" என்றார்.

PDG மோகன் சந்த்ரவர்கரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். சமூகத்துக்குத் தன்னலமற்ற பங்களிப்புகளை வழங்கிய சக்தி அறக்கட்டளையின் கல்வியாளர் விமலா நந்த்குமார், தலைமைக் கல்வியாளர் ரஜ்னீஷ் கரு (நன்ஹே கதம்), பெண்ணோயியல் மருத்துவர் டாக்டர் சுசேதா கிஞ்ச்வாடேகர் ஆகியோருக்கு ரோட்டரி தொழிற் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன. ■

# ரோட்டரியை நாம் சொந்தமாக்கிக் கொள்வோம்

**V முத்துகுமரன்**

"ரோட்டரியில் கொண்டாட நிறைய விஷயங்கள் இருந்தாலும், 25 ஆண்டுகளுக்கு மேலாக உறுப்பினர்கள் எண்ணிக்கை 1.2 மில்லியன் என்ற அளவிலேயே நிற்கிறது. இன்னும் சொல்லப்போனால் எண்ணிக்கை 50,000 குறைந்துள்ளது கவலை அளிக்கிறது. வளர்ச்சி அடையாத எந்த ஒரு நிறுவனமும் சரியத் தொடங்கி கடைசியில் வீழ்ச்சி அடையும், என்று TRF அறங்காவலராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள PRID A S வெங்கடேஷ் கூறினார்.

RID 3234 சார்பிலான மாவட்ட மாநாட்டில் "உத்சவ் 2026" என்னும் தலைப்பிலான அமர்வில் தொடக்க உரையாற்றிய அவர், 122 ஆண்டுக்கால வரலாற்றில், ரோட்டரியின் போலியோவுக்கு எதிரான போராட்டம், உலகம் முழுவதும் சங்கங்கள் மூலம் நிறைவேற்றப்பட்ட நல்ல பணிகள் கொண்டாட்டத்திற்கான காரணங்களாக அமைந்தாலும், நம்மில் எத்தனைப் பேர் "நமது அமைப்பு" என்பதில் பெருமை கொள்கிறோம். பெரும்பாலான ரோட்டேரியன்கள், உறுப்பினர்களாக இருப்பது குறித்தும், சங்கத்தின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவது குறித்தும் உண்மையிலேயே மன நிறைவுடன் இருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ரோட்டரியில் எனக்கு என்ன இருக்கிறது என்று கேளுங்கள். என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் தேர்வுசெய்யுங்கள். அந்த அமைப்பை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்" என்று அவர் கூறினார்.

"இந்திய மண்டலங்களில் 1.8 லட்சம் ரோட்டேரியன்கள் உள்ளனர். இந்தியாவில் 140 கோடி மக்கள் இருப்பதால் வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்பு உள்ளது". மலேசியாவில் RID 3300 PDG RIPR சிட்டி சுபைதா முஸ்தபா பேசுகையில், "அரசியல், கொள்கைகள் மற்றும் புவியியல் ரீதியில் பிளவுபட்டு இருக்கும் உலகில், RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவின் வருடாந்திர கருபொருளான "நன்மைக்காக ஒன்றுபடுவோம்" என்பது மனித குலத்தை ஆற்றுப்படுத்தவும், சமூகத்தை முன்னேற்றுவதற்குமான நம்பிக்கை அளிக்கும் மந்திரமாகும்." உண்மையில் ரோட்டேரியன்களை ஒன்றிணைக்கும் மற்றும் நாம் யார், நாம் இந்த உலகிற்கு எதை எப்படிச் செய்யவேண்டும் என்பதைத் தெளிவு படுத்துகிறது" என்று கூறினார்.

வெறும் திட்டங்கள் அல்லது செயல்பாடுகள் மட்டுமல்ல, மனிதகுலத்தின் மீதான அக்கறை, கண்ணியத்தை உருவாக்குவதில் நமக்குள்ள பல்வேறு அனுபவங்கள் தான் உலகில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார். ஒரு ரோட்ராக்டரிடமோ அல்லது ஒரு இளம் தலைவரிடமோ, "ரோட்டரியைப் பற்றி நீங்கள் நினைப்பது என்ன? என்று கேட்டால், அவர் சொல்லும் பதில் இதுவாகத்தான் இருக்கும்: உலகிற்கு நன்மை செய்ய அதிகாரம் பெற்றுள்ளோம் என்ற உணர்வுதான் முதலில் வரும்.

RID 3234-ன் சாதனைகளை பட்டியலிட்டு பேசிய DG வினோத் சரோகி, "எங்கள் மாவட்டத்துக்கு RI இயக்குநர் முருகானந்தம் நிர்ணயித்த அனைத்து இலக்குகளையும் நாங்கள் அடைவோம். நடப்பு ஆண்டில் ரூ.50 கோடி மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்த உள்ளோம். இதுவரை ரூ.20 கோடி மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. TRF-நிதிக்கு $2.5 மில்லியன் இலக்கு நிர்ணயித்து இதுவரை $1.2 மில்லியன் நிதி திரட்டியுள்ளோம், என்றார்.

இந்தியா வேகமாக முன்னேறி

*PRID A S வெங்கடேஷ் மற்றும் RID 3234 DG வினோத் சரோகி ஆகியோர், PDG அபிராமி ராமநாதன் மற்றும் நல்லம்மை ஆகியோருக்கு ரோட்டரியின் Legacy of Giving விருதை PRID P T பிரபாகர், RIPR சிட்டி சுபைதா முஸ்தபா, அவரது கணவர் கமருல் அரிஃப், டிஸ்கான் வழிகாட்டி AVM பாலசுப்பிரமணியன் மற்றும் PDG J ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலையில் வழங்குகிறார்கள்.*





DG சரோகி, அட்டிபிகல் அட்வாண்டேஜ் நிறுவனர்-தலைமை நிர்வாக அதிகாரி வினீத் சராய்வாலாவை பாராட்டுகிறார். RC குளோபல் நெக்ஸஸ் தலைவர் அஞ்சலி ஆனந்தும் உடன் உள்ளனர்.



செஸ் ப்ராடிஜி A S ஷர்வானிகாவுக்கு, DG சரோகி மற்றும் RIPR சிட்டி சுபைதா ஆகியோரால் ரோட்டரியின் இளம் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

வருகிறது. "4 டிரில்லியன் டாலர் உள்நாட்டு உற்பத்தியுடன், ஒவ்வொரு 18 மாதங்களுக்கும் 1 மில்லியன் டாலர் கூடுதலாக சேர்க்கப்படுகிறது. எனவே அடுத்த சில ஆண்டுகளில் இந்தியா, பொருளாதார வளர்ச்சியில் மூன்றாவது இடத்தைப் பிடித்துவிடும். பல்வேறு துறைகளிலும் நாம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகிறோம்" என்று ரிலையன்ஸ் நுகர்பொருள்கள் துறையின் தலைமைச் செயல் அதிகாரி கிருஷ்ணகுமார் திருமலை கூறினார். 2050-ம் ஆண்டுக்குள் மக்கள் தொகையில் 70 சதவீதம்பேர் (ஒரு பில்லியனுக்கு மேல்) வேலைசெய்யும் வயதை உடையவர்களாக இருப் பார்கள். தனிநபர் வருமானம் $21,000 என்ற நிலையைத் தாண்டிவிடும். அப்போது நடுத்தர வர்க்கம் வேகமாக வளர்ந்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனாலும் கவலைக்குரிய பிரச்னைகள் இல்லாமல் இல்லை. வருமான விநியோகத்தில் சீரான நிலை இருக்காது. முதல் 10 இடத்தில் இருப்பவர்கள் 65 சதவீத சொத்துக்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். விவசாயம்தான் பலருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கிறது. பெரும்பாலான வேலை வாய்ப்புகள் அமைப்புசாரா துறையில் தான் உள்ளன. எனவே அவை நிலை யில்லாதது. கல்வி மற்றும் சுகாதாரம் தான் பொருளாதார வளர்ச்சிக்கான இரு தூண்கள். ஆனால், இந்தியா உள்நாட்டு உற்பத்தியில் 6% மற்றும் 1.9% இந்த இரண்டு முக்கிய துறைகளில் செலவிட்டுவருகிறது, என்றார்.

உலகில் உருவாகிவரும் புதிய மாற்றங்கள் குறித்து பேசிய, கார்ப்பொரேட் நிறுவனங்களின் ஆலோசகரும் முன்னாள் தூதருமான அஜய் பிஸாரியா கூறுகையில், "நாம் சர்வதேச அளவில் ஏற்ற இறக்கத்தில் இருக்கிறோம். பல்வேறு அதிர்ச்சிகள் நமக்கு காத்திருக்கின்றன. சமீபத்தில் டாவோஸில் நடைபெற்ற மாநாட்டில் கனடா நாட்டுப் பிரதமர் மார்க் கார்னோ குறிப்பிட்டதுபோல, "உலக அரங்கில் நாம் மாற்றத்தின் மத்தியில் இல்லை, ஒரு விரிசலின் மத்தியில் இருக்கிறோம்" என்று கூறினார். இந்தியா இப்போது பலதரப்பு ஈடுபாட்டுடன் புவிசார் அரசியலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் எல்லைகளை பாதுகாக்க வேண்டும்.

ஓய்வுபெற்ற ராணுவ ஜெனரல் H தர்மராஜன், "போர்க்களம் முதல் நிர்வாக அறை வரை" என்னும் தலைப்பில் பேசினார். சமூகத்தினரின் மனதைத் தொடும் பெரு நிறுவன நடவடிக்கைகள் குறித்தும், காஷ்மீர் மற்றும் அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட எல்லையோர மாவட்டங் களில் ராணுவம் உள்ளூர் விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு எப்படி வழிகாட்டியாகவும் ஆதரவாகவும் இருக்கிறது என்பதையும் குறிப்பிட்டார்.

பல ஆண்டுகளாக இராணுவம் உள்ளூர் விவசாயிகள் மற்றும் சிறு தொழில் முனைவோருடன் நல்லுறவை வளர்த்துள்ளது. முன்னோக்கிச் செல்லும் படைகளுக்குத் தேவையான பொருள்களை அவர்கள்தான் எங்களுக்கு வழங்குகிறார்கள். "தமிழ்நாட்டில் MSME என்று அழைக்கப்படும் சிறு மற்றும் குறுந்தொழில் துறையினர், சரியான ஆய்வு மற்றும் எங்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதன் மூலம் எல்லையில் உள்ள இராணுவத்தினருக்கு பல்வேறு பொறியியல் பொருட்களை வழங்க முடியும்" என்றும் அவர் கூறினார்.

இந்தியப் பெண்களின் பரிணாம வளர்ச்சி குறித்து முன்னாள் ஆங்கிலப் பேராசிரியரும், இளைஞர்களை ஊக்கப்படுத்தும் பேச்சாளருமான ஜெயந்தஸ்ரீ பாலகிருஷ்ணன் பேசினார். ஒவ்வொரு பெண்ணும் தனிபட்ட ஒருவரை வளர்ப்பவர்களாக இருக்க வேண்டும். பரிணாம வளர்ச்சியில் கனவு காண்பவர்களாக இருப்பதுடன் அதை நனவாக்கி முத்திரைப் பதிப்பவர்களாக இருக்க வேண்டும், என்று கூறினார்.

எ டிபிகல் அட்வான்டேஜ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (இவரும் பார்வயற்றவர்தான்) வினீத் சரைவாலா கூறுகையில், "தமது நிறுவனம் 500-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தி யுள்ளதாகவும் உடல் ரீதியான பிரச்னை களை சமாளிக்க தொழில்நுட்பத் தீர்வு களை ஏற்றுக் கொண்டதாகவும் கூறினார். நாங்கள் 5,000-த்துக்கும் மேலான மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதாரத்தையும் வேலைகளையும் வழங்கியுள்ளோம். மேலும் 40 மாற்றுத் திறனாளிகள் எங்களது தளம் மூலம் ரூ.4.5 கோடி மதிப்புக்கு தங்களின் கலைப்படைப்பு களை விற்றுள்ளனர்" என்றும் அவர் கூறினார்.

10 வயதுக்கு கீழானவர்களுக்கான FIDE செஸ் சாம்பியனான A S ஷர்வானிகாவுக்கு ரோட்டரியின் இளம் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# Rotary In Maps



# The world of Rotary

### Convention host

Thirteen countries have hosted multiple Rotary Conventions, with the U.S. hosting the most (64).

### RI president home


After the U.S., the countries that have produced the most RI presidents are Canada (6) and Australia (5).

### Rotary Peace Center

The newest of Rotary's eight peace centers opens next year at India's Symbiosis University.

### RI office

In addition to its headquarters in Evanston, Illinois, Rotary has six international offices.




This map shows what the world would look like if the size of each country was proportional to the number of Rotary members it has. Each grid square represents about 20,000 members.

1. United States, 266,675
2. India, 226,562
3. Japan, 86,334
4. Korea, 69,015
5. Germany, 61,696
6. Brazil, 57,163
7. Italy, 46,267
8. Taiwan, 39,057
9. Philippines, 35,597
10. United Kingdom, 31,011

**Country or geographical area (number of Rotary clubs, Rotaract clubs)**

*Club/member data on this and following pages is as of 28 January.*

- Afghanistan (3, 0)
- Åland Islands (2, 0)
- Albania (22, 4)
- Algeria (3, 4)
- American Samoa (1, 1)
- Andorra (1, 0)
- Angola (3, 0)
- Anguilla (1, 0)
- Antigua and Barbuda (2, 1)
- Argentina (549, 117)
- Armenia (9, 2)
- Aruba (1, 1)
- Australia (930, 40)
- Austria (171, 37)
- Azerbaijan (2, 0)
- Bahamas (15, 9)
- Bahrain (3, 2)
- Bangladesh (357, 286)
- Barbados (3, 4)
- Belarus (2, 1)
- Belgium (271, 39)
- Belize (11, 7)
- Benin (32, 29)
- Bermuda (3, 1)
- Bhutan (1, 0)
- Bolivia (72, 37)
- Bonaire (1, 0)
- Bosnia and Herzegovina (13, 6)
- Botswana (4, 1)
- Brazil (2,300, 556)
- British Virgin Islands (4, 2)
- Brunei (2, 0)
- Bulgaria (85, 30)
- Burkina Faso (12, 7)
- Burundi (12, 7)
- Cabo Verde (4, 1)
- Cambodia (10, 3)
- Cameroon (17, 3)
- Canada (664, 80)
- Cayman Islands (5, 1)
- Chad (3, 3)
- Chile (220, 14)
- China (24, 1)
- Colombia (135, 58)
- Comoros (1, 2)
- Democratic Republic of Congo (26, 18)
- Republic of Congo (8, 3)
- Cook Islands (2, 1)
- Costa Rica (15, 7)
- Côte d'Ivoire (47, 27)
- Croatia (74, 21)
- Curaçao (2, 1)
- Cyprus (19, 7)
- Czech Republic (46, 7)
- Denmark (222, 8)
- Djibouti (1, 0)
- Dominica (2, 1)
- Dominican Republic (68, 26)
- Ecuador (72, 42)
- Egypt (137, 74)
- El Salvador (13, 9)
- England (1,163, 25)
- Equatorial Guinea (2, 1)
- Eritrea (1, 0)
- Estonia (23, 1)
- Eswatini (6, 3)
- Ethiopia (18, 27)
- Faroe Islands (2, 0)
- Fiji (9, 2)
- Finland (206, 8)
- France (1,090, 100)
- French Guiana (5, 1)
- French Polynesia (4, 1)
- Gabon (11, 8)
- Gambia (5, 3)
- Georgia (3, 0)
- Germany (1,160, 188)
- Ghana (69, 62)
- Gibraltar (1, 0)
- Greece (80, 8)
- Greenland (1, 0)
- Grenada (2, 2)
- Guadeloupe (8, 1)
- Guam (5, 1)
- Guatemala (30, 19)
- Guernsey (3, 0)
- Guinea (6, 6)
- Guinea-Bissau (1, 1)
- Guyana (7, 6)
- Haiti (24, 18)
- Honduras (32, 21)
- Hong Kong (89, 50)
- Hungary (57, 11)
- Iceland (31, 1)
- India (4,750, 2,278)
- Indonesia (107, 33)
- Iraq (1, 0)
- Ireland (40, 1)
- Isle of Man (3, 0)
- Israel (57, 6)
- Italy (979, 447)
- Jamaica (27, 14)
- Japan (2,176, 292)
- Jersey (2, 0)
- Jordan (11, 2)
- Kazakhstan (3, 1)
- Kenya (123, 101)
- Korea (1,592, 210)
- Kosovo (24, 6)
- Kyrgyzstan (1, 0)
- Laos (2, 0)
- Latvia (21, 2)
- Lebanon (37, 26)
- Lesotho (3, 8)
- Liberia (6, 5)
- Liechtenstein (2, 1)
- Lithuania (65, 9)
- Luxembourg (16, 1)
- Macao (8, 4)
- Madagascar (18, 11)
- Malawi (9, 4)
- Malaysia (142, 43)
- Maldives (1, 0)
- Mali (19, 20)
- Malta (4, 1)
- Martinique (8, 1)
- Mauritania (3, 0)
- Mauritius (35, 23)
- Mayotte (2, 1)
- Mexico (611, 238)
- Micronesia (2, 0)
- Moldova (8, 2)
- Monaco (1, 1)
- Mongolia (22, 13)
- Montenegro (8, 2)
- Montserrat (1, 1)
- Morocco (62, 95)
- Mozambique (9, 7)
- Myanmar (11, 10)
- Namibia (8, 1)
- Nauru (1, 0)
- Nepal (160, 183)
- Netherlands (459, 31)
- New Caledonia (3, 0)
- New Zealand (192, 6)
- Nicaragua (10, 6)
- Niger (8, 8)
- Nigeria (581, 409)
- Norfolk Island (1, 0)
- North Macedonia (29, 11)
- Northern Ireland (26, 0)
- Northern Mariana Islands (1, 1)
- Norway (255, 1)
- Pakistan (166, 121)
- Palau (1, 0)
- Palestine [West Bank] (2, 2)
- Panama (18, 15)
- Papua New Guinea (7, 1)
- Paraguay (25, 19)
- Peru (181, 80)
- Philippines (977, 599)
- Poland (79, 10)
- Portugal (162, 43)
- Puerto Rico (28, 5)
- Réunion (28, 2)
- Romania (146, 62)
- Russia (65, 16)
- Rwanda (13, 9)
- St. Barthélemy (1, 0)
- St. Kitts and Nevis (2, 2)
- St. Lucia (3, 3)
- St. Maarten (4, 0)
- St. Martin (1, 0)
- St. Pierre and Miquelon (1, 0)
- St. Vincent and the Grenadines (2, 1)
- Samoa (1, 1)
- San Marino (1, 1)
- Sao Tome and Principe (2, 0)
- Scotland (171, 1)
- Senegal (11, 7)
- Serbia (60, 22)
- Seychelles (2, 1)
- Sierra Leone (5, 4)
- Singapore (23, 13)
- Slovakia (26, 6)
- Slovenia (54, 17)
- Solomon Islands (1, 1)
- South Africa (171, 28)
- South Sudan (3, 0)
- Spain (249, 34)
- Sri Lanka (74, 86)
- Sudan (1, 0)
- Suriname (4, 4)
- Sweden (339, 6)
- Switzerland (221, 14)
- Taiwan (1,023, 156)
- Tanzania (48, 23)
- Thailand (339, 49)
- Timor-Leste (3, 7)
- Togo (19, 11)
- Tonga (1, 0)
- Trinidad and Tobago (23, 17)
- Tunisia (35, 28)
- Turkey (255, 123)
- Turks and Caicos Islands (2, 2)
- Uganda (230, 223)
- Ukraine (85, 28)
- United Arab Emirates (12, 6)
- United States (6,985, 494)
- U.S. Virgin Islands (11, 0)
- Uruguay (102, 24)
- Vanuatu (2, 0)
- Venezuela (92, 57)
- Vietnam (5, 3)
- Wales (82, 2)
- Zambia (35, 14)
- Zimbabwe (25, 22)



# Not your grandfather's Rotary

## Where most Rotarians are women

*Women as percentage of all Rotarians:*

1. Nauru, 100.0%
2. Lesotho, 70.1%
3. Gibraltar, 67.6%
4. Turks and Caicos Islands, 64.7%
5. Cook Islands, 60.6%
6. Mongolia, 60.1%
7. Kazakhstan, 60.0%
8. Zimbabwe, 59.3%
9. Palau, 58.3%
10. Samoa, 57.9%
11. Tonga, 57.1%
12. Liberia, 56.8%
13. Dominica, 56.7%
14. St. Martin, 56.5%
15. Kyrgyzstan, 56.3%
16. Indonesia, 54.9%
17. Kenya, 54.7%
18. Norfolk Island, 54.5%
19. Botswana, 54.4%
20. St. Maarten, 54.3%
21. Egypt, 53.6%
22. U.S. Virgin Islands, 53.4%
23. Antigua and Barbuda, 52.9%
24. Belize, 52.9%
25. Bahamas, 52.4%
26. St. Lucia, 51.8%
27. Georgia, 51.7%
28. Vietnam, 51.0%
29. Nicaragua, 50.9%
30. Bolivia, 50.6%

## Where most Rotary members are Rotaractors

*Rotaractors as percentage of all members:*

1. Timor-Leste, 85.2%
2. Lesotho, 70.2%
3. Vietnam, 65.5%
4. Sri Lanka, 64.5%
5. Comoros, 61.1%
6. Morocco, 56.1%
7. Ethiopia, 54.7%
8. Solomon Islands, 52.0%
9. Chad, 51.8%
10. Samoa, 51.3%

## Northernmost club

Rotary Club of Longyearbyen, **Norway**






Rotary Club of Puerto Williams, **Chile**

## Southernmost club

MAP ELEMENTS: GETTY, GO-CART.IO, INFOGRAM, FREEPIK


# Largest Rotary clubs in the world

1. Vijayawada Midtown, 737 members
2. Seoul Gangseo, 611
3. Birmingham, 573
4. Oklahoma City, 567
5. Atlanta, 515
6. Seoul-Hansoo, 505
7. Baton Rouge, 480
8. Nashville, 476
9. Kota, 437
10. Tiruchirappalli Success, 415
11. Madison, 413
12. Ahmedabad Skyline, 400
13. San Jose, 400
14. Bombay, 394
15. San Diego, 376
16. Louisville, 370
17. Toledo, 366
18. Wichita, 360
19. Milwaukee, 359
20. Karur, 354




# Global grant project locations

Number of Rotary Foundation global grants that funded humanitarian projects and/or vocational training teams in each country or area (2013-25)




**TOP LOCATIONS**

1. India, 2,936
2. Philippines, 909
3. Taiwan, 741
4. Thailand, 714
5. Korea, 593
6. Brazil, 571

©Rotary

# 30-வது பிறந்தநாளைக் கொண்டாடும் RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி

ரஷீதா பகத்

சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக் கழகத்தில் (SIU) ரோட்டரியின் எட்டாவது அமைதி மையம் தொடங்குவதற்கு முந்தைய நாள், RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டியின் 30-வது பிறந்தநாள் கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்துப் பேசிய RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, “ஒரு ரோட்டரி சங்கம் 30 ஆண்டுகளை நிறைவு செய்வது என்பது கடந்த 30 ஆண்டுகளில் என்ன செய்யப்பட்டது என்பதைத் திரும்பிப் பார்ப்பதற்கான ஒரு அற்புதமான தருணமாகும். ஒரு ரோட்டரி சங்கத்திற்கு 30 என்பது பெரிய வயது இல்லை, உங்களுடையது இன்னும் ஒரு இளமையான சங்கம் தான்!” என்று கூறினார்.

ஆனால் இந்த “இளம் சங்கம்” ஏற்கனவே இரண்டு மாவட்ட ஆளுநர்களையும் ஒரு ரோட்டரி சர்வதேச இயக்குநரையும் உருவாக்கியுள்ளது, “எனவே இது மிக விரைவாகவும் சிறப்பாகவும் வளர்ந்த ஒரு சங்கம் என்பது தெளிவாகிறது.”

ஏற்கனவே செய்த சிறந்த பணிகளுக்காக அவர்களைப் பாராட்டிய அவர், “நாம் ஏற்கனவே செய்தவை அற்புதமாக இருக்கலாம், ஆனால் எதிர்காலத்தில் நாம் என்ன செய்வோம் என்பதுதான் மிகவும் முக்கியமானது. இன்று நமது உலகம் பல போர்களால் சிதைந்துள்ளது. இந்தத் தருணத்தில் அமைதி என்பது நமது உலகின் மிகப்பெரிய சவால்களில்ஒன்றாகும்,” என்றார்.

தனது தலைவர் ஆண்டைத் திட்டமிட அவருக்கு வெறும் இரண்டு வாரங்களே இருந்தபோதிலும், அமைதியைத் தனது முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுத்துள்ளதாக அரெஸ்ஸோ கூறினார். நம்மைச் சுற்றியுள்ள உலகம் மிக வேகமாக மாறி வருவதால், ரோட்டரி சங்கங்களும் மாற வேண்டும் என்று அவர் கூறினார். “இந்த மாற்றத்தை வழி நடத்த, நமக்கு இளைஞர்கள் தேவை, நமக்கு ரோட்டராக்டர்கள் தேவை. ஏனென்றால், சமூகம் எங்கே



செல்கிறது என்பதைப் பார்க்கவும், உணரவும், புரிந்து கொள்ளவும் நாம் மிகவும் வயதானவர்களாகிவிட்டோம். ஆனால் இளைஞர்களால் அந்த மாற்றத்தை உணர முடியும். மாற்றம் தொடங்கும் போதே அவர்கள் அதைக் காண்கிறார்கள், மேலும் நமது சங்கங்களை எவ்வாறு மாற்ற வேண்டும் என்பதையும் அறிவார்கள். சமூகத்தின் முக்கியமான அங்கமாக இருக்க நாம் எங்கு செல்ல வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள்."

"அமைதியுடன் சேர்த்து, ரோட்டராக்டை மேம்படுத்துவதும், அதை ரோட்டரியுடன் ஒருங்கிணைப்பதும் எதிர்காலத்தில் முக்கியமான அம்சங்களாக இருக்கும். நமது அமைதி மையத்திற்கும் சிம்பயோசிஸ் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பு ரோட்டரிக்கு பல அற்புதமான முடிவுகளைத் தரும் என்றும் நான் நம்புகிறேன்" என்றார். சமூகத்திற்குப் பொருத்தமானவர்களாக இருக்க, அமைதி குறித்த கூடுதல் பணிகளைச் செய்யவும், ரோட்டராக்டை ரோட்டரி யுடன் ஒருங்கிணைக்கவும் அவர் சங்க உறுப்பினர்களை வலியுறுத்தினார்.

தலைவர் அரெஸ்ஸோ மற்றும் TRF அறங்காவலர் குழுத் தலைவர் ஹோல்கர் நாக் ஆகிய இருவரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். நாக் சங்கத்தின் 30 ஆண்டுகால சேவைக்காக வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், இளைஞர்களுக்காகவும் ரோட்டராக்டுக் காகவும் சங்கம் எத்தனை திட்டங்களை ஆதரிக்கிறது என்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

அரங்கில் இருந்த ஏராளமான ரோட்டராக்டர்களிடம் உரையாற்றிய அவர், 10 ஆண்டுகளுக்கு முன்பே ரோட்டரி ரோட்டராக்டை மேம் படுத்துதல் திட்டத்தை ஏற்றுக்கொண்ட போதிலும், "நாம் அனைவரும் காண விரும்பும் நிலைக்கு ரோட்டராக்டைக் கொண்டு வர இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. எங்களுக்கு நீங்கள் தேவை, உங்களுக்கு நாங்கள் தேவை; எதிர்கால ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டரி அறக்கட்டளைக்கான நன்கொடையாளர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும், அவர்கள் ஏன் அறக்கட்டளைக்கு நன்கொடை அளிக்கிறார்கள் என்பதையும் நாங்கள் அறிய விரும்புகிறோம், அதற்காக எங்களுக்கு நீங்கள் தேவை," என்றார்.

RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி உறுப்பினர்களிடம் பேசிய அவர், "உங்கள் சங்கத்தில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் (DEI) ஆகியவற்றை நீங்கள் கொண்டாடுவதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ரோட்டரி எதை நோக்கிச் செல்கிறது என்பதை உலகிற்குக் காட்ட இது எவ்வளவு முக்கியம் என்பது நம் அனைவருக்கும் தெரியும். மேலும் வெளிப்படையாக இருக்கும் சங்கங்களும் சமூகங்களுமே எதிர்காலத்தில் மிகவும் வெற்றிகரமான சமூகங்களாக இருக்கும் என்பதை நாம் அனைவரும் அறிவோம்," என்றார்.

TRF-க்கு நிதியளிப்பது குறித்துப் பேசிய அவர், சிறிய மற்றும் பெரிய நன்கொடையாளர்கள் இருவருமே அமைப்பிற்கு மிக முக்கியமானவர்கள் என்றாலும், பணம் என்பது ஒரு பகுதி மட்டுமே என்றார். "திட்டங்கள் என்பது மற்றொரு பகுதி. பெரிய நன்கொடையாளர்களுடன் சேர்ந்து, நாங்கள் பெரிய திட்டங்களையும் எதிர்பார்க்கிறோம். எங்கள் திட்டங்கள் எப்படிச் செயல்படுகின்றன, அவை பலனளிக்கின்றனவா என்பதை நாங்கள் அறிய விரும்புவதால், TRF அளவீடு செய்வதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது."

பலனளிக்காத ஒன்றில் பணத்தைப் போடுவது அர்த்தமற்றது என்று நாக் மேலும் கூறினார். சில சமயங்களில் உலகளாவிய மானியம் (GG) விண்ணப்பச் செயல்முறை "சிக்கலானது" என்பதை அவர் அறிந்திருந்தார், ஆனால் "அதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கிறது. நாங்கள் மிகச்சிறந்த திட்டங்களைச் செய்வதை உறுதிப்படுத்தவும், 5 மற்றும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவற்றின் தாக்கத்தை அளவிடவும் விரும்புகிறோம், ஏனென்றால் ரோட்டேரியர்களின் பணத்தை வீணாக்க நாங்கள் விரும்பவில்லை."

"தெற்காசியாவின் இந்த முதல் அமைதி மையத்திற்கு சிம்பயோசிஸ் ஒரு கூட்டாளராகக் கிடைத்தது ஒரு அதிசயம், ஏனென்றால் நமது மதிப்புகள் அவர்களுடன் மிகச் சரியாகப் பொருந்துகின்றன. நம்



*RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, ஆன்னா, அறங்காவலர் குழுத்தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் சுசேன், PRID மகேஷ் கோட்பாகி மற்றும் RID 3131 ஆளுநர் சந்தோஷ் மராத்தே ஆகியோர் RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி உறுப்பினர்களுடன்.*

அமைதி அறிஞர்கள் ரோட்டரியுடன் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்ய உங்களது (புனே ரோட்டேரியர்கள்) அர்ப்பணிப்பு தேவை.

அறக்கட்டளைத் தலைவர், அனைத்து ரோட்டேரியர்களும் 2012-ம் ஆண்டு சர்வதேசத் தலைவர் சகுஜி தனாகாவின் கருப்பொருளான சேவை மூலம் அமைதி என்பதன் உணர்வை உள்வாங்கிக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.


ஆனால் அவர் அவர்களை எச்சரித்ததாவது, “அமைதியைப் பற்றிப் பேசுவது மட்டும் போதாது. நாம் அமைதிக்காக உழைக்க வேண்டும், மேலும் TRF-ல் ஆதரிக்கப்படும் சேவைத் திட்டங்கள் நிச்சயமாக அமைதிக்கான ஒரு பாதையாகும்.”

ரோட்டரி அமைதி மையம் இந்தியாவில், அதுவும் சிம்பயோசிஸ் சர்வதேச பல்கலைக்கழகம் போன்ற ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில் நிறுவப் படுவது இந்திய ரோட்டேரியர்களுக்கு ஒரு பெருமையும் மகிழ்ச்சியும் ஆகும் என்று TRF அறங்காவலர் பரத் பாண்டியா கூறினார். பிப்ரவரி 2024-ல் TRF ஆல் விருப்பம் தெரிவிக்க அழைக்கப்பட்ட 6 நாடுகளைச் சேர்ந்த 17 நிறுவனங்களில், தென்கொரியாவில் உள்ள ஒரு பல்கலைக்கழகம் மற்றும் புனேயில் உள்ள சிம்பயோசிஸ் என 2 நிறுவனங்கள் இறுதிக்கட்டத்திற்கு வந்தன. பல மதிப்பீடுகள் மற்றும் பரிசீலனைகளுக்குப் பிறகு, இந்த அமைதி மையத்தை நடத்த SIU தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்த மையத்தை இணைந்து நடத்தும் ரோட்டரி மாவட்டங்கள் 3131 மற்றும் 3141-ன் ரோட்டேரியர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார். நிறுவனம் புனேயில் (RID 3131) இருப்பதால், “ஆசியா முழுவதிலும் இருந்து வரும் அமைதி அறிஞர்களை வரவேற்று, அவர்களைத் தங்கள் சொந்த வீட்டில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துவது இந்த மாவட்ட ரோட்டேரியர்களின் முதன்மைப் பொறுப்பாக இருக்கும்.”

முன்பு புனே நகரில் வெளிநாட்டு மாணவர்கள் மோதல்கள், சகிப்புத்தன்மையின்மை மற்றும் பல பிரச்சனைகளைச் சந்திப்பதைக் கண்டதாகச் சிம்பயோசிஸ் நிறுவனர்





*அமைதிச்சுடரை ஏற்றுகின்றனர்: (இடமிருந்து)* PRID A S *வெங்கடேஷ், சுசேன் மற்றும் அறங்காவலர் குழுத்தலைவர் ஹோல்கர் நாக், ஆன்னா மற்றும் தலைவர் அரெஸ்ஸோ.*





(மேல் இடது) RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோ, அறங்காவலர் குழுத்தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் Symbiosis நிறுவனர் S P முஜும்தார் ஆகியோர் ஒரு அமைதித்தூணை (Peace Pole) திறந்து வைக்கின்றனர். PRID மகேஷ் கோட்பாகி இடது ஓரத்தில் உள்ளார். (மேலே) அரெஸ்ஸோ மற்றும் ஆன்னா மரியா ஆகியோர் அமைதிப் பலகையில் (Peace Board) எழுதுகின்றனர். நாக் மற்றும் கோட்பாகி ஆகியோரும் அங்கு காணப்படுகின்றனர். (கீழே: இடமிருந்து வலம்) முன்னாள் அறங்காவலர் குலாம் வஹன்வதி, மற்றும் PRID-க்கள் ராஜு சுப்ரமணியன், A S வெங்கடேஷ் மற்றும் அனிருதா ராய்சௌத்ரி.

டாக்டர் முஜும்தார் கூறியதைக் குறிப்பிட்டுப் பேசிய அவர், "வாழு வாழ விடு என்ற உணர்வைக் கொண்டிருப்பதே அமைதிக்கான உண்மையான வழி" என்பதை இது நிரூபிக்கிறது என்றார்.

RC புனே ஸ்போர்ட்ஸ் சிட்டி உறுப்பினரான PRID மகேஷ் கோட்பாகி பேசுகையில், நாம் அனைவரும் மிகவும் கடினமான காலங்களில் வாழ்கிறோம் என்றும், "இன்று, நான் மிகுந்த உறுதியற்ற தன்மையையும், துருவமுனைப்பையும் பார்க்கிறேன். உக்ரைன்-ரஷ்யா, சூடான், மியான்மர், ஹைட்டி அல்லது வெனிசுலா என எதுவாக இருந்தாலும், இவை அனைத்தும் ஒருவருக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றன," என்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்துடன் நாட்டை விட்டுத் தப்பிக்க முயன்றபோது கடலில் மூழ்கி இறந்த ஒரு சிரியா சிறுவனின் புகைப்படம் உலக மனசாட்சியை உலுக்கியது. "இவை புவிசார் அரசியல் பிரச்சனைகள் அல்ல. இவை நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் வாய்ப்புகளின் தோல்விகள்" என்றார்.

சிம்பயோசிஸில் தனது எட்டாவது அமைதி மையத்தை அமைக்க ரோட்டரி சர்வதேச அமைப்பு தேர்ந்தெடுத்தது குறித்து SIU மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிப்பதாகச் சிம்பயோசிஸ் நிறுவனர் S P முஜும்தார் கூறினார். பல்வேறு படிப்புகளுக்காக உலகம் முழுவதிலுமிருந்து SIU-க்கு வரும் வெளிநாட்டு மாணவர்கள் புனே மற்றும் இந்தியாவில் வரவேற்கப்படுவதை உறுதி செய்யத் தான் நீண்ட காலமாக மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சிகளை அவர் விவரித்தார். இந்த அமைதி மையம் மோதல் தீர்வில் தீவிரமாகப் பணியாற்றும் அறிஞர்களை உருவாக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.



RID 3131-ன் கண்ணோட்டத்தை வழங்கிய DG சந்தோஷ் மராத்தே, இது "ரோட்டராக்ட் மற்றும் இன்ட்ராக்ட் உறுப்பினர் சேர்க்கை அல்லது சேவைத் திட்டங்கள் என இரண்டிலும் மிகச்சிறந்த செயல்பாடு கொண்ட மாவட்டங்களில் ஒன்றாகும்" என்றார். "தற்போது, எங்களது சங்கங்கள் 3,000 வெவ்வேறு சேவைத் திட்டங்களைச் செய்து வருகின்றன, மேலும் ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் செய்யும் உலகளாவிய மானியங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது மானியங்களின் எண்ணிக்கை அல்லது மதிப்பைப் பற்றியது மட்டுமல்ல; எங்களது 100 சதவீத சங்கங்களும் ஈடுபடுவதை உறுதி செய்வதே எங்களது முயற்சி" என்றார். நிதி கண்டறிவதிலோ அல்லது செயல்படுத்தும் கூட்டாளர்களைக் கண்டறிவதிலோ அல்லது திட்டங்களை நிறைவேற்றுவதிலோ ஒரு பங்கை வகிக்கச் செய்கிறோம். நாங்கள் அமைதிக்காகவும் பணியாற்றி வருகிறோம்."

நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ரோட்டராக்ட் பிரதிநிதி (DRR) த்விஜேஷ் நாசிக்கர், மாவட்டத்தின் ரோட்டராக்டர்கள் "மண்டலம் 7-ல் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றனர். எங்களிடம் 111 ரோட்டராக்ட் சங்கங்களும் 2,300-க்கும் மேற்பட்ட ரோட்டராக்டர்களும் உள்ளனர்," என்றார். இந்த ஆண்டு, அவர்களின் முதன்மையான கவனம் தொழில்முறை மேம்பாட்டில் இருந்தது; பல உயிர்களைக் காக்கக்கூடிய ஒரு பெரிய CPR பயிற்சியையும் அவர்கள் செய்து வந்தனர். அவர்களின் திருஷ்டி திட்டம் ரோட்டராக்ட் செய்திகளில் சித்தரிக்கப்பட்டது அவர்களுக்குப் பெருமை அளிப்பதாக இருந்தது, மேலும் அவர்கள் அமேசானின் சமூகக் கூட்டாளராக மாற ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட உள்ளனர்.

டாக்டர் ராஜீவ் யெராவடேகர், SIU-வின் சுகாதார மற்றும் உயிரியல் மருத்துவ அறிவியல் பீடத்தின் டீன், ரோட்டரி மற்றும் PRID கோட்பாகி



*இடமிருந்து: அன்னா மற்றும் தலைவர் அரெஸ்ஸோ, அறங்காவலர் குழுத்தலைவர் நாக், அறங்காவலர் பரத் பாண்டியா, சூசேன், PRID வெங்கடேஷ் மற்றும் RID 3234 DG வினோத் சரோகி.*

ஆகியோர் எப்போதும் SIU வழங்கும் சுகாதார சேவைகளுக்கு, குறிப்பாக ஏழை நோயாளிகளுக்கும் அதன் டயாலிசிஸ் மையத்திற்கும் ஆதரவளித்து வருவதற்காக நன்றி தெரிவித்தார். 900 படுக்கைகள் கொண்ட SIU மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் அண்டை கிராமங்களுக்கு உயர்தர மருத்துவச் சேவைகளை இலவசமாக வழங்குகிறது.

சிம்பயோசிஸின் இணைவேந்தர் டாக்டர் வித்யா எரவடேகர், ரோட்டரியுடனான பல்கலைக்கழகக் கூட்டாண்மையை வரவேற்றார். சங்கத்தலைவர் சுஷ்ருத் சர்தேசாய் பேசுகையில், சங்க உறுப்பினர்களுக்கு 30 ஆண்டுகளை நிறைவு செய்வது என்பது “வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல, அது நன்றியுணர்வு, பெருமை மற்றும் கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்பதற்கான தருணங்கள்,” என்றார்.

படங்கள்: ரஷீதா பகத்
வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# மும்பை பள்ளி ஒன்றில் கணினி ஆய்வகம்

### ரோட்டரி குழுச் செய்திகள்



RID 3142 DG *ஹர்ஷ் மகோல் (வலமிருந்து 2-வது) மற்றும்* PDG *சந்திரசேகர் கோல்வேகர் (இடது) புதிய கணினி ஆய்வகத்தில்.*

கல்யாணில் உள்ள மாதோஸ்ரீ ரக்மாபாய் கெய்க்வாட் வித்யாலயாவில், 27 மடிக்கணினிகள் மற்றும் துணைக்கருவிகளுடன் கூடிய கணினி ஆய்வகத்தை DG ஹர்ஷ் மகோல் திறந்து வைத்தார். சக்ஷம் திட்டத்தின் கீழ், RC உல்ஹாஸ்நகர், RID 3142-ல் அமைக்கப்பட்ட இந்த வசதி, 800 மாணவர்களுக்குப் பயனளிக்கும்.

மற்றொரு முயற்சியாக, தொழில் வழிகாட்டுதல், எல்பிஜி பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் நல்வாழ்வு குறித்த அமர்வுகளுடன், ரோட்டரி இளைஞர் நிகழ்ச்சி (RYPEN) ஒன்றை இந்த மன்றம் பள்ளியில் ஏற்பாடு செய்தது. குல் அத்வானி இந்தத் திட்டத்தின் தலைவராக இருந்தார்.■

# 60,000 பெண்களுக்கு மறுபயன்பாட்டு மாதச் சுழற்சிப் பொதிகள்

கிரண் ஜெஹரா

இந்திய ஸ்டேட் வங்கி, யுனிபேட்ஸ் அறக்கட்டளை யுடன் இணைந்து, மாதச் சுழற்சித் தூய்மையை முன்னிறுத்துதல், தெலங்கானா முழுவதுமுள்ள மாணவிகளின் கல்வியை ஆதரித்தலை இலக்காகக் கொண்ட சக்தி என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது RC ஹைதராபாத் ஈஸ்ட், RID 3150.

ரூ.2.5 கோடி செலவிலான இந்தத் திட்டம் இந்த மாநிலம் முழுவதுமுள்ள 2,000 பள்ளிகள், கல்லூரிகளில் சுமார் 60,000 பெண்களுக்கு மறுபயன்பாட்டுச் சானிட்டரி நாப்கின் பொதிகளை வழங்கியது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டம் வீரனாரி சகலி இலம்ம பெண்கள் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டது. அங்கு 7,000 மாணவர்கள் சானிட்டரி பேட் பொதிகளைப் பெற்றார்கள். வழங்கல் நிகழ்ச்சியில் ஹைதராபாத் மாவட்ட ஆட்சித் தலைவர் ஹரி சந்தனா தாசரி, DG ராம் பிரசாத், பல்கலைக்கழக இணை வேந்தர் சூர்யா தனஞ்ஜய் பங்கேற்றார்கள்.

இந்நிகழ்ச்சியில் பேசிய சங்கத் தலைவர் கோவிந்த் புட்டா, MHM முன்னெடுப்பானது வழங்கலைத் தாண்டிச் செல்வது என்றும், அது தொலைநோக்குத் தாக்கத்தில் கவனம் செலுத்துவதாகவும் சொன்னார்.

ஒவ்வொரு பொதியும் 12 முதல் 16 மாதங்கள் வரும்படி வடிவமைக்கப் பட்டுள்ளது. இது பயன்படுத்தித் தூக்கி எறியக்கூடிய சானிட்டரிப் பொருட்களுக்கு ஒரு விலை குறைந்த, சுற்றுச்சூழலுக்கு இதமான மாற்றாகும். இந்தத் திட்டம் பொருட்களை வழங்குவதுடன், பேட்களின் பயன்பாடு, துவைத்தல், உலர்த்துதல், சேமித்தல் பற்றிய விழிப்புணர்வு அமர்வுகள், செய்முறை விளக்கப் பயிற்சிகளையும் வழங்குகிறது.

இந்தச் சங்கம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக அரசு அமைப்புகள், பள்ளிகள், உள்ளூர் NGOக்களுடன் இணைந்து செயல்படுகிறது. SBI தன் CSR திட்டத்தின் வழியாக இதை ஆதரிக்கிறது. யுனிபேட்ஸ் அறக்கட்டளை பொருட் களையும் பயிற்சி ஆவணங்களையும் வழங்குகிறது.

இந்தத் திட்டம் மாதச் சுழற்சி தொடர்பான விடுப்புகளைக் குறைக்கவும், தூக்கி எறியப்படுகிற சானிட்டரிக் குப்பைகளைக் குறைக்கவும் முயல்கிறது. இந்தத் திட்டம் வழங்கல் தரவுகள், பயனர் கருத்துகளின்மூலம் கண்காணிக்கப்படும். மாணவர் வருகை மற்றும் நலத்தில் அதன் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக அவ்வப்போது கணக்கெடுப்புகள் நடத்தப்படும்.■

*சானிட்டரி நாப்கின் பொதிகள் விநியோக நிகழ்வில், RC ஹைதராபாத் ஈஸ்ட்-ன் உறுப்பினர்களுடனும் அதன் தலைவர் கோவிந்த் புட்டாவுடனும் (வலமிருந்து மூன்றாவது) DG S V ராம் பிரசாத் (இடமிருந்து இரண்டாவது) உள்ளார்.*



# RID 3212-யின் பெண்களுக்கான விளையாட்டு போட்டி

ரஷீதா பகத்

ரோட்டரியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க, RI 3212 தலைமை ஒரு புதுமையான முயற்சியாக பெண் ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டேரியர்களின் மனைவிகள், மகள்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட த்ரோபால் போட்டி மூலம் அவர்களை ஈடுபடுத்தி உற்சாகப்படுத்தியது.

இந்தத் தனித்துவமான விளையாட்டு முயற்சியுடன் இணைக்கப்பட்ட ஷீரோஸ் த்ரோபால் டோர்னமெண்ட் என்ற இத்திட்டம், மாவட்டம் முழுவதும் சமூக ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் மற்றும் நிறுவன ரீதியாகவும் ஒரு சக்திவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரோட்டரியின் சர்வதேசத்தின் DEI தொலைநோக்கைச் செயல்படுத்தும் நோக்கில், DG தினேஷ் பாபு பெண்களின் பங்களிப்பு ரோட்டரியில் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், சேவைத் திட்டங்கள் உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளிலும் அவர்கள் அர்த்தமுள்ள பங்காளராக மாறும் ஒரு ரோட்டரி ஆண்டைக் கற்பனை செய்தார். பெண்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த, த்ரோபால் போட்டிகளின் போது ஆளுநர் மற்றும் உதவி ஆளுநர்களின் அதிகாரப்பூர்வ உடைகள் இளஞ்சிவப்பு நிறத்தில் வடிவமைக்கப்பட்டன. இது மாவட்ட செயல்பாடுகளில் பெண்கள் முன்னணியில் இருப்பார்கள் என்ற தெளிவான செய்தியை அளித்தது என்று RID 3212 ரோட்டரி செய்தி ஒருங்கிணைப்பாளர் M பாலமுருகன் தெரிவித்தார்.

பெண்களுக்கான இந்தத் த்ரோபால் போட்டியை தூத்துக்குடி டிரெயில்பிளேசர்ஸ் ரோட்டரி சங்க உறுப்பினர் மலர்விழி ஏற்பாடு செய்தார். ஆனால் மாவட்ட ரோட்டரி குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை இதில் பங்கேற்கச் செய்வது எளிதாக இல்லை. ஆகஸ்ட் 2025-ல் கன்னியாகுமரி மாவட்ட சங்கங்களுக்கு முதல் போட்டி அறிவிக்கப்பட்டபோது, பெண்களை திரட்டுவது சவாலாக இருந்ததாக அவர் நினைவு கூறுகிறார். சங்கத்தலைவர்கள் தனிப்பட்ட




RC தூத்துக்குடி ட்ரெயில்பிளேசர்ஸ் அணியின் வெற்றியாளர்கள் கோப்பையுடன்.






முறையில் தொடர்பு கொள்ளப்பட்டு, ரோட்டேரியர்களின் பெண் குடும்ப உறுப்பினர்களிடையே ஆர்வத்தை உருவாக்கவும், பங்கேற்பதற்கான தன்னம்பிக்கையை வளர்க்கவும் வலியுறுத்தப்பட்டனர். எளிதில் பங்கேற்க நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படவில்லை; மேலும் பெண்களின் பொறுப்புகளை கருத்தில் கொண்டு போட்டிகள் வார இறுதிகளில் மட்டும் நடத்தப்பட்டன.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க ஆளுநரின் மனைவி ரம்யாப்ரியா ஆரம்பத்திலிருந்தே தனிப்பட்ட முறையில் ஈடுபட்டார். முதல் போட்டியில் காட்டப்பட்ட உற்சாகம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது என்று பாலமுருகன் கூறினார். “பங்கேற்பாளர்கள் விதிகளை விடாமுயற்சியுடன் பின்பற்றினர், ஆற்றலுடன் போட்டியிட்டனர் மற்றும் விளையாட்டு வீர உணர்வை வெளிப்படுத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாக, வெற்றியில் கவனம் செலுத்துவதை விட நட்புறவு உணர்வே மேலோங்கி இருந்தது.”

இதன் முடிவுகள் வியக்கத்தக்கதாக இருந்தன; ஒரே நகரத்தில் பல ஆண்டுகளாக வசித்தும், இதுவரை ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத பெண்கள் கூட, இந்தப் போட்டியின் மூலம் அர்த்தமுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர். விளையாட்டு மைதானம் ஒரு பிணைப்பை உருவாக்கும் தளமாக மாறியது.

நேர்மறையான வரவேற்பால் உற்சாகமடைந்த முக்கிய குழு, இந்த நிகழ்வை விரிவுபடுத்தி விருதுநகர், ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி உள்ளிட்ட ஏழு வருவாய் மாவட்டங்களுக்கு எடுத்துச் சென்றது. இதில் 27 ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 12 முதல் 60 வயது வரையிலான 200 பெண்கள் பங்கேற்றனர். “உற்சாகம் வெளிப்படையாகத் தெரிந்தது; சில அணிகள் பயிற்சிக்காக தொழில்முறை பயிற்சியாளர்களைக் கூட நியமித்தன. பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட டி-சர்ட்கள், தேசிய அளவிலான விளையாட்டு நிகழ்வுகளை நினைவு படுத்தும் வகையில் ஒரு துடிப்பான, போட்டிச் சூழலை உருவாக்கின,” என்று அவர் கூறினார்.

இந்தத் தொடரின் ஒரு வரவேற்கத் தக்க அம்சம் என்னவென்றால், இது விரைவில் குடும்ப உறுப்பினர்கள் வீரர்களை ஆதரிக்கத் திரண்டு வரும் ஒரு கொண்டாட்டமாக மாறியது. கணவர்கள், தந்தையர்கள் மற்றும் குழந்தைகள் மைதானத்திற்கு வெளியே இருந்து உற்சாகப்படுத்தினர், இது ஒரு திருவிழா போன்ற சூழலை உருவாக்கியது.

போட்டியின் இறுதிப் போட்டியில் RC ஈஸ்ட் கோஸ்ட் ராம்நாட், RC தூத்துக்குடி டிரெயில்பிளேசர்ஸ் மோதின, இதில் தூத்துக்குடி அணி கோப்பையை வென்றது என்று பாலமுருகன் மேலும் தெரிவித்தார்.

ஆனால் இந்த விளையாட்டு நிகழ்வின் தாக்கம் மைதானத்தைத் தாண்டியும் இருந்தது; பெண்கள் ரோட்டரியுடன் தங்களுக்கு ஒரு பிணைப்பு இருப்பதை உணர்ந்ததோடு மட்டுமல்லாமல், அவர்களில் பலர் இந்த நிகழ்வின் மூலம் தாங்கள் ஒரு காலத்தில் நேசித்த விளையாட்டுக்கு மீண்டும் திரும்பியதாக உணர்ந்தனர்.

ஏற்பட்ட தொடர்புகள் மற்றும் உருவான நட்பின் காரணமாக, சிவகாசி பைரோசிட்டி அணியின் உறுப்பினர்கள் இணைந்து ஒரு உள்ளூர் பள்ளிக்கு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை வழங்கினர். “நட்புறவு எவ்வாறு சேவையாக மாறும் என்பதற்கு இது ஒரு சான்று. பல சங்கங்களில், போட்டியில் பங்கேற்ற பெண்கள் முறையாக ரோட்டரியில்

உறுப்பினர்களாக இணைந்தனர்," என்று ஆளுநர் தினேஷ் பாபு கூறினார்.

"நான் உறுதியாக நம்பும் ரோட்டரி குடும்பத்தில் உள்ள பெண்களிடையே நட்பை வலுப்படுத்துவது என்ற எனது முதன்மை நோக்கம் நிறைவேறியதில் மகிழ்ச்சி அடைகிறேன்," என்று கூறிய அவர், வருங்கால மாவட்டத் தலைவர்கள் இந்த முயற்சியைத் தொடர்ந்து அதன் வெற்றியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார். ஏனெனில் "புதுமையான தலைமை மற்றும் புதிய யோசனைகள் மூலம் நாம் ரோட்டரியை வலுப்படுத்தவும் விரிவுபடுத்தவும் முடியும். விளையாட்டு எவ்வாறு உறுப்பினர் சேர்க்கை, ஈடுபாடு மற்றும் சமூகத் தாக்கத்திற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயல்படும் என்பதற்கு இந்தப் போட்டி ஒரு சான்றாகும்."




DG J *தினேஷ் பாபுவும் அவரது மனைவி ரம்யாப்ரியாவும் இளம் வீரர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.*

இது பெண்களின் வலிமையைக் கொண்டாடும், ஒற்றுமையை வளர்க்கும் மற்றும் ரோட்டரியின் நட்புறவு மற்றும் சேவை உணர்வை வலுப்படுத்தும் ஒரு இயக்கத்தின் தொடக்கமாக இருக்கும் என்று அவர் நம்பினார்.■

இரங்கல்

# பெருந்தன்மையும் சேவையும் கலந்த வாழ்க்கை

## ரோட்டரி செய்திக்குழு



PDG VR *முத்து*

மார்ச் 4, 2026 அன்று, RID 3212ன் முன்னாள் ஆளுநர் V R முத்து இயற்கை எய்தினார். பெருந்தன்மை, தலைமைப்பண்பு மற்றும் TRF-க்கான தொடர்ந்த உறுதிப்பாடு நிறைந்த ஒரு மரபை அவர் விட்டுச்சென்றார். 1981-லிருந்து RC விருதுநகர் உறுப்பினரான இவர் 2021-ல் இவருடைய மாவட்டத்தின் முதல் AKS உறுப்பினரானார். Zone 5-ன் "இப்போதே இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைப்போம்" ஒருங்கிணைப்பாளரான (2025–28) இவர் ரோட்டரியின் பன்னாட்டுப் பணியைத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் நிறைவேற்றிவந்தார். பால் ஹாரிஸ் 711 சங்க உறுப்பினரான இவர் ரோட்டரியின் வரலாற்று வேர்களைப் பாதுகாக்கவும் பங்களித்தார். பலருக்கு அவர் ஒரு தலைவராக மட்டுமின்றி நண்பராக, வழிகாட்டியாகவும் இருந்தார்.

முத்து அண்ணாச்சி என்று அன்புடன் அழைக்கப்பட்ட இவர் தன் நெருங்கிய, பணிவான அணுகுமுறைக்காகப் பரவலாக நேசிக்கப்பட்டார். 2022–23ல் இவர் DG-ஆகச் செயல்பட்ட போது, இவருடைய மாவட்டம் TRF-க்கு $800,000 என்னும் மிகச் சிறந்த தொகையைப் பங்களித்தது. இவர் முன்னிறுத்திய 10 மாவட்டத் திட்டங்கள் பெரும்பாலும் பெண்கள், இளைஞர்களை உயர்த்துதல், பொருளுள்ள, அளவிடக்கூடிய தாக்கத்தை உண்டாக்குதலில் கவனம் செலுத்தின.

பிரேம் குமார் திட்டம், யாதுமானவள், மற்றும் பஞ்ச் திட்டம் போன்ற முன்னெடுப்புகளின் வழியாக PDG முத்து நூற்றுக்கணக்கான கிராமப் பெண்களுக்குத் தன்னம்பிக்கை, தகவல் தொடர்பு, தகவலறிந்த வாழ்க்கைத் தீர்மானங்களை எடுக்கும் திறன் ஆகியவற்றை வழங்கி ஆற்றலளித்தார். அவருடைய RYLA நிகழ்ச்சிகள் இளைஞர்களைத் தொழில்முனைவின்மீது ஆர்வம் காட்டச்செய்தன.

VVV & சன்ஸ் உணவு எண்ணெய்களின் மேலாண் இயக்குநரான இவர், இந்தியாவிலும் பன்னாட்டு இந்தியச் சமூகங்களிடையிலும் பல வீடுகளில் நலமான சமையல் என்றாலே இதயம் பிராண்ட்தான் என்கிற அளவுக்கு அதற்கு நற்பெயர் பெற்றுத்தந்தார்.

ரோட்டரி நியூஸ் அவருடைய நெருக்கமான, பெருந்தன்மையான பழகுமுறையை நேரடியாகக் காணும் நல்ல வாய்ப்பைப் பெற்றது. அவர் இந்த இதழைப் பேரார்வத்துடன் ஆதரித்தார் – சிறப்பாக எழுதப்பட்ட கதைகளை நன்கு பாராட்டினார், எப்போதும் விளம்பரங்களின் வழியாகத் தன் ஆதரவை வழங்க ஆயத்தமாக இருந்தார்.■

Rotary PEOPLE OF ACTION

# நடமாட உதவும் பரிசு

ரோட்டரி செய்திக்குழு

பெங்களூரில் நடைபெற்ற மிகப் பெரிய ஜெய்ப்பூர் கை, கால் முகாமுக்கு வந்த பலருக்கு, “அந்த அனுபவம் உறுதியில்லாத நிலையில் தொடங்குகிறது. பல நேரங்களில் இவர்களுடைய பயணம் பல ஆண்டு உடல் வரம்புகள், பொருளாதாரச் சிரமங்கள் மற்றும் அமைதியான நம்பிக்கையிழப்பால் நிரம்பியுள்ளது. ஆனால், இங்கிருந்து கிளம்பும்போது, அவர்களில் சிலர் மீண்டும் நடக்கிறார்கள்” என்கிறார் கால் நூற்றாண்டுக்கும் மேலாக இந்த முன்னெடுப்பை நடத்திவரும் ரோட்டரி பெங்களூர் பீன்யா, RID 3192, தலைவர் மீனாட்சி சரத்.

இப்போது 28-வது ஆண்டில் இருக்கும் இந்த ஆண்டு முகாம் உதவிப் பராமரிப்புக்கு வழியில்லாதவர்களுக்கான தொடர்ந்த உதவியாகிவிட்டது. இதனால் பலன் பெறுவோர் பெரும்பாலும் ஏழைகள், விபத்துகளால், பிறவுச் சூழ்நிலைகளால், நீரிழிவு தொடர்பான சிக்கல்களால் கை, காலை இழந்து உதவி நாடுகிறவர்கள்.



*RC பெங்களூரு பீன்யாவின் மாபெரும் செயற்கை உறுப்பு முகாமில், தனது LN4 செயற்கை கையைப் பொருத்திக்கொண்ட ஒரு சிறுவன் எழுத முயற்சிக்கிறான்.*

இந்த முகாமில், ஜெய்ப்பூரைச் சேர்ந்த செயற்கைக் கை, கால் வல்லுனர்கள் ஃபிசியோதெரபிஸ்ட்கள், ரோட்டரி தன்னார்வலர்களுடன் இணைந்து பணியாற்றி இவர்களுக்குச் செயற்கைக் கை, கால்கள், காலிப்பர்கள், ஊன்றுகோல்கள் மற்றும் LN4 செயற்கைக் கைகளை இலவசமாக வழங்குகிறார்கள். “இந்தப் பணி மருத்துவம் சார்ந்தது. ஆனால், பலன்கள் பல நேரங்களில் ஆழமான மனம் சார்ந்தவை. முதன்முறையாகப் பிறர் உதவி இன்றி நிற்கிற ஒரு குழந்தை, அல்லது, மீண்டும் சம்பாதிப்பதை நோக்கி முதல் படி எடுத்துவைக்கிற ஒரு கூலித் தொழிலாளி... இந்தக் கணங்கள் உங்கள் மனத்தில் நின்றுவிடும். அவர்கள் எங்களுக்கு அளிக்கிற மன நிறைவை விளக்குவது கடினம்” என்கிறார் இவர்.

கடந்த பல ஆண்டுகளாக இந்த முகாம் மருத்துவத் தொழில் வல்லுனர்கள், தன்னார்வலர்கள், கொடையாளர்கள் மற்றும் கூட்டாளர் அமைப்புகள் இணைந்து பணிபுரிகிற தொடர்ந்த பணியாக வளர்ந்துள்ளது. இந்தத் திட்டத்தின் தலைவர் கௌதம் சந்த் நஹார் இதை “ஓர் ஆழமான மனித அனுபவம்” என்றும், “மீண்டும் கிடைக்கும் நடமாட்டம் மற்றும் கண்ணியக் கணங்களில் இதன் உண்மைத் தாக்கம் உள்ளது” என்றும் விளக்குகிறார்.

இந்தத் திட்டத்தின் தலைவரான வசந்த்குமார் G, “பலன் பெறுவோருக்கு இந்த மாற்றம் உடனடியானது. நீரிழிவால் கை, காலை இழந்த ஒருவர், என் வாழ்க்கை முடிந்துவிட்டது என்று நினைத்தேன். ஆனால் இன்று, அது மீண்டும் தொடங்கியுள்ளதாக உணர்கிறேன் என்று சொன்னது எனக்கு நினைவிருக்கிறது. செயற்கைக் கை, காலுக்கான வாய்ப்புகள் குறைவாக உள்ள நலப்பராமரிப்பு அமைப்பில் இந்த முகாம் ஓர் எளிய, ஆனால் ஆற்றல் மிக்க நன்மையை வழங்குகிறது: பலருக்கு மீண்டும் நடப்பதற்கான ஒரு சுதந்திரத்தை அளிப்பதாக உள்ளது,” என்கிறார்.■

# அறிவியலுக்கு ஊக்கம்தரும் கண்காட்சி

V முத்துகுமரன்

மனித குலம் ஆராய்ச்சி நடத்துவதற்கும், மற்ற கிரகங்களில் காலடி பதிப்பதற்கும், விண்மீன்கள் மண்டலத்தில் மனிதர்கள் வாழ்வை விரிவுபடுத்துவதற்கும் அறிவியல் ஒரு நம்பகமான வழிகாட்டியா ? முடிவில்லாத கண்டு பிடிப்புகளும், புதுமைகளும் பூமியை நம் அனை வருக்கும் சிறந்த இடமாக மாற்றுமா? இதுபோன்ற தொடர் கேள்விகள் பலவற்றிற்கு, இந்தியா முழுவதும் உள்ள 120 பள்ளிகளைச் சேர்ந்த 150 குழுக்களாகப் பிரிக்கப்பட்ட (6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான) 600 மாணவர்கள் பிக் பேங்க் 3-0 நிகழ்வில் திட்ட மாதிரிகள், பரிசோதனைகள், வடிவமைப்புடன் கூடிய விளக்கப்படங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்மாதிரிகள் மூலம் பதில்களை வழங்கினர்.

கோயம்பத்தூர் வெஸ்ட் ரோட்டரி சங்கத்தின் முன்னோடி திட்டமான இந்த மூன்றாம் பதிப்பு அறிவியல் கண்காட்சியில் 22 மாநிலங்களைச் சேர்ந்த பள்ளி குழுவினர் 712 திட்டங்களை சமர்பித்தனர். ஒவ்வொரு குழுவிலும் நான்கு மாணவர்கள், ஒரு வழிகாட்டி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். முதல் கட்ட ஆய்வில் இந்தியா, இலங்கை, தென்கொரியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த 20 பேர் அடங்கிய நடுவர் குழு, ஜனவரியில் கோயம்புத்தூரில் நடைபெற்ற இரண்டு நாள் பிக் பேங்க் 3.0 கண்காட்சிக்கு 157 குழுக்களைத் தேர்ந்தெடுத்தது. “அறிவியல் கண்காட்சியில் தொழில்துறை, கல்வித்துறை, அரசு மற்றும் ஆராய்ச்சித் துறைகளைச் சேர்ந்த 10 உறுப்பினர்கள் அடங்கிய நடுவர் குழு ஒவ்வொரு ஸ்டாலுக்கும் சென்று பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களது திட்டத்தின் நோக்கம், கருத்துகள் மற்றும் புதுமையான யோசனைகளை கேட்டறிந்தது”



*இடமிருந்து: RC கோயம்புத்தூர் வெஸ்ட் தலைவர் C V தேவதாஸ், Wealth-I CEO (UAE) விக்னேஷ் விஜயகுமார், மேஜர் ஜெனரல் (ஓய்வு) ராஜீவ் கிருஷ்ணன், கடந்த AG C K சஷி குமார், முன்னாள் தலைவர் துரை நாராயணசாமி மற்றும் ஆஷா தேவதாஸ்.*

என்று திட்ட அமைப்பாளர் R நவநீத கிருஷ்ணன் கூறினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் 1,200 பள்ளிகளைச் சேர்ந்த 6,000 மாணவர்கள், தங்களது அறிவியல் திட்டங்களை ஆன்லைன் மூலம் காட்சிப்படுத்தினர். “அவர்களில் 350 பள்ளிகளைச் சேர்ந்த 450 குழுவினர் பிக் பேங்க் கண்காட்சிக்கு தேர்வுசெய்யப்பட்டனர் என்றும் அவர் கூறினார். சங்கத்தின் தலைவர் C V தேவதாஸ் மேலும் கூறுகையில், “2024 ஆம் ஆண்டு எங்கள் சங்கக் கூட்டத்தில் அப்போது தலைவராக இருந்த துரை நாராயணசாமி, பள்ளி மாணவர்களிடையே அறிவியல் ஆர்வத்தையும், புதுமையான சிந்தனைகளையும் தூண்டிவிடும் வகையில் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கூறினார். அப்போது அனைவரும் ஒன்று சேர்ந்து எடுத்த முடிவுதான் நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்காக “பிக் பேங்க் “அறிவியல் கண்காட்சியை நடத்துவதாகும். முதல் பதிப்பில் ஆன்லைன் மூலம் தமிழ்நாட்டிலிருந்து 120 திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இறுதியில் 80 குழுவினர் கோயம்புத்தூர் பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் தங்களது அறிவியல் திட்டங்களை காட்சிப் படுத்தினர்.

எனினும் 2025-ம் ஆண்டில் பிக் பேங்க் இரண்டாவது பதிப்பில் அதாவது கண்காட்சியில், தென்னிந்தியாவிலிருந்து 120 திட்டக்குழுக்கள் பங்கேற்றன. ஆன்லைன் மூலம் 300 திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. அவற்றில் ஒன்று மகாராஷ்டிரத்திலிருந்து பெறப்பட்டது. முதல் இரண்டு பிக் பேங்க் அறிவியல் கண்காட்சிகளும் ஒரு நாள் நிகழ்வாக நடைபெற்றது. பின்னர் நல்ல வரவேற்பு இருக்கவே இரண்டு நாள் கண்காட்சியாக நீட்டிக்கப்பட்டது என்று சங்கத்தின் தலைவர் கூறினார்.

“கண்காட்சியில் போட்டியிடும் அணிகள் புதுமையான கருத்துக் களுடன் சமூகங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கான தீர்வுகளையும் வழங்க வேண்டும். மேலும் அவர்களது தயாரிப்புகள் அல்லது சேவைகள் ஐ.நா.வின் நிலையான வளர்ச்சிக்கு எந்த வகையில் பங்களிக்கிறது







*மாணவர்களால் காட்சிப்படுத்தப்படும் அறிவியல் திட்டங்கள்.*

என்பதையும் தெரிவிக்க வேண்டும்” என்று பிக் பேங்கின் அறிவுக் கூட்டாளியான, ஐ எக்ஸ்ப்ளோர் அறக்கட்டளையின் இயக்குநருமான நவநீதகிருஷ்ணன் கூறினார்.

தில்லியில் உள்ள ராணுவ பொதுப் பள்ளி வெற்றியாளர்களாக உருவெடுத்ததால், அவர்கள் குழு இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் IEEE ஜூனியர் ஐன்ஸ்டைன் போட்டியில் பங்கேற்க இந்தோனேசியா செல்கிறது. அவர்களுக்கான விமான கட்டணம், தங்கும் இடம் மற்றும் இதர போக்குவரத்து செலவுகளை எங்களது சங்கம் ஏற்றுள்ளது. இதற்காக ரூ.5 லட்சம் பயண மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர அவர்களுக்கு ரொக்கப் பரிசாக ரூ.40,000 கிடைக்கும் என்று நவநீதகிருஷ்ணன் கூறினார்.

கடந்த ஆண்டு, பள்ளி மாணவர்களுக்கான இந்த உலகளாவிய போட்டியில் வெற்றிபெற்ற பள்ளிக் குழுவினர் ரூ.3.5 லட்சம் நிதியுதவியுடன் மலேசியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அந்த

குழுவினர் போட்டியில் பங்கேற்று முதல் பரிசை தட்டிச் சென்றனர்.

தமிழ்நாட்டில் அருப்புக்கோட்டையில் உள்ள தேவாங்கர் மகளிர் மேனிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்த மாணவி டி.திவ்யதர்ஷனா கூறுகையில், "எங்கள் குழுவின் திட்டத்தை சமர்ப்பிக்கும்போதும், பிற மாநில மாணவர்களுடன் கலந்துரையாடும்போது அதிக நேரத்தை செலவிட்டோம். வடஇந்திய மாணவர்கள் குழுவினரிடம் பேசும்போது பல தகவல்களை நாங்கள் பகிர்ந்துகொண்டோம், பல புதிய யோசனைகளை அவர்களிடமிருந்து நாங்கள் கற்றுக்கொண்டோம்" என்றார்.

தில்லியில் உள்ள பலவந்த்ராய் மேத்தா வித்யா பவனில் படிக்கும் தேவேஷ்குப்தாவின் தாயார் அனுஷ்கா, "என் மகன் தனது யோசனைகளை நம்பிக்கையுடன் முன்வைக்கும் வரை அவனது அறிவுத்திறன் மற்றும் படைப்பாற்றலை நான் உணர்ந்திருக்கவில்லை. அவனது செயல் எனக்கு உண்மையிலேயே பெருமை அளிக்கிறது"என்று கூறினார்.

"எங்களது அறிவியல் கண்காட்சி அகில இந்திய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த ஆண்டு நடைபெறும் அறிவியல் கண்காட்சிக்கு 1,000-த்துக்கும் மேலான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். வடஇந்தியாவைச் சேர்ந்த மாணவர்கள் இதில் பெருமளவில் பங்கேற்பார்கள் என்று நம்புகிறோம். கடந்த முறை திட்டக்குழுக்களில் 40 சதவீதம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். மீதமுள்ளவர்கள் நாட்டின் இதர பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்களில் காஷ்மீரைச் சேர்ந்தவர்களும் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது" என்று தேவதாஸ் கூறினார்.■



RID 3206 DG *செல்லா ராகவேந்திரன் மற்றும்* PDG A V Pathy *ஒரு கண்காட்சி அரங்கில்.*

# பெண்களுக்கு ஆற்றல் வழங்கும் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள்

ரோட்டரி செய்திக்குழு

சவிதா சிந்தர்கர் மிக இளம் வயதில் தனித்து வாழும் தாயாகிவிட்டவர். தன் இரண்டு குழந்தைகளையும் பெற்றோரையும் பார்த்துக்கொள்வதற்கு அவர் மிகவும் சிரமப்பட்டார். ஆனால், அவர் நம்பிக்கை இழக்கவில்லை. RC தியோனர், RID 3141, தன்னுடைய இளஞ்சிவப்புத் தேவதைகள் திட்டத்தின் மூலம் அவருக்கு உதவியது.

சவிதா ஆட்டோரிக்‌ஷா ஓட்டுவதில் தீவிரப்பயிற்சி பெற்று, தன் இளஞ்சிவப்பு ஆட்டோவை ஓட்டுவதற்கான உரிமத்தைப் பெற்றார். ஏற்கெனவே 60 பெண்கள் தங்கள் இளஞ்சிவப்பு ஆட்டோக்களுடன் சாலையில் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள், "மேலும் 200 பேருக்குப் பயிற்சி யாளர்கள் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தில் நான்கு நாள் வகுப்பறை அமர்வும், 20 நாள் சாலை ஓட்டுதல் அமர்வும் இடம்பெறுகின்றன" என்றார் சங்கத்தலைவர் அல்கா மூர்த்தி.

இந்தச் சங்கத்தின் இளஞ்சிவப்பு ஆட்டோ திட்டத்தால், முன்பு ஓர் அடி எடுத்து வைக்கத் தயங்கிய பெண்கள் வழிநடத்தத் தொடங்கினார்கள், தங்கள் சமூகத்தில் பிறரை ஊக்குவித்தார்கள், ரோட்டரி வெறுமனே வாழ்வாதாரங் களுக்கு ஏற்பாடு செய்வதில்லை, "அது இளஞ்சிவப்பு ஆட்டோ முன்னெடுப்பின் வழியாக உண்மையான ஆற்றல் அளித்தலுக்கு வழிகாட்டுகிறது" என்றார் அல்கா.■



DG *மோட்வானி ஒரு* Pink Auto *திட்ட பயனாளியுடன்.*

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## காசியாபாதில் நடமாடும் பல் மருந்தகம்

ஃபெரோலைட் ஜாயின்டிங்க்ஸ் ஆதரவிலான ஒரு CSR முன்னெடுப்பின்கீழ், முராட் நகரிலுள்ள ITS பல் மருத்துவக் கல்லூரிக்கு ரூ.55 லட்சம் மதிப்புள்ள பல் பராமரிப்பு வேன் ஒன்றை வழங்கியது RC காசியாபாத் ஸ்மார்ட் சிட்டி, RID 3012. இந்த வேன் காசியாபாத், தில்லியின் சில பகுதிகள், அருகிலுள்ள கிராமப்புறப் பகுதிகளில் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 2,500 ஏழை நோயாளிகளுக்கு இலவசப் பல் மருத்துவத்தை வழங்கும்.




*சங்க உறுப்பினர்கள், மருத்துவமனை ஊழியர்களுடன் இணைந்து, பல் மருத்துவ வாகனத்தின் முன்.*

## ஹெபாடிடிஸ் B தடுப்பு மருந்துத் திட்டம்

கல்வா-விலுள்ள சிவாஜி மருத்துவமனையின் துணை மருத்துவப் பணியாளர்களுக்கு ஹெபாடிடிஸ் B தடுப்பு மருந்து வழங்கும் திட்டத்தின் நிறைவுக் கட்டத்தை RC தானே, RID 3142, நிறைவு செய்துள்ளது. இந்தத் திட்டம் RCகச்ள் தானே கிரீக்சைட், தானே மிட்-டவுனுடன் இணைந்து நடத்தப்பட்டது. மொத்தம் 300 பேர் தடுப்பு மருந்துகளைப் பெற்றனர்.

*ஹெபடைடிஸ் B தடுப்பூசி பெற்றுக் கொள்ளும் ஒரு செவிலியர்.*



## இந்தூரில் பாரா மேசை டென்னிஸ் போட்டி

அக்ரோபோலிஸ் கல்விக் கழகத்தில் RC இந்தூர் ராயல், RID 3040, நடத்திய பாரா மேசை டென்னிஸ் போட்டியில் சுமார் 50 மாற்றுத் திறனாளி வீரர்கள் பங்கேற்றனர். இவர்களில் 8 பேர் தேசியத் தரநிலைப் போட்டிக்குத் தகுதி பெற்றனர்.



*சங்க உறுப்பினர்களுடன் வெற்றியாளர்கள்,*

## கழிவு மேலாண்மைத் திட்டம்

சம்பல்பூரிலுள்ள குரு நானக் பொதுப் பள்ளியின் இன்டராக்ட் சங்கமும் RC சம்பல்பூர், RID 3261, மற்றும் நகராட்சிக் கழகமும் இணைந்து, ஒரு கழிவு மேலாண்மைத் திட்டத்தை நடத்தினார்கள். மாணவர்கள் பிளாஸ்டிக் கழிவுகள், நிரப்பப்பட்ட புட்டிகளைத் திரட்டிப் பாதுகாப்பாக நீக்கினார்கள், சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வளர்த்தார்கள்.




*தாங்கள் சேகரித்த பிளாஸ்டிக் பாட்டில்களுடன் இன்டராக்டர்கள்.*

Rotary PEOPLE OF ACTION

# 100 இருளர் குடும்பங்களுக்கு ரோட்டரி வீடுகள்

V முத்துகுமரன்

மாற்றத்தை உருவாக்கும் ஒரு மிகப்பெரிய திட்டத்தின்கீழ், சென்னையிலிருந்து 40 கி.மீ. தொலைவில், செங்கல்பட்டு மாவட்டத்தில், இரும்பேடு கிராமத்தில் உள்ள யுரேகா நகரில் 76 இருளர் குடும்பத்தினருக்கு படிப்படியாக கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. மெட்ராஸ் ரோட்டரி சங்கம், RID 3234 மற்றும் எய்ட் இந்தியா இணைந்து, நன்கு திட்டமிட்டு, 360 சதுர அடியில், இரண்டு அறைகள், ஒரு சமையலறை மற்றும் குளியலறை, வாசல் முகப்பு, திண்ணையுடன் குடியிருப்புகளை கட்டிவருகின்றனர்.

இருளர்கள் வாழும் கிராமத்தில், வீடற்றவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 22 வீடுகளை ஒப்படைக்கும் நிகழ்ச்சியில் பேசிய PRID அனிருதா ராய்சௌத்ரி, “ஒரு மகத்தான செயல் திட்டத்தின்கீழ் பழங்குடியின மக்களுக்கு வீடு வழங்கும் திட்டம் எனக்கு வியப்பை அளிக்கிறது. மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் ரோட்டேரியன்கள் மற்றும் கூட்டாளிகளின் முன்முயற்சியால் ஒரு நகரியம் உருவாகிறது” என்று கூறினார். “பழங்குடியினர் குடும்பத்தினரின் கனவு நனவாகிறது என்பது ஒருபுறம் இருந்தாலும், அவர்களுக்கான வீடுகளை கட்டுவதில் உணர்ச்சிபூர்வமான அம்சங்களும் இதில் பொதிந்துள்ளன” என்பது சிறப்பாகும். இந்திய மண்டலங்களில் CSR நிதியுதவியுடன் ரோட்டரி திட்டங்கள் அதிவேக வளர்ச்சியைக் காண்கின்றன என்று குறிப்பிட்ட அவர், “அடுத்த ரோட்டரி ஆண்டிலிருந்து ஒரு புதிய மண்டலம் இந்தியாவுடன் (ரஷ்ய பிராந்தியம்) சேர்க்கப்பட உள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த கிராமத்தில் விரிவான வளர்ச்சி இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்” என்றார்.

இந்த கிராமத்தில் மெட்ராஸ் ரோட்டரி சங்கம், ஆம்புலன்ஸ் வசதியுடன் ஒரு மருத்துவ மையத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்று ராய் சௌதுரி வலியுறுத்தி கேட்டுக்கொண்டார். இருளர் குடும்பத்தினரின் மேம்பாட்டில் ரோட்டரி அதிக கவனம் செலுத்தி வருகிறது. அவர்களின்





*மேலே: இடமிருந்து: RC மெட்ராஸ் செயலாளர் பிரசன்னா ராஜகோபாலன், RID 3234 DG வினோத் சரோகி, PRID அனிருதா ராய்சௌத்ரி, சங்கத்தலைவர் நிகில் ராஜ், திட்டத்தலைவர் N பிரகாஷ் இரும்பேடு கிராமத்தில்.*



குடும்பத்தைச் சேர்ந்த, பள்ளிக்குச் செல்லும் முதல் தலைமுறை குழந்தைகள், இங்கு அமைக்கப்படும் தொழில்பயிற்சி மையத்தை பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். புதிய ரோட்டேரியன்கள் உள்பட மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் நன்கொடையாளர்கள் வீடுகள் கட்ட உதவி செய்வது மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கிறது" என்றும் அவர் கூறினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இருளர்கள் வாழும் பகுதி, மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் ரோட்டரி கிராமமாக உருவெடுத்து வருவதாக திட்டத்தின் தலைவர் N பிரகாஷ் கூறினார். முதல் கட்டமாக 31 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு 2025 பிப்ரவரி மாதம் ஒப்படைக்கப்பட்டது. மெட்ராஸ் ரோட்டரி சங்க நன்கொடை யாளர்கள் மற்றும் ஆக்ஸஸ் ஹெல்த்கேர் நிறுவனத்தின் ரூ.1.3 கோடி CSR நிதியுதவியுடன் இது செயல்படுத்தப்பட்டது. இப்போது இரண்டாவது கட்டமாக 22 வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு வீட்டின் முன் பக்கத்திலும் சிறிய தோட்டம் அமைக்க இடம் உள்ளது. யுரேகா

மரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் சங்கம் அவர்கள் மரங்களை நடுவதற்கு உதவி வருகிறது.

**தரவு சார்ந்த கண்காணிப்பின் தாக்கம்**

வீட்டுவசதி திட்டத்தின் அன்றாட முன்னேற்றத்தை கண்காணிக்கும் எய்ட் இந்தியா நிறுவனத்தின் செயல் தலைவர் பாலாஜி சம்பத், கடந்த 2021 இல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏழு கிராமங்களில் வசிக்கும் 76 வீடற்ற இருளர் குடும்பத்தினரை அடையாளம் காணப்பட்டதை AV விளக்கக் காட்சி மூலம் நினைவுகூர்ந்தார்.

ஆனால், அவர்களிடம் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் குடும்ப ரேஷன் அட்டையோ அல்லது சாதி சான்றிதழோ இல்லை. “அவர்களுக்கு இந்த அடையாள அட்டைகள் கிடைக்க நாங்கள் உதவினோம். பின்னர் அதன் மூலம் தாசில்தார் அலுவலகத்தில் விண்ணப்பித்து பட்டாக்கள் (நில உரிமைப் பத்திரம்) பெற்றோம்” என்று அவர் கூறினார். 2023-ம் ஆண்டில் பட்டாக்கள் கிடைத்தவுடன், அரசு சர்வேயர் குழுவினர் இரும்பேடு



*இருளா கடை உரிமையாளரிடமிருந்து PRID ராய்சௌத்ரி, DG சரோகி மற்றும் சங்கத்தலைவர் ராஜ் இருளா கடை உரிமையாளருடன் உரையாடுகின்றனர்.*

*கீழே: இரும்பேடு கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை ஒப்படைக்கும் நிகழ்வில் இருளா குழந்தைகள் யுரேகா மரம் மற்றும் சுற்றுச்சூழல் கிளப்பை அறிமுகப்படுத்துகின்றனர்.*



கிராமத்தில் உள்ள நான்கு ஏக்கர் தரிசுநிலத்தை பார்வையிட்டு பயனாளிகளுக்கு பட்டாக்களை ஒதுக்கினர். “பின்னர் 2023 அக்டோபர் மாதம் 62 குடிசைகள் அமைக்கப்பட்டு இருளர் குடும்பத்தினர் அங்கு தங்கவைக்கப்பட்டனர். இதையடுத்து அங்கு சூரியசக்தி விளக்குகளை நிறுவினோம். மின்சாரம் கேட்டு மின்வாரியத்துக்கு விண்ணப்பித்தோம்”.

2023-ல், எய்ட் இந்தியா நிறுவனம், ஒரு ஆழ்துளை கிணற்றைத் தோண்டி, 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆறு தண்ணீர் தொட்டிகளை நிறுவியது. “அந்த ஆண்டு டிசம்பரில் பலத்த மழை பெய்ததால், குடும்பத்தினருக்கு பிரச்னை ஏற்பட்டது. எனவே நாங்கள் ஒரு வெள்ளநீர் வடிவதற்கு கால்வாயை உருவாக்கினோம். மேலும் வெள்ளம் சூழ்ந்ததால் ஆண்கள் வேலைக்குச் செல்லமுடியாத சூழல் உருவானது. எனவே அனைத்து குடும்பத்தினருக்கும் நாங்கள் 6 மாதங்களுக்குத் தேவையான ரேஷன் பொருள்களை வழங்கினோம்” என்று சம்பத் விளக்கினார். இந்தச் சூழலில் முன்னாள் தலைவர் செல்லா கிருஷ்ணா (2024–25) அந்த இடத்தை 2024 பிப்ரவரியில் பார்வையிட்டார். வீட்டுவசதி திட்டத்தில் ரோட்டரியையும் ஒரு பங்குதாரராக இணைக்க முடிவு செய்தார்.

2024-ம் ஆண்டு ஜூலையில் நகரிய வளர்ச்சி திட்டத்தில் ரோட்டரி முறைப்படி இணைவதற்கு முன்பாகவே, சம்பத் 8 வீடுகளை (தலா ரூ.4 லட்சம் மதிப்பில்) IIT சென்னை முன்னாள் மாணவர்கள் உதவியுடன் கட்டிமுடித்திருந்தார். இந்த திட்டத்தில் மெட்ராஸ் ரோட்டரி சங்கம் இணைந்த பிறகு, இதுவரை இரண்டு கட்டங்களாக மொத்தம் 61 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஐந்து வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இரண்டாவது கட்டப் பணிகளில் வாரா பியூச்சர் நிறுவனம் CSR கூட்டாளியாக சேர்ந்துகொண்டு ரூ.1.2 கோடி நிதிப்பங்களிப்புச் செய்துள்ளது.

மெட்ராஸ் ரோட்டரி சங்கம், அதன் நூற்றாண்டு விழாவான 2029-க்குள் மூன்றாவது கட்டமாக 39 வீடுகளை கட்டி முடிப்பதை




*இருளர் குழந்தைகளுக்கு பள்ளிப் பைகளை PRID ராய்சௌத்ரி மற்றும் சங்கத்தலைவர் ராஜ் ஆகியோர் விநியோகிக்கின்றனர். கிளப்பின் சமூக சேவை இயக்குனர் சுரேஷ் அமிராபு பின்னால் உள்ளனர், எய்ட் இந்தியா ஒருங்கிணைப்பாளர் D விமலா இடதுபுறத்தில் உள்ளனர்.*

இலக்காக கொண்டுள்ளது. நூற்றாண்டு விழாவுக்குள் சென்னைக்கு அருகில் செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி தாலுகா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வீடற்றவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 500 வீடுகள் கட்டவும் சங்கம் திட்டமிட்டுள்ளது. ரோட்டரியுடன் இணைந்து நாங்கள் வீடுகளை மட்டும் கட்டித்தரவில்லை, பழங்குடி மக்களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதார வாழ்விற்கும் உதவி செய்து வருகிறோம். மாவட்ட ஆட்சியரகம் மூலம் குழாய் மூலம் குடிநீர் கிடைக்கவும் ஏற்பாடு செய்து வருகிறோம் என்று அவர் விளக்கினார். புதிய குடியிருப்புகளில் உள்ள மக்களின் தேவைக்காக மேலும் இரண்டு ஆழ்துளை கிணறுகள் தோண்டவும், 8 புதிய தண்ணீர் தொட்டிகள் அமைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். யுரேகா நகரில் மண் சாலையை இரண்டு மாதங்களில் தார்சாலையாக மாற்றியமைக்கவும் (ரூ.40 லட்சத்தில்) பஞ்சாயத்து அலுவலகம் முன்வந்துள்ளது. மெட்ராஸ் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் எய்ட் இந்தியா, ஒரு பள்ளி மற்றும் தொழிற் பயிற்சி அளிக்கும் சமூகக்கூடத்தை நடத்திவருகிறது. 20 அடி நீளம் 20 அடி அகலத்துக்கு ஒரு குளம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. “இருளர் சமூகத்தைச் சேர்ந்த 60 குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். அந்த வீட்டுப் பெண்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கவும் திட்டம் உள்ளது” என்று எய்ட் இந்தியா நிறுவன ஒருங்கிணைப்பாளர் D விமலா கூறினார்.

புகைப்படங்கள் : V முத்துகுமரன்

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## புனே மருத்துவமனையில் குழந்தைகளுக்கான மூச்சுவிடல் கருவிகள்

புனேவிலுள்ள தீனநாத் மங்கேஷ்கர் மருத்துவமனையில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவுவதற்காக ரூ.10 லட்சம் மதிப்புள்ள இரண்டு ஊடுருவா மூச்சுவிடல் கருவிகளைக் கொடையளித்தது RC புனே சரஸ்பௌக், RID 3131. குழந்தைகளின் சிறு தொண்டையில் எந்தக் குழாயையும் செலுத்தாமல் அவர்கள் மூச்சுவிடுவதற்கு இந்த இயந்திரங்கள் உதவும்.



*புனேவில் உள்ள தீனநாத் மங்கேஷ்கர் மருத்துவமனைக்கு உயர் தொழில்நுட்ப இயந்திரங்களை ஒப்படைக்கும் நிகழ்ச்சியில் ரோட்டேரியன்கள்.*

## தாராஷிவ்-வில் சேலை நடை

புற்றுநோய் விழிப்புணர்வுக்காக RC தாராஷிவ், RID 3132, நடத்திய சேலை நடையை துல்ஜா பவானி மைதானத்தில் DG சுதிர் லடுரெ தொடங்கிவைத்தார். இதில் சுமார் 1,600 பெண்கள் பங்கேற்றனர். இந்த நடையின் நோக்கம், பெண்களின் புற்று நோயை முன்கூட்டியே கண்டறிதலை முன்னிறுத்துவது. இங்கு, ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி ஆதரவுடன் 300 பெண்களுக்கு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது.

புற்றுநோய்ச் சிறப்பு வல்லுனரான டாக்டர் சுருதி காந்தி தொடக்க அறிகுறிகளைக் கண்டறிதல், சரியான நேரத்தில் பரிசோதிக்க வேண்டிய தேவையைப்பற்றிப் பேசினார். கல்லூரி மாணவர்கள் ஒரு வீதி நாடகம் நடத்தினார்கள். இந்த முன்னெடுப்பைச் சங்கத் தலைவர் ரஞ்சித் ரன்டிவெ, செயலாளர் பிரதீப் காம்கர் வழிநடத்தினார்கள்.



*மகாராஷ்டிராவில் முன்பு உஸ்மானாபாத் என்று அழைக்கப்பட்ட தாராஷிவில் உள்ள புடவை வாக்கத்தானில் பங்கேற்பாளர்கள்.*

## நடமாடும் கண் பராமரிப்பு 5,000 மாணவர்களைப் பரிசோதித்தது

நடமாடும் கண் பராமரிப்பு வண்டியின் உதவியுடன் சுமார் மூன்று மாதங்களில் சுமார் 5,000 பள்ளி மாணவர்களைப் பரிசோதித்தது RC பிலதர மதமங்கலம், RID 3204. இந்தச் செயற்கைக்கோள் சங்கம் மே 2025ல் நிறுவப்பட்டது.

RC பையனூரின் GG திட்டமான “நடமாடும் பார்வை” மூலம் ரோட்டரி அணி ஒவ்வொரு பள்ளிக்கும் சென்று மாணவர்களுக்கு உயர்தரக் கண்பரிசோதனை, நோய் கண்டறிதல் சேவைகளை வழங்கியது. செயற்கைக்கோள் சங்கத் தலைவர் ஜெயா ஹரிதாஸ், அதன் ஆலோசகர் சுனில் கொட்டரத்தில் ஏற்பாடுகளைக் கவனித்துக்கொண்டார்கள்.



*ஒரு பள்ளியில் கண் பரிசோதனை முகாம்.*

## பத்லாபூர் ஏரிக்கு அருகில் மகிழ்ச்சித்தெருக்கள்

மகாராஷ்டிரத்தின் தானே மாவட்டத்திலுள்ள அழகிய ஏரியான கட்ராப் தலாவ்-இல், மக்களிடையில் உடற்தகுதியை முன்னிறுத்துவதற்காக, மகிழ்ச்சித் தெருக்கள் என்ற இசை, பாட்டு, நடன, யோகாசன, ஓட்ட, நாடக மற்றும் மகிழ்ச்சி உடற்பயிற்சி நிக்ழ்வொன்றை நடத்தியது RC பத்லாபூர் இன்டஸ்ட்ரியல் ஏரியா, RID 3142.

பத்லாபூர் நகராட்சித் தலைவர் ருசிதா கோர்பாடெ, அவருடைய கணவரான முன்னாள் தலைவர் ராஜேந்திர கோர்பாடெ, DGE நிலேஷ் ஜெய்வந்த், PDG கைலாஷ் ஜெதானி இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். எல்லா வயதுக் குழுக்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். பல நுண்கலை அமைப்புகளில் இதில் பங்கேற்றன. சங்கத் தலைவர் அமித் பாத்யா தன் குழுவின் ஆதரவுடன் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.



*ஹேப்பி ஸ்ட்ரீட்ஸில் பங்கேற்பாளருக்கு RID 3142 DGE நிலேஷ் ஜெய்வந்த் பாராட்டுச் சான்றிதழை வழங்குகிறார். அவரது இடதுபுறத்தில் PDG கைலாஷ் ஜெதானி உள்ளார்.*

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## நலத்தூதுவர்

WHO உடன் நெருங்கிப் பணிபுரிகிற, ஜெனீவாவிலுள்ள நல முன்னிறுத்தல் கூட்டமைப்பின் தலைவரான அடுத்தள நலத் தூதுவர் எலிசபெத் செரியன் ரோட்டரித் திட்டங்களில் பல பங்குவகிப்போரைச் சேர்க்க விரும்புகிறார், “இதன்மூலம் நாம் தாக்கமுள்ள சேவையைச் செய்யலாம், சமூகங்களை இன்னும் நன்றாக எட்டலாம்”.

94 சங்கங்களைச் சேர்ந்த 3,700-க்கும் மேற்பட்ட ரோட்டரியன்களைக் கொண்டுள்ள இவர் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இலக்கு அமைத்துள்ளார். “நாங்கள் இதுவரை 520 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளோம்.

இவர்களுடைய பெரிய GG திட்டங்களில் சில: RC பெங்களூர் வெஸ்ட் நகர மருத்துவமனைகளில் கண் அறுவைச் சிகிச்சைகளை ஆதரிக்கும் (GG: $100,000); RC பெங்களூரு ஓரியான் கேட்வே நடமாடும் புற்றுநோய்ப் பரிசோதனை அலகைத் தொடங்கும் (GG: $89,000); RC பெங்களூர் நார்த் ஒரு தொண்டு மருத்துவமனையில் டயாலிசிஸ் பிரிவை அமைக்கும் ($89,000). CSRஐப் பொறுத்தவரை, $1.6 மில்லியன் மதிப்புள்ள, பெருநிறுவன நிதியளிப்பில் நடைபெறும் திட்டங்களில் சில: ஸ்ரீ மதுசூதன் சாய் மருத்துவமனைக்கு ரோட்டரி மான்யதா உயர் தொழில்நுட்பக் கருவிகளை (₹2.53 கோடி) வழங்கும்; RC இந்திராநகர் ராமநகரத்தில் RO ஆலையுடன் ஒரு புதிய பள்ளியை அமைக்கும் (₹3.5 கோடி), இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்யும் (₹60 லட்சம்). TRF வழங்கலுக்கு இவர் குறைந்தது $3 மில்லியன் திரட்டத் திட்டமிட்டுள்ளார்.

2001-ல், “தொழில் வல்லுனர்கள், தொழில் தலைவர்களுடைய பங்கேற்பால் RI வழியாக என் சேவைகள் இன்னும் பெரிதாக, சிறப்பாக, மேலும் தாக்க முள்ளவையாக இருக்கலாம் என்று அறிந்தபின்” எலிசபெத் ரோட்டரியில் இணைந்தார்.



**எலிசபெத் செரியன்**
பன்னாட்டு
நலப் பராமரிப்பு
RC பெங்களூர், RID 3192

## பள்ளிக் கழிப்பறைத் தொகுதிகளில் கவனம்



**V சுரேஷ்**
ரியல் எஸ்டேட் நிதி
RC வேலூர் மிட்-டௌன்
RID 3231

அரசுக் கிராமப்பள்ளிகளில் கல்வியானது “செயல்திறன் மிக்க ஆசிரியர்களால் சிறப்பாக உள்ளது. ஆனால், தூய்மை, வகுப்பறை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் அங்கு போதவில்லை. நான் என் மாவட்டம் முழுவதும் உள்ள கிராமப் பள்ளிகளில் கழிப்பறைத் தொகுதிகள், கை கழுவும் நிலையங்களை அமைத்தல், புதுப்பித்தலில் கவனம் செலுத்துவேன்” என்கிறார் V சுரேஷ்.

98 சங்கங்களில் 3,700 ரோட்டரியன்களைக் கொண்டுள்ள இவர் ஜூன் 30க்குள் 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும், 10 புதிய சங்கங்களை அமைக்கவும் விரும்புகிறார். திருவள்ளூர் அரசுத் தொடக்கப் பள்ளியில் (CSR: ₹15 லட்சம்), வந்தவாசி (GG: ₹30 லட்சம்) மற்றும் ஆம்பூரில் (GG: ₹25 லட்சம்) இரண்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனிக் கழிப்பறைத் தொகுதிகள் கட்டப்படும். ₹30 லட்சம் மாவட்ட நல்கையின் வழியாகத் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் 25 கழிப்பறைத் தொகுதிகள் புதுப்பிக்கப்படும்.

மருத்துவத் துறையில், திருவள்ளூர் ஜெயின் டயாலிசிஸ் மையத்தில் 3 டயாலிசிஸ் இயந்திரங்கள் (GG: ₹30 லட்சம்) நிறுவப்படும்; RI இயக்குநர் M முருகானந்தம் தொடங்கிவைத்த மாமோகிராஃபி பேருந்து (GG: ₹1.6 கோடி), RC குடியாத்தம் நடத்தும் நடமாடும் முகாம்களில் கிராமப்புறப் பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய்ப் பரிசோதனைகளை நடத்தும்.


இந்தச் சங்கங்கள் சுமார் 500 கண் பரிசோதனை முகாம்களை நடத்தின. குறிப்பாக, இவை தொலைவிலுள்ள கிராமங்களில் நடைபெற்றன. “இந்த எண்ணிக்கை ஆண்டு முடிவுக்குள் 750ஐத் தொடும்.” இவருடைய TRF வழங்கும் இலக்கு, $200,000. இவர் 2011-ல், இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் ரோட்டரியின் முயற்சிகளால் ஊக்கம் பெற்று ரோட்டரியில் சேர்ந்தார்.

# மைசூரு முழுவதும் ரோட்டரி


9 வயது பசம்மா இலவசக் கருவிழிப்படல மாற்று அறுவைச் சிகிச்சையைத் தொடர்ந்து தன் கண் பார்வையைத் திரும்பப் பெற்றார், “உலகை முதன்முறை பார்க்கிற மகிழ்ச்சி அவரிடம் பெரிய புன்னகையாக வெளிப்பட்டது. 20 ஆண்டுகளுக்குமுன் நடைபெற்ற அந்த நிகழ்ச்சி, வாழ்க்கைபற்றிய என் பார்வையை மாற்றியது, ரோட்டரியில் சுறுசுறுப்பாகப் பங்கேற்கச்செய்தது” என்று நினைவுகூர்கிறார் ராமகிருஷ்ணா.

91 சங்கங்களில் 4,000 ரோட்டரியன்களைக் கொண்டுள்ள இவர் 500 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கமுடியும் (318 பேர் ஏற்கெனவே இணைந்துவிட்டார்கள்), 10 புதிய சங்கங்களையாவது நிறுவமுடியும் என்று நம்புகிறார். மைசூரிலுள்ள செலுவாம்பா மருத்துவமனையில் ஒவ்வோர் ஆண்டும் பிறக்கிற 3,500 குழந்தைகளின் பயன்பாட்டுக்காக ஒரு தாய்ப்பால் வங்கி (CSR நல்கை: ₹40 லட்சம்) நிறுவப்பட்டது; RC ஐவரி சிட்டி மைசூரு சுமார் 1,000 கண் அறுவைச் சிகிச்சைகளைச் (GG: ₹41 லட்சம்) செய்யும்; மைசூரிலுள்ள விவேகானந்தா நினைவு மருத்துவமனைக்கு லாப்ரோஸ்கோபிக் கருவி கொடையளிக்கப்படும் (GG: ₹52 லட்சம்); சுல்லியா-விலுள்ள அரசுக் கண் மருத்துவமனைக்கு அறுவைச் சிகிச்சைக் கருவி (GG: ₹31 லட்சம்) வழங்கப்படும்.

86 அரசுப் பள்ளிகளில் அறிவார்ந்த பலகைகள் (ஒவ்வொன்றும் ₹1 லட்சம்) நிறுவப்படுகின்றன; அடுத்த 2 முதல் 3 மாதங்களில் சாம்ராஜநகர், குண்ட்லுபெட்டில் இரண்டு இளஞ்சிவப்புக் கழிப்பறைகள் (CSR நல்கை: ₹20 லட்சம்) தொடங்கப்படும். இவர் TRFக்கு $1 மில்லியன் திரட்ட இலக்கு அமைத்துள்ளார். ராமகிருஷ்ணா சேவைத் திட்டங்களைச் செய்வதை விரும்புகிறார், “ஏனெனில், நான் பல சிறப்பு ரோட்டரிக் கணங்களைக் கண்டுள்ளேன்.” 1986-ல் இவர் ரோட்டரியில் சேர்ந்தபோது, மைசூரில் நான்கு சங்கங்கள்தான் இருந்தன. “இப்போது இங்கு 23 சங்கங்கள் உள்ளன. எங்கள் மாவட்டம்முழுவதும் ரோட்டரி நன்கு வளர்ந்துள்ளது” என்கிறார் இவர்.



**ராமகிருஷ்ணா P K**
நறுமண வேதிப்பொருட்கள்
RC மைசூர் மிட்-டவுன்
RID 3181



**ரவீந்தர் குக்னானி**
கல்வியாளர்
RC ரோஹ்தக், RID 3011

# ரோட்டரி மருத்துவமனையில் புதிய இதய மருத்துவப்பிரிவு

2008-ல் ரோட்டரியில் இணைந்த ரவீந்தர் குக்னானி “இந்த அமைப்பு எனக்குப் பல வாழ்க்கைக் கொள்கைகளைக் கற்றுத்தந்துள்ளது, ஒரு சிறந்த சேவை, தோழமைப் பயணத்தை வழங்கியுள்ளது” என்று நினைவுகூர்கிறார். “மற்ற பண்புகளையெல்லாம்விட, ஏழைகள்மீது இரக்கத்துடன் இருப்பதைத்தான் நான் முதன்மையாகக் கற்றுக்கொண்டேன்.”

இந்த ஆண்டு 1,200 ரோட்டரியன்களைச் சேர்க்கும் இலக்குடன் இயங்கிவரும் குக்னானி ஏற்கெனவே 600 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளார். இப்போது தேசியத் தலைநகரப் பகுதியில் 143 சங்கங்களில் 5,800 உறுப்பினர்கள் உள்ளார்கள். ரோட்டரி, ரோட்டராக்ட்-இன்டராக்ட் குடும்பங்களில் புதிய சங்கங்களை நிறுவுவதற்கான RI இயக்குநர் K P நாகேஷின் 10-20-30 மந்திரத்தை இவர் பின்பற்றுகிறார். “இதுவரை நான் 9 சங்கங்களைத் தொடங்கியுள்ளேன். ஜூன் 30-க்குள் எங்கள் இலக்கை எட்டுவேன்.” ஃபரீதாபாத் ரோட்டரி மருத்துவமனையில் இதய மருத்துவப் பிரிவு (CSR நிதி+GG: $1 மில்லியன்) அமைக்கப்படும். நவம்பரில், குருகிராமிலுள்ள ரோட்டரி மருத்துவமனையில் பிரேம் சாகர் கோயல் இதய மையத்தை RI தலைவர் ஃபிரான்செஸ்கோ அரெஜ்ஜோ தொடங்கிவைத்தார்.

RC டெல்லி சவுத்என்ட் நெக்ஸ்ட் 200 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்கிறது (GG: ₹1.25 கோடி); மாவட்டச் சங்கங்கள் பார்வையிழந் தோருக்கான தேசிய அமைப்பு அடையாளம் காணும் பார்வைக் குறைபாடுள்ள நபர்களுக்கு 200 அறிவார்ந்த கண்ணாடிகளையும், அரசுப் பள்ளி மாணவிகளுக்கு 1,000 மிதிவண்டிகளையும் (இரண்டும் CSR நல்கை: ₹1 கோடி) வழங்குகின்றன. ஃபரீதாபாத் அரசு உயர்நிலைப் பள்ளியிலும் (CSR: $50,000) குருகிராம் அரசுத் தொடக்கப் பள்ளியிலும் (CSR: $35,000) இரண்டு மகிழ்ச்சிப் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. இவர் $4 மில்லியன் TRF வழங்கல் இலக்கை அமைத்துள்ளார். “இந்தச் சவாலான இலக்கை எட்டுவதற்கு நான் முயன்றுவருகிறேன்” என்கிறார் இவர்.■

# IITM சென்னை – ரோட்டரி மையம் முன்னேற்றத்தின் திறவுகோல்

V முத்துகுமரன்

தரவுகள் அடிப்படையிலான ஆய்வின் மூலம் செயல் படுத்தப்படும் பெரிய அளவிலான சேவைத் திட்டங்கள் சமூகத்தில் அளவிடக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும். அப்படித்தான் ரோட்டரி, உலகில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. “இந்தியாவில் ரோட்டரி சங்கங்கள், CSR நிதியுதவியுடன் பெரிய அளவிலான திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. பிரேசில், பிலிப்பின்ஸ் போன்ற நாடுகள் அதைப் பின்பற்ற முயற்சித்தாலும் பெரிய அளவில் வெற்றி கிடைக்கவில்லை” என்று TRF அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக் கூறினார்.

IIT சென்னையில் மனிதநேயம் மற்றும் அறிவியல் பிரிவில், IIT சென்னை- ரோட்டரி சமூக மேம்பாட்டு மையத்தை தொடங்கிவைத்து உரையாற்றிய அவர், இந்த கூட்டுமுயற்சிக்காக முதன்மை நிறுவனமான IIT சென்னை மற்றும் ரோட்டரி சங்கங்களுக்கு பாராட்டுத் தெரிவித்தார். வரும் ஆண்டுகளில் இந்தியா முழுவதும் சங்கங்கள் மூலம் நீடித்த மாற்றத்தை உருவாக்க முடியும். மெட்ராஸ் மிட்- டவுன் ரோட்டரி சங்கம் மற்றும் மெட்ராஸ் சென்ட்ரல் ஆதித்யா ரோட்டரி சங்கம் ( RID 3233) இரண்டும் ரோட்டரி மையத்திற்காக ரூ.30 லட்சம் தொகுப்பு நிதி திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. காலப்போக்கில் திட்ட மதிப்பீட்டு ஆய்வுகள், அதனால் ஏற்படும் தாக்க அறிக்கை, திட்ட ஆலோசனை, நிலைத்தன்மை குறித்த வெள்ளை அறிக்கைகளை தயாரித்தல், தென்னிந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் தேவை அடிப்படையில் உலகளாவிய மானியம் (GG) மற்றும் CSR திட்டங்களை வடிவமைக்க உதவுதல் மூலம் வருமானம் ஈட்டும். இதன் மூலம் இந்த மையம் ரோட்டரியின் சுயசார்புடைய அமைப்பாக செயல்படும் என்று PDG முத்து பழனியப்பன் கூறினார்.

“ ஒவ்வொரு ஆண்டும் ரூ.180 முதல் 190 கோடி மதிப்பிலான 300 திட்டங்கள் சர்வதேச நிதியுதவியுடன் நிறைவேற்றப்படுவதால் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது” என்று அறங்காவலர் பரத் பாண்ட்யா கூறினார். இப்போது IIT சென்னை – ரோட்டரியுடன் இணைவது அடுத்த பத்து ஆண்டுகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாக மாறும். சங்கங்களும் ஆராய்ச்சி மற்றும் தரவுகள் அடிப்படையிலான திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

RID 3233-க்கு உட்பட்ட ரோட்டரி சங்கங்கள் ஆண்டுக்கு 1 மில்லியன் டாலர் மதிப்பிலான

*சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் மருத்துவ உபகரணத்தை திறந்து வைத்த பிறகு, RC சென்னை கேபிடல் தலைவர் அபூர்வா மோடி, DRFC L நீலகண்டன், DG D தேவேந்திரன், அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும் DGE ஸ்ரீராம் துவ்வூரி ஆகியோருடன் TRF தலைவர் ஹோல்கர் நாக் மற்றும் சுசான்.*



திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. “கோவிட் தொற்று காலத்தில் பார்வைக் குறைபாடுகளை தவிர்க்கும் ஆரஞ்சு திட்டம் உள்பட 2 மில்லியன் டாலர் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. CSR நிதியுதவியுடனான வருடாந்திர திட்டங்கள் ரூ.30 கோடி என்ற நிலையில் இருந்தாலும், IITசென்னை உதவியுடன் அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.300 கோடி மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்த முடியும்” என்று உறுதியாக நம்புவதாக DG தேவேந்திரன் கூறினார்.

திட்டத்தின் தலைவரான DGND Mஅம்பலவாணன், “IIT சென்னை- ரோட்டரி மையம் அமைக்கப்பட்டதன் மூலம் ஒரு நீண்டநாள் கனவு நிறைவேறியது. நாங்கள் தொழிலதிபர்களாக இருந்தாலும் சமூகங்களின் அடிமட்டத்தில் உள்ள உண்மை நிலைகள் மற்றும் சூழ்நிலைகள் பற்றி எங்களுக்கு போதிய அறிவு இல்லை. எனவே எங்கள் திட்டங்கள் சமூகத்தின் தேவைகள், தரவுகள் மற்றும் ஆய்வுகளை அடிப்படையாக கொண்டிருத்தல் அவசியம். புதிய மையம், ரோட்டரி சங்கங்களுக்கான இந்த இடைவெளியை நிரப்பும்” என்றார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் சென்னையில் உள்ள ரோட்டரி சங்கங்கள் 14 மில்லியன் டாலர் மதிப்புள்ள உலகளாவிய மானியம் மற்றும் CSR நிதியுதவியுடனான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டு CSR நிதியுதவியுடன் 1 பில்லியன் டாலர் திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். இவற்றில் பெரும்பாலான நிதியுதவி சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்கள் மூலம் கிடைத்தவையாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

IIT சென்னை ரோட்டரி மையம், துறை அதிகாரிகள் மற்றும் மாணவர்களை ஈடுபடுத்தி ரோட்டரி கவனம் செலுத்தும் ஏழு துறைகள் பற்றிய தரவுகளை உருவாக்குவதுடன், GG மற்றும் CSR நிதியுதவியுடனான சமூக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைக்கும் என்று அம்பலவாணன் கூறினார். ஒரு ஆதார மையம் என்கிற வகையில் அந்த மையம்,



*அறங்காவலர் தலைவர் நாக், அறங்காவலர் பாண்டியா, PDG N நந்தகுமார், DGND M அம்பலவாணன், PDG S முத்து பழனியப்பன், DG தேவேந்திரன் மற்றும் DGE துவ்வுரி IIT மெட்ராஸில்.*

தொடக்கத்தில் தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் மனிதாபிமான திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும்.

முதன் முறையாக ரோட்டரி மையம் ரோட்டரி கவனம் செலுத்தும் பகுதிகளுடன் இணைக்கப்பட்ட UNDP-யின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs- Sustainable development goals) தொடர்பான தகவல்களை தரவுகளாக உருவாக்கும். தமிழ்நாடு முழுவதும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி மையமாக இந்த மையம் இருக்கும் என்று பழனியப்பன் கூறினார். தமிழ்நாடு அரசின் முன்னோடி திட்டமான தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகள் நலத் திட்டத்தை இந்த மையம் எடுத்துக்கொண்டு சிகிச்சைக்கான தீர்வு என்ன என்பதை ஆராய்ந்து சிகிச்சை அளிக்கும். மேலும் இதை எப்படி ரோட்டரி சங்கங்கள் மூலம் மாநில அளவில் விரிவுபடுத்தலாம் என்று முடிவு செய்யும் என்று கூறினார். மனிதநேயம் மற்றும் அறிவியல்துறை தலைவரும் பேராசிரியருமான ராஜேஷ் குமார், கிராமப்புற சமூகத்தினரிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் குறித்து இந்த மையத்துடன் இணைந்து செயலாற்ற ஆர்வமாக இருப்பதாக கூறினார்.

2024 அக்டோபரில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது முதல், பிப்ரவரி 2025-ல் மையம் IIT இயக்குநர் V காமகோடியால் தொடங்கி வைக்கப்பட்டது வரையிலான பணிகளை இணை பேராசிரியர் சந்தோஷ் சாஹு நினைவுகூர்ந்தார். IIT சென்னை முன்னாள் மாணவர்கள் அறக்கட்டளை ஆலோசனைகளையும், நன்கொடைகளையும் தாராளமாக வழங்கியதாக சுட்டிக்காட்டினார்.

ஆரம்பத்தில் IIT-யின் நான்கு பேராசிரியர்கள் சாஹு தலைமையில் ரோட்டரி மையத்தின் செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள். அவர்களுக்கு மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஆலோசனைக்குழு வழிகாட்டும். சென்னையைப் போலவே ஹைதராபாத், மும்பை, தில்லி, புவனேஸ்வர் மற்றும் குவாஹாட்டியில் உள்ள IIT-க்களிலும் அந்தந்த மாவட்ட ரோட்டரி சங்கங்களின் உதவியுடன் ரோட்டரி மையங்கள் நிறுவப்படும்.

விடியோ மூலம் உரையாற்றிய IIT சென்னை இயக்குநர் காமகோடி,

IIT சென்னை-ரோட்டரி மையம் நிலையான வளர்ச்சி இலக்குக்கான கொள்கை அமைப்பாக செயல்படும் என்று கூறினார்.

புதுச்சேரிக்கு அருகில் உள்ள ஆரோவில் கிராமத்தில் IIT சென்னை 100 ஏக்கரில் நிலைத்தன்மை கொண்ட வளாகத்தை உருவாக்கி வருகிறது. அங்கு மையத்தின் சிறந்த நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டு நாட்டின் மாதிரி வளர்ச்சிக் குறியீடாக காட்சிப்படுத்தப்படும் என்றும் காமகோடி கூறினார்.

மருத்துவத் துறையில், சென்னை கேபிடல் ரோட்டரி சங்கம், ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் தீவிர பராமரிப்பு பிரிவுக்கு ரூ.45 லட்சம் மதிப்பிலான சர்வதேச மானிய உதவி திட்டத்தின் கீழ் உடலின் உட்புற பகுதிகளை ஆய்வு செய்யும் அல்ட்ராசவுண்ட் கருவி மற்றும் சுவாசக் கோளாறுகளை சரி செய்யும் 'நாஸல் கானுலா' கருவிகளை வழங்கியுள்ளது. அமெரிக்காவின் RID 5330, மலேசியாவின் மெலாவதி ரோட்டரி சங்கம், RID 3300 இத்திட்டத்தின் கூட்டாளர்களாக இருந்தன.

அறங்காவலர் தலைவர் நாக் மற்றும் அவரது மனைவி சூசன் இருவரும், அறங்காவலர் பரத் பாண்ட்யா, DG தேவேந்திரன், DGE ஸ்ரீராம் துவ்வுரி, DRFC L நீலகண்டன் முன்னிலையில் திட்டத்தை தொடங்கிவைத்தனர். சங்கத்தின் தலைவர் அபூர்வா மோடி, PDGs N நந்தகுமார், பழனியப்பன் மற்றும் அம்பலவாணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

உடலை ஊடுருவி ஆய்வு செய்யும் அல்ட்ராசவுண்ட் மற்றும் சுவாசத்தை மேம்படுத்தும் 'நாஸல் கானுலா' கருவிகள் கடுமையாக நோய்வாய்ப்பட்ட குழந்தைகளின் சிகிச்சை காலத்தை குறைக்க உதவும் என்று மோடி கூறினார். சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள எலும்பியல் பிரிவுக்கு மார்ச் மாதம் இரண்டு நவீன எக்ஸ்ரே கருவிகள் (ரூ.40 லட்சம் சர்வதேச மானிய உதவி) நன்கொடையாக வழங்கப்பட்டன. மேலும் அறக்கட்டளை மருத்துவமனை ஒன்று மம்மோகிராம் அல்லது எக்கோ கார்டியோகிராம் கருவி வழங்குவதற்காக ரூ.50 லட்சம் சர்வதேச மானிய உதவி கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அறங்காவலர் ஹோல்கர் நாக் தனது உரையில், "சமூகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மருத்துவமனை மற்றும் ரோட்டரி இடையே பிரிக்க முடியாத கூட்டுறவு உள்ளதாக கூறினார். தொடங்கப்பட்டது முதல் TRF சர்வதேச திட்டங்களுக்காக 4 பில்லியன் டாலர்களுக்கு மேல் நிதி வழங்கியுள்ளது, என்று கூறினார்.

புகைப்படங்கள்: V முத்துகுமரன்

# 1,000 பேருக்குப் பயன் தந்த மருத்துவமுகாம்

ரோட்டரி செய்திக்குழு



RC பீட் மிட் டவுன், RID 3132, நடத்திய மிகப் பெரிய நலப் பராமரிப்பு முகாமில், பல உடல்நலிவுகள், நீடித்த நோய்களால் துன்புற்ற 1,000-க்கும் மேற்பட்டோர் பரிசோதிக்கப்பட்டார்கள், அவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.

CM-ன் உதவி நிதிப் பிரிவு, தொண்டு மருத்துவமனைப் பிரிவு (பீட்), புனித ஆனி சமூக மையம், மாவட்ட நலத்துறை ஆதரவுடன் நடைபெற்ற இந்த 7 நாள் மருத்துவ முகாம் மகாராஷ்டிரத்தின் மாரத்வாடாப் பகுதியிலுள்ள பீட் வட்டத்திலிருக்கும் கிராமங்களில் நடைபெற்றது. பல சிறப்புத் திறன்களைக் கொண்ட ரோட்டரியன் மருத்துவர்கள் தங்கள் சேவையை வழங்கினார்கள்.

வட்ட நல அலுவலர் Dr நரேஷ் கசட், பஹிர்வாடியில் உள்ள புனித ஆனி சமூக மையத்தின் தன்னார்வலர்கள், மருத்துவ அலுவலர்கள், ASHA, அங்கன்வாடிப் பணியாளர்கள் இந்த முகாமில் குறிப்பிடக்கூடிய பங்காற்றினர்.■

Rotary PEOPLE OF ACTION

# சிக்கபல்லாபூரில் மருத்துவத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு


கர்நாடகத்திலுள்ள சிக்கபல்லாபூரில், ஸ்ரீ மதுசூதன் சாய் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்வி நிறுவனத்தில் CSR நிதியளித்த இரண்டு மருத்துவத் திட்டங்களை நிறைவேற்றியது RC பெங்களூர் அல்சூர், RID 3192.

இந்தச் சங்கம் தன் சமூக நலப் பணிகளின்கீழ் இந்த மருத்துவமனையில் 107 இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளது. TTP டெக்னாலஜீஸ், ராஜாமனெ இன்டஸ்ட்ரீஸ் வழங்கிய CSR நல்கையானது ரூ.37.45 லட்சம் இதற்கு உதவியுள்ளது. "உயிர் காக்கும் சிகிச்சைகளுக்குச் செலவழிக்க இயலாத ஏழை நோயாளிகளுக்கு இந்த நிதி உதவி நன்கு பயன்படுகிறது" என்றார் சங்கத் தலைவர் P விஜயகுமார். ஒவ்வோர் அறுவைச் சிகிச்சைக்கும் ரூ.35,000 CSR நல்கை வழங்கப்படுகிறது.

அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு, நோயாளிகள் முழுமையாகக் குணமாவதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுக்கு முறையான ஊட்டச்சத்து, மருந்துகள், வழக்கமான பரிசோதனைகள்-வழங்கப்படுகின்றன. இந்த மருத்துவமனையிலுள்ள மருத்துவக்குழுக்கள் 107 நோயாளிகள் குணமாவதற்கான வழிகாட்டல், ஆதரவைச் சரியான நேரத்தில் வழங்கின. இதில் பிறவி இதய நோய்களால் துன்பப்பட்ட குழந்தைகளும் உண்டு.

இன்னொரு முயற்சியாக, இந்த மருத்துவமனை 943 பள்ளி மாணவிகளைக் கருப்பை வாய்ப் புற்றுநோயிலிருந்து பாதுகாப்பதற்காக HPV தடுப்பு மருந்துகளை வழங்கியது. இந்தச் சங்கம் இந்தத் தடுப்பு மருந்துகளை வழங்குவதற்காகக் கம்ம்வால்ட் சிஸ்டம்ஸுடன் இணைந்து செயல்பட்டது.

ஒவ்வொரு மாணவிக்கும் ஆறு மாத இடைவெளியில் இரண்டு HPV தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன.■



*RC பெங்களூரு அல்சூர் தலைவர் P விஜயகுமார் (இடது), பின்தங்கிய மக்களின் இதய சிகிச்சைகளுக்காக மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளர் Dr ரகுபதி அவர்களிடம் காசோலை ஒன்றை வழங்குகிறார்.*





*HPV தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு பள்ளி மாணவர்கள்.*

**Have you read**

**Rotary News Plus?**


**Or does it go to your junk folder?**





Every month we bring out the online publication **ROTARY NEWS PLUS** to feature your projects. This is sent to **every member** by e-mail by mid-month.

Read **Rotary News Plus** on our website *www.rotarynewsonline.org*

# Membership & TRF contribution summary






*Membership figures as on March 1, 2026.
*TRF contribution figures as on February 28, 2026.

## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotary clubs | : 36,552 | Rotary members | : 1,163,102 |
| Rotaract clubs | : 9,441 | Rotaract members | : 146,426 |
| Interact clubs | : 19,262 | Interact members | : 443,187 |
| RCCs | : 14,311 | | |

As on March 19, 2026

# நைஜீரியாவுக்கு ஒரு VTT மருத்துவக் குழு

ரோட்டரி செய்திக்குழு

கடந்த ஜனவரி மாதம் நைஜீரியாவில் நடைபெற்ற 15 நாள் மெகா சுகாதார முகாமில் இந்தியாவிலிருந்து 14 அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் மற்றும் இரண்டு தன்னார்வலர்கள் அடங்கிய ஒரு தொழில் பயிற்சிக் குழு (VTT-Vocational Training Team) மருத்துவம் மற்றும் அறுவைச்சிகிச்சைகளை வழங்கியது. பல் மருத்துவ நிபுணர் மற்றும் RID 3204 PDG டாக்டர் சந்தோஷ் ஸ்ரீதர் தலைமையில் பல்வேறு மருத்துவ நிபுணர்கள் குழுவில் இடம்பெற்றிருந்தனர். PDG லாரன்ஸ் ஒக்வோர் நைஜீரியாவில் (RID 9127) திட்ட ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார்.

எனுகு மாவட்டத்தில் இக்போ-எனு என்னுமிடத்தில் உள்ள மாநில அரசு சார்பிலான மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் பயிற்சி மருத்துவமனையில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு வகையான நோய்களால் பாதிக்கப்பட்ட 1,800-க்கும் மேலான நோயாளிகளுக்கு நவீன சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. மேலும் 800 பேருக்கு அறுவைச்சிகிச்சைகளும் நடத்தப்பட்டுள்ளன. இந்த முகாமில்தான் பல நோயாளிகள் முதன் முறையாக நவீன மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சைகளைப் பெற்றனர் என்று ஸ்ரீதர் கூறினார்.

2020 மற்றும் 2023-ல் நைஜீரியாவில் VTT திட்டங்களில் பங்கேற்ற பிறகு, இப்போது இந்த முயற்சியின் மாற்றத்தை நேரடியாகப் பாத்தேன். நிபுணர்கள் முழு ஈடுபாட்டுடன் சேவையாற்றினர். சமூகப் பயனாளிகளிடமும் ஒருவித மாற்றம் தெரிந்தது என்று அவர் மேலும் கூறினார்.

2025 ஜனவரியில் VTT குழுவுக்கான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஜூன் மாதம் TRF அறக்கட்டளையால் ஒப்புதல் வழங்கப்பட்டது. இந்தியாவில் உள்ள RIDs 3202 மற்றும் 3234 மற்றும் நைஜீரியாவின் 9127 மற்றும் 9142 மாவட்டங்களின் ஆதரவு இந்த திட்டத்துக்கு கிடைத்தது.

இந்த மானியம் VTT குழுவினரின் சர்வதேச பயணம்



மற்றும் தளவாடங்களை கொண்டு செல்வது, பல், கண் மருத்துவம் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களை கொள்முதல் செய்வது, அறுவைச் சிகிசை வசதிகள் உள்ளூர் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களின் திறன் வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

இந்த முகாமில் மருத்துவக் குழுவினர் பல்மருத்துவத்துக்கான நாற்காலிகள், பல் பிடுங்குதலுக்கான கருவிகள், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவிகள், கண்புரை அறுவைச்சிகிச்சைக்கான கருவிகள், நுண்ணோக்கி கருவிகள் ஆகியவற்றை நிறுவினர். பொது அறுவைச்சிகிச்சை. ENT மற்றும் கண் அறுவைச்சிகிச்சைக்கான மயக்க மருந்து உள்ளிட்ட அனைத்துவிதமான சிகிச்சை நடமுறைகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தனர்.

உள்ளூர் மருத்துவர்கள், பயிற்சியாளர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர்கள் மற்றும்



*நைஜீரியாவின் எனுகு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில், ஓர் அறுவை சிகிச்சை அரங்கை அமைத்த VTT உறுப்பினர்கள்.*



*பல் அறுவை சிகிச்சை நிபுணர் Dr C K அசோகன் ஒரு நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும்போது, உள்ளூர் மருத்துவர்களும் பயிற்சி மருத்துவர்களும் ஒரு பல் மருத்துவச் செயல்முறையைக் கற்றுக்கொள்கின்றனர்.*



PDG *சந்தோஷ் ஸ்ரீதர் (நடுவில்), தனது* VTT *உறுப்பினர்களுடன் இணைந்து, நைஜீரிய மருத்துவர்களிடம் மருத்துவ உபகரணங்களை ஒப்படைக்கிறார்.*

துணை மருத்துவர்கள் இந்திய அறுவைச்சிகிச்சை குழுவினர் நடத்திய செயல்விளக்க கூட்டத்தில் பங்கேற்றனர். மேலும் முடிவெடுக்கும் திறன்களை வலுப்படுத்தும் பயிற்சி அமர்வுகள் மற்றும் மருத்துவ விவாதங்களிலும் அவர்கள் கலந்துகொண்டனர்.

பல்வேறு சிகிச்சை கருவிகளும் அதற்கான நடைமுறைகளும் அங்குள்ள மருத்துவத் துறையினருக்கு புதுமையாக இருந்தது. அவற்றை பற்றி தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டினர். “நவீன கருவிகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை விளக்கிக் கூறியதன் மூலம் அவர்கள், தங்களை நாடி வரும் நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்றார் ஸ்ரீதர்.■

# 2026: கோடை வெப்பத்தை குளிர்ச்சியாக மாற்றுவோம்

ப்ரீதி மேஹரா

*இந்த ஆண்டு இயல்பைவிட அதிகமான வெப்பநிலை மற்றும் அனல்காற்று வீசக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே வெப்பத்தை தணிக்கும் முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட வேண்டும்.*

இந்த ஆண்டு கோடைக்காலம் மிக மோசமாக இருக்கும். கோடை வெப்பம் சமாளிக்க முடியாத அளவு இருக்கும் என்று பல்வேறு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. கோடை காலத்தில் அதாவது மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் வெப்பநிலை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது. குறிப்பாக இமயமலைப் பகுதிகளிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் வெப்ப அலை வீசக்கூடும் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது நாட்டில் பெரும்பாலான பகுதிகளில் கோடை காலத்தில் வழக்கத்தைவிட வெப்பக் காற்று வீசும். அதை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதைவிட முக்கியமானது என்னவெனில் இரவில் வெப்பநிலை அதிகமாக இருக்கும். எனவே இந்த கோடைக்காலம் நமக்கு கடுமையாக இருக்கும் என்று தெரியவந்துள்ளது.

நாட்டின் கிழக்கு, மத்திய கிழக்கு, தென்கிழக்கு தீபகற்ப பகுதி மற்றும் வடமேற்கு மற்றும் வடக்கு மத்திய இந்தியா பகுதிகளில் மார்ச் முதல் மே மாதம் வரை வெப்பநிலை வழக்கத்தைவிட அதிகமாக இருக்கும் என்றும் சில நேரங்களில் வெப்ப அலை வீசும் எனவும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த கோடை மாதங்களை எவ்வாறு சமாளிப்பது என்ற கேள்வி எழும் அதே நேரத்தில் கார்பன் தடத்தையே நம்மால் கட்டுப்படுத்த முடியவில்லையே என்ற கேள்விக்கு நம்மை இட்டுச்செல்கிறது. இந்த கொடூரமான கோடை காலத்தில் வெளியில் சென்று வேலை செய்பவர்களுக்கு வேறு வழியே இல்லையே என்பதை நினைக்கும்போது நமது நெஞ்சம் துடிக்கிறது. தோட்டத் தொழிலாளர்கள், ஸ்விக்கி போன்ற உணவு மற்றும் நுகர்பொருள்களை வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு கொண்டு செல்பவர்கள், சாமான்களை டெலிவரி செய்பவர்கள், போக்குவரத்து போலீசார், தெருவோர வியாபாரிகள், பாதுகாப்பு காவலர்கள் என பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்? ஒரு சில நிறுவனங்களில் சொகுசாக வேலை செய்ய குளிரூட்டிகள் வசதி இருந்தாலும், பலர், வெப்பத்தை தணிக்க மின்விசிறிகூட இல்லாத அலுவலகங்களில் வேலைசெய்வதை நாம் பார்க்கிறோம். சூரிய ஒளியில் நேரடியாக வேலைசெய்பவர்கள் சிறிது நேரம் ஓய்வு எடுத்தாலும், நிழல் இல்லாவிட்டால் வெப்பம் தாங்காமல் சோர்வடைந்துவிடுவார்கள், அவர்கள் நீரேற்றம் இல்லாமல் அல்லது வெப்பத்தின் தாக்கத்தால் மயங்கிவிழ நேரிடும்.

துரதிருஷ்டவசமாக, நமது இந்திய நகரங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டனவா என்பதே கேள்விக்குறியாக உள்ளது. வெப்பத்தை தடுக்கும் நடவடிக்கையில் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. நெரிசல் மிகுந்த நகர்ப்புற பகுதிகள் வெப்பத்தில் சிக்கித் தவிக்கின்றன என்பது உண்மையாகும். இந்த நகரமா வெப்பம் அதிகமாக



இருக்குமே என்று சொல்லும் அளவுக்கு உள்ளது. நகர்ப்புற பகுதிகளில் சேரிகள் என அழைக்கப்படும் பகுதிகளில் உள்ள வீடுகளின் மேற்கூரை ஆஸ்பால்ட், தகரம்அல்லது கான்கிரீட்டால் வேயப்பட்டிருக்கும். இவை வெப்பத்தை உறிஞ்சி வீட்டினுள் அனுப்புவதால் வெப்பத்தின் தாக்கம் அதிகம் இருக்கும்.

உண்மையில் இந்த முறைசாரா வீட்டுக் காலனிகளில், உட்புற வெப்பம், பெரும்பாலும் வெளிப்புற வெப்பநிலையைவிட 8–10 டிகிரி செல்சியஸ் வரை அதிகம் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இது வெளிப்புறங்களைப் போலவே பேராபத்தை ஏற்படுத்தும். வீட்டிலிருக்கும் குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் குளிர்சூழலை அணுகமுடியாத சூழலில் அது உடல் நலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. அதிக வெப்பம் காரணமாக ஏற்படும் நோய் பாதிப்பு, வேலைநாட்களை இழக்க வழிவகுக்கிறது. மருத்துவச் செலவுகளை அதிகரிக்கிறது. வருமான இழப்பு ஏற்பட்டு பலரை வறுமை மற்றும் உதவியற்ற நிலைக்கு தள்ளுகிறது.

அதிகரித்து வரும் கோடை வெப்பத்தால் மக்கள் எதிர்கொள்ளும் ஆபத்தின் தன்மையை தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) அங்கீகரித்து, வெப்ப அலைகளை ஒரு தேசிய பேரிடராக அறிவித்துள்ளது. நகர்ப்புறத்தில் வசிக்கும் ஏழைகள் காலநிலையால் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்றும் அதற்கு ஏற்பட முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு தேவையானதை செய்ய வேண்டும் என்பதை உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்துள்ளது.

ஆனால், இந்த அதிகாரப்பூர்வ அங்கீகாரம் போதாது. நாம் ஒரு பொறுப்புள்ள குடிமக்கள் என்ற முறையில் பாதிக்கப்பட்டவர்களின் முன்னேற்றத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும்.

முக்கிய அம்சமாக நமது நகர நிர்வாகம் வெப்பத் தடுப்பு நடவடிக்கைக்கான செயல்திட்டத்தை வகுத்து அதை செயல்படுத்துவதை உறுதிசெய்ய வேண்டும். முன்கூட்டியே வெப்பகால நிலை குறித்து மக்களை எச்சரித்தல், நீர்நிலைகளை மேம்படுத்துதல், பூங்காக்களை பசுமையாக பராமரித்தல், கட்டட வடிவமைப்பில் குளிர்த்தன்மையை உறுதிசெய்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதில் கவனம் செலுத்துதல் ஆகியவை இதில் அடங்கும்.

பூங்காக்களை உருவாக்குதல், சாலையோர மரங்களை நடுதல் மற்றும் பசுமை பட்டைகளை நிறுவுதல் ஆகியவற்றை நாம் ஆதரிக்க வேண்டும். இது மதிய நேரத்தில் மக்கள் ஓய்வெடுக்க போதுமான நிழலை வழங்கும் மற்றும் வீட்டின் உட்புற வெப்பநிலையை குறைக்க உதவும்.

நடைபாதைகள் வெளிர் நிற பூச்சுக்களைக் கொண்டதாகவும், மேற்பரப்பு வெப்பத்தை குறைக்கும் வகையிலும், மழைநீரை உறிஞ்சும் வகையிலும் கட்டப்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டும். சுற்றுப்புறத்தில் ஏரி, குளம், கிணறு, நீர்நிலைகள் அல்லது ஈர நிலம் இருந்தால் அவற்றை புனரமைக்க வேண்டும். நீர்நிலைகளை அதன் உண்மைநிலைக்கு மீட்டெடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

வெளியில் சென்று வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நிழல்தரும் தங்குமிடங்களும், நீரேற்ற வசதிகளும், இடைவேளையில் ஓய்வெடுக்க வசதியும் செய்துகொடுத்தால் அது நாம் முன்னேற வழிவகுக்கும். மேலும் கோடையைச் சமாளிக்க வெப்பத்தை தணிக்கும் மருத்துவ வசதிகளையும் தயார்நிலையில் வைத்திருப்பது அவசியமாகும்.

சுண்ணாம்பு பூச்சு, ஒளிகளை கடந்து செல்லும் வண்ணப் பூச்சுகள், மாடித் தோட்டம் அமைத்தல், மூங்கில்களினால் நிழல் பந்தல் அமைத்தல் மூலம் வெப்பத்தை தணிக்கலாம். இதுபோன்ற அணுகுமுறைகள் மூலம் மேற்கூரைப் பகுதியில் 15–20 டிகிரி செல்சியல் வரையிலும் உட்புறத்தில் 8–10 டிகிரி செல்சியஸ் வரையிலும் வெப்பநில்யை குறைக்க முடியும்.

தனிப்பட்ட முறையில் முதலில் வியர்வையை உறிஞ்சி நமது உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கும் ஆடைகளை அணிய வேண்டும். ஏர்கண்டிஷனர்களை எப்போதும் 24 டிகிரி அல்லது அதற்கு மேல் வைத்து பயன் படுத்துங்கள். இதன் மூலம் குறைந்த ஆற்றல் மூலம், அதிக மின்கட்டணம் செலுத்தாமல் குளிர்ச்சியை பராமரிக்க முடியும். கோடை மாதங்களில் மின்தேவை அதிகரிப்பதால் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புண்டு என்பதால் தேவையற்ற மின்பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். சோர்வு ஏற்படாமல் தொடர்ந்து புத்துணர்ச்சி யுடன் இருக்க அடிக்கடி மோர், இளநீர், எலுமிச்சை சர்பத் குடிப்பது நல்லது.

கூடியவரை வெயில் அதிகமாக இருக்கும் சமயத்தில் வெளியில் செல்வதை தவிர்த்து விடுங்கள். இவை எல்லாம் நல்ல பலனைத் தரும். ஆனால், நான் தொடக்கத்தில் சொன்னதுபோலவே, நகரத்தில் சிறந்த சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதும், மாற்றத்தை ஆதரிப்பதும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும். எனினும் இவற்றில் உங்களது பங்களிப்பு முக்கியமானதாகும்.



எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதி வருகிறார்



## RID 3011

### RC குர்காவ்ன் குதப் என்க்ளேவ்

சிகந்தர்பூர் அரசு நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமைக் கண் வல்லுனரும் நலத்துக்கான சமூக இயக்குநருமான டாக்டர் தினேஷ் சக்சேனா ஒருங்கிணைத்தார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3040

### RC சாகர்

பட்குய்-யில் சரஸ்வதி சிசு மந்திரில் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த 25 குழந்தைகளுக்குக் குளிர் ஆடைகள் வழங்கப்பட்டன. ஒற்றைப் பயன்பாட்டுப் பிளாஸ்டிக்கை எதிர்க்கும்வகையில், ஓர் உள்ளூர்த் திருவிழாவில் கடைக்காரர்களுக்கு ரோட்டரியன்கள் 5,000 துணிப் பைகளை வழங்கினார்கள்.

## RID 3053

### RC அஜ்மெர் மெட்ரோ

மூன்று செவிலியர் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்கள் பங்கேற்ற இளம்பிள்ளைவாத விழிப்புணர்வுப் பேரணியை JLN மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் அனில் சமாரியா தொடங்கிவைத்தார்.





## RID 3056

### RC சிகர்

சிகர்-ல் ரதி மருத்துவமனையில் மாதந்தோறும் நடைபெறும் அறுவைச் சிகிச்சை முகாம்களில் பல சிறப்புத் துறைகளில் இலவச அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. சமீபத்திய முகாமில் ஏழு பேரைக் கொண்ட மருத்துவக் குழு 10 இலவச அறுவைச் சிகிச்சைகளைச் செய்தது.

## RID 3030

### RC நாக்பூர் மெட்ரோ

டலோடி கிராமத்தில் நடந்த நோய் கண்டறிதல் மருத்துவ முகாமில் 25 மருத்துவர்கள் 600க்கும் மேற்பட்ட நோயாளிகளைப் பரிசோதித்தார்கள். தனஸ்ரீ நக்ரி சகாகாரி பாட் சன்ஸ்தாவும் இந்த முகாமில் பங்கேற்றனர்.



## RID 3070

### RC கபூர்தலா டௌன்டவுன்

கஞ்சலியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒரு மின்-கற்றல் நிலையம் நிறுவப்பட்டது. மேலும், பல பள்ளிகளுக்குக் கை கழுவும் நிலையங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.



## RID 3060

### RC பரோடா சாயாஜிநகரி

சமா-வில் நூதன் வித்யாலயா-வில் நடந்த கண் பரிசோதனை முகாமில் 275 மாணவர்கள் பரிசோதிக்கப் பட்டார்கள். மூக்குக் கண்ணாடிகள் தேவைப்படுவோருக்கு அவை விரைவில் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

# கீல்வாதத்தை புரிந்துகொள்வோம்

கீதா மத்தாய்

நடுத்தர வயது ஆண்களில் 1 சதவீதம் பேர் நள்ளிரவில் பெருவிரல், கணுக்கால், முழங்கால், முழங்கை அல்லது மணிக்கட்டில் வலியுடன் எழுந்திருப்பார்கள். பாதிக்கப்பட்ட மூட்டுப் பகுதி வீங்கி, சூடாகவும் சிவப்பாகவும் இருக்கலாம். காய்ச்சலோ அல்லது மூட்டுகளில் காயங்களோ இல்லாமல் வீங்கியிருப்பது நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தலாம். மக்கள் வலியை தடுக்க உடனடியாக சுடுதண்ணீர், ஐஸ் அல்லது வலிநிவாரணிகளை வீட்டு வைத்தியமாக செய்துபார்க்கலாம். எதிர்பாராத விதமாக வலி, திடீரென தோன்றிய ஒன்று அல்லது இரண்டு நாட்களில் குறையலாம். பின்னர் சில வாரங்கள் அல்லது மாதங்களுக்குப் பிறகு நடு இரவில் மீண்டும் இதேபோன்ற வலி ஏற்படலாம்.

இது ஒருவகையான கீல்வாதம். இது ஒரு காலத்தில் பணக்காரர்களுக்கு வரும் நோயாக மட்டும் கருதப்பட்டது. அதாவது மதுவுடன், அதிக புரதச்சத்து கொண்ட இறைச்சிகளை உணவாக சாப்பிடுபவர்களுக்குத்தான் இந்த நோய் வரும் என கருதப்பட்டது. ஆனால், இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவு அதிகரிப்பதால் கீல்வாதம் ஏற்படுகிறது என்பதை இப்போது நாம் தெரிந்துகொள்வோம். (யூரிக் அமிலம் இரத்தத்தில் காணப்படும் ஒரு கழிவுப்பொருளாகும். இது சிறுநீரகம் வழியாக சிறுநீராக வெளியேற்றப்படுகிறது.)

உலக அளவில் கீல்வாத நோய் (மூட்டு வலி) அதிகரித்து வருகிறது. குறிப்பாக இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்தில் இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. இந்தியாவில் மொத்த மக்கள் தொகையில் 0.3 சதவீதம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நவீன வாழ்க்கை முறைகள், அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது, போதிய உடற்பயிற்சி இல்லாமை, உடல் பருமன் மற்றும் நீரிழிவு நோய் ஆகியவை இந்த நோய் அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றன.

பொதுவாக மூட்டு வலியால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்கள் தான். எனினும் பெண்கள், மாதவிடாய் நிற்கும்வரை ஈஸ்ட்ரோஜன் என்னும் ஹார்மோன் சுரப்பதால் பாதுகாக்கப் படுகின்றனர்.

அதிகப்படியான உணவு மற்றும் மது குடிப்பது மட்டுமே இதற்கு காரணம் என்று சொல்ல முடியாது. மூட்டுவலி என்பது பெரும்பாலும் மரபியல் சார்ந்தது. மேலும் மரபணு மாற்றத்தால் ஏற்படுவது. இது உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கு வந்திருக்குமானால், உங்களுக்கும் வருவதற்கு 30 சதவீத வாய்ப்புகள் உள்ளன. எனினும் வாழ்க்கை முறை மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளையும் பொறுத்தது.

உடலில் செல்கள் அழிவது அதிகரித்தால், அதிகப்படியான உணவு இல்லாவிட்டாலும் யூரிக் அமிலம் சுரப்பது அதிகரிக்கலாம். லூகேமியா (ரத்தசோகை) மற்றும் செல்கள் சிதைவு ஏற்படும் நிலையில் இதற்கு வாய்ப்பு உண்டு. சிறுநீர் பெருக்கி மாத்திரைகள், குறைந்த அளவில் ஆஸ்பிரின் மருந்து எடுத்துக் கொள்ளுதல், தசைகள் இயக்க கோளாறுகளுக்கான மருந்துகளை உட்கொள்ளுதல், நோய்எதிர்ப்பு தடுப்பு மருந்துகள், புற்றுநோய்க்கான கீமோதெரபி ஆகியவற்றின் விளைவாகவும் மூட்டுவலி அதிகரிக்கலாம்.

பெரும்பாலும் சிறுநீரகங்கள் உடலில் உள்ள யூரிக் அமிலத்தை திறமையாக வெளியேற்றுகின்றன. எனினும் அவற்றின் அளவு சராசரியைவிட (6-7 மில்லிகிராம்) அதிகரித்தால் அதிகப்படியான திரவம் மூட்டுப் பகுதியில் தங்கிவிடும். யூரிக் அமில படிமங்கள் கூர்மையானவை, ஊசிபோன்றவை. அவை மூட்டு குருத்தெலும்புகளைச் சேதப்படுத்தி, மூட்டுக்குள் அழுத்தத்தை அதிகரிக்கின்றன. இதனால் மூட்டுப் பகுதி சிவந்து, வீக்கம் ஏற்படுத்தி வலியை உண்டாக்கி எதிர்வினையாற்றுகின்றன.

மூட்டுவலியை கவனிக்காமல் விட்டுவிட்டால், காலப்போக்கில் அடிக்கடி வலி ஏற்படலாம். பின்னர் வலி தொடர்ந்து நீடித்து நாள்பட்ட கீல்வாதமாக மாறும் அபாயம் உள்ளது. இது வீக்கம் மற்றும் மூட்டு சிதைவுக்கு வழிவகுக்கும். சில



நேரங்களில் யூரிக் அமிலம், தோலின்கீழ் படிந்துவிடும். இவை பொதுவாக காதுகள், விரல்கள் அல்லது கால் விரல்களில் காணப்படும். இந்த படிமங்கள் நோய் அறிதலுக்கு அறிகுறியாகின்றன. அதிகப் படியான யூரிக் அமிலம் சிறுநீரகங்களில் படிந்து வலிமிகுந்த கற்களை உருவாக்கக்கூடும். மேலும் மோசமடைந்தால் சிறுநீரகம்கூட பாதிக்க ப்படலாம்.

அதிக யூரிக் அமிலம் உள்ள அனைவருக்கும் இதற்கான அறிகுறிகள் ஏற்படுவதில்லை. சிலர் வாழ்நாள் முழுவதும் முற்றிலும் அறிகுறியற்றவர் களாகவே இருக்கிறார்கள். அதிக யூரிக் அமிலத்தின் அளவு வழக்கமான இரத்தப் பரிசோதனைகளின் போது மட்டுமே கண்டறியப்படுகிறது.

யூரிக் அமிலத்தின் அளவை கண்டறியும் இரத்த பரிசோதனைகள், மூட்டுப் பகுதியில் யூரிக் அமிலத்தின் படிமங்கள் படிந்திருப்பது, எக்ஸ்-ரே அல்லது திசுக்கள் பரிசோதனை மூலம் கீல்வாதம் அல்லது மூட்டுவலியை கண்டறிய முடியும். சில சமயங்களில் கால்சியம் குறைபாடுகளாலும் மூட்டு வலி ஏற்படலாம். அந்த நிலையில் மூட்டுப் பகுதியில் யூரிக் அமிலத்துக்கு பதிலாக கால்சியம் உப்புகள் படிந்திருக்கும்.

மூட்டுவலி அதிகம் இருந்தால், மருந்துகள் மூலம் வலியை குறைக்கலாம். சிகிச்சைகள் நபருக்கு நபர் வேறுபடும். ஸ்டெராய்டு இல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் சிலருக்கு நன்றாக வேலைசெய்யும். இன்டோமெதசின் மற்றும் கோல்சிசின் போன்ற மருந்துகள் நன்றாக வேலை செய்யும். கடுமையான பாதிப்புள்ள சிலருக்கு ஸ்டெராய்டு ஊசிகள் தேவைப்படலாம். வலியின் தாக்குதல் குறைந்த பிறகு, இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவை குறைக்க அல்லோபுரினோல் போன்ற மருந்துகள் தொடர்ந்து பரிந்துரைக்கப்படலாம்.

சிகிச்சையின் முக்கிய அம்சமாக மருந்துகள் பயன்படுத்தப்பட்டாலும், எளிய நடவடிக்கைகள் மூலம் தாற்காலிகமாக வலியிலிருந்து நிவாரணம் பெறலாம். உப்பு கலந்த வெது வெது நீரில் முழங்கால்களை சிறிது நேரம் வைத்திருந்தால் திசுக்கள் தளர்வடைந்து நிவாரணம் கிடைக்கும். மேலும் ஐஸ் கட்டிகளை வைப்பதன் மூலம் வீக்கத்தை குறைக்க முடியும்.




வாழ்க்கை முறையில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் மூட்டுவலியின் தாக்கத்தை குறைக்க முடியும்.

- உடல் எடையை முறையாக பராமரிக்க வேண்டும். 23 BMI (உடல் எடை குறியீட்டு எண்) சிறந்தது என்றாலும், உடல் எடையை உயரத்தின் சதுர மீட்டரால் வகுத்து கணக்கிட்டு எடையை பராமரிக்க வேண்டும். 35 BMI-க்கு மேல் உடல் எடை இருந்தால் மூட்டுவலி அல்லது கீல்வாதம் அதிகரிப்பதற்கான அபாயம் உள்ளது.
- பீர் மற்றும் அதிகப்படியாக குடிப்பழக்கம் மூட்டுவலி தாக்குதலுக்கான வாய்ப்பை அதிகரிக்கிறது.
- மாவுச்சத்து அதிகம் உள்ள உணவுகளை சாப்பிட வேண்டும். இறைச்சிகள் உண்பதை குறைக்க வேண்டும். சைவ உணவு சாப்பிடுபவர்கள் காலிஃபிளவர், பசலைக்கீரை போன்றவற்றில் அதிக அளவு பியூரின் கரிமச்சேர்மம் இருப்பதை நினைவுவில் கொள்ள வேண்டும்.
- காபி குடிப்பது நல்லது. இது இரத்தத்தில் யூரிக் அமிலத்தின் அளவு அதிகரிக்காமல் குறைக்க உதவும்.
- வைட்டமின் சி அதிகம் உள்ள உணவுப் பொருள்கள் யூரிக் அமிலத்தின் அளவை குறைக்க உதவும். எனினும் 500 மில்லி கிராமுக்கு அதிகம் உள்ள வைட்டமின் சி மாத்திரைகளை உட்கொள்வது பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம்.

வைட்டமின் சி-யை இயற்கையாகவே பெறுவது நல்லது. உதாரணமாக எலுமிச்சை சர்பத் அல்லது ஆரஞ்சு, வாழைப்பழம் போன்ற பழங்களை சாப்பிடுவது நல்ல பலனைத் தரும்.

- ஒரு நாளைக்கு நான்கு லிட்டர் தண்ணீர் குடிக்கவும். அதிகமான நீரேற்றம் உடலிலிருந்து யூரிக் அமிலத்தை கழிவாக வெளியேற்ற உதவுகிறது. மேலும் சிறுநீரகத்தில் கல் உருவாகாமல் தடுக்கிறது.
- ஃப்ரக்டோஸ் என்று அழைக்கப்படும் பழசர்க்கரை பொதுவாக ஜாம், மிட்டாய்கள் மற்றும் பழச்சாறுகளில் இனிப்பு பொருளாகச் சேர்க்கப்படுகிறது. கல்லீரலில் அதன் வளர்சிதை மாற்றம் யூரிக் அமிலத்தின் உற்பத்தியை அதிகரிக்கிறது. பழசர்க்கரை கலந்த குளிர் பானங்கள், பதப்படுத்தப்பட்ட உணவுகள் கீல்வாத்தின் அபாயத்தை 85 சதவீதம் அதிகரிக்கிறது.

சரியான சிகிச்சை முறை மற்றும் விவேகமான வாழ்க்கை முறையின் மூலம் கீல்வாதம் அல்லது மூட்டு வலியை கட்டுக்குள் வைத்திருக்க முடியும். இதன் மூலம் மக்கள் சுறுசுறுப்பான மற்றும் வலியற்ற வாழ்க்கையை வாழமுடியும்.

எழுத்தாளர் ஒரு குழந்தை மருத்துவர் மற்றும் Staying Healthy in Modern India என்ற புத்தகத்தின் ஆசிரியர் ஆவார்.

# உண்மை மீதான புனைவு


*வேர்ட்ஸ்வேர்ல்டு பகுதியின் 100-வது கட்டுரையை - விந்தையானது ஆனால் உண்மையானது! - எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர்களில் ஒருவருடன் நாம் கொண்டாடலாமா?*




சந்தியா ராவ்

அமிதவ் கோஷின் அனைத்து புத்தகங்களையும் நான் படித்ததில்லை, ஆனால் நான் படித்தவற்றை மிகவும் நேசித்தேன். எனது தனிப்பட்ட விருப்பத்தின் வரிசைப்படி அவை இருக்கலாம், இருப்பினும் உண்மைகளின் அடிப்படையில் புனைவுகளைக் கட்டமைக்கும் அவரது அணுகுமுறை வியக்கத்தக்கது. அவரது 2025-ம் ஆண்டு கட்டுரைத் தொகுப்பான வைல்ட் ஃபிக்ஷன்ஸ், அது புத்தகக் கடைகளுக்கு வந்த நாள் முதல் எனது மேஜையில் இருந்தது. ஆனால் சமீபத்தில் பரிசாகக் கிடைத்து 2019-ல் வெளியான கன் ஐலண்ட் நாவலை நான் கையில் எடுத்தபோதுதான், அந்த கட்டுரைத் தொகுப்பையும் சமகாலத்தில் வாசிக்கத் தொடங்கினேன். அவை இரண்டும் அற்புதமான இணையாக அமைந்தன! கன் ஐலண்ட் நாவலில் அவர் பேசும் விஷயங்கள், பல ஆண்டுகளாகப் பிரசுரிக்கப்பட்டு வைல்ட் ஃபிக்ஷன்ஸ் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கட்டுரைகளில் உறுதிப்படுத்தப் பட்டு நிரூபிக்கப் படுகின்றன. இது சமூக, அரசியல் மற்றும் சுற்றுச்சூழல் கவலைகள் மீதான ஆசிரியரின் அர்ப்பணிப்பைத் தெளிவாக அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

'கன் ஐலண்ட் நாவலை தி ஹங்ரி டைட் (2004) நாவலின் ஒரு வகையான தொடர்ச்சி என்று சொல்லலாம்; இரண்டுமே சுந்தரவனக் காடுகளுடனும் அந்தப் பிராந்தியத்திலிருந்து உருவாகும் புராணக்கதைகளுடனும் தொடர்புடையவை. சுந்தரவனம் என்பது மேற்கு வங்கம் மற்றும் வங்காளதேசம் முழுவதும் பத்தாயிரம் சதுர கிலோமீட்டருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட, செழுமையான பல்லுயிர் பெருக்கம் கொண்ட ஒரு பிரம்மாண்டமான சதுப்புநிலக் காடு. கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் மேக்னா ஆறுகள் வங்காள விரிகுடாவைச் சந்திக்கும் இடத்தில் உருவாகும் டெல்டா பகுதியில் இது அமைந்துள்ளது. இங்கிருக்கும் தீவுகளும் சேற்று நிலங்களும் கடலின் ஓதங்களுக்கு ஏற்ப இரவில் அதிக அலையையும் பகலில் குறைந்த அலையையும் அனுபவிக்கும் பல நீரோடைகளால் சூழப்பட்டுள்ளன. அதன் விளைவாக, அங்குள்ள நீர் உப்புத்தன்மை கொண்டுள்ளது. இங்குதான் ராயல் பெங்கால் புலிகள் உலவுகின்றன - நீந்தவும் செய்கின்றன. ஆனால் இன்னும் எவ்வளவு காலம் அவை மற்றும் பிற அழிந்து வரும் உயிரினங்கள் அங்கு ஆதிக்கம் செலுத்தும் என்பது நமக்குத் தெரியாது. அதோடு, சூறாவளிகளால் ஏற்படும் ஆபத்தும் பேரழிவும் அங்கு எப்போதும் உண்டு.





'கன் ஐலண்ட் நாவலில், தி ஹங்ரி டைட் நாவலின் சில கதாபாத்திரங்களை நாம் மீண்டும் சந்திக்கிறோம்; நமது கதையின் நாயகன் தீநாத் தீன் தத்தா, அமெரிக்காவில் வசிக்கும் பழங்காலப் புத்தகங்களின் வியாபாரி. தொடர்ச்சியான தற்செயல் சந்திப்புகள் மற்றும் குறிப்புகள் மூலம் துப்பாக்கி வியாபாரியின் புராணக்கதையை அவர் ஆராய முற்படுகிறார். இது அவரைச் சுந்தரவனத்திலுள்ள மானசா தேவியின் கோவிலுக்குச் செல்லத் தூண்டுகிறது. தொழில்நுட்ப அறிவு மிக்க, லட்சியம் கொண்ட ஒரு மீனவ இளைஞனான திபுவும் அவருடன் செல்கிறான். கோவிலின் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ள சில குறியீடுகள் தீனை ஈர்க்கின்றன. அவர் அவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு பாம்பிடமிருந்து ஏற்படும் ஆபத்திலிருந்து அந்த கோவிலை பராமரிக்கும் ராஃபி என்ற சிறுவன் திடீரெனத் தோன்றி அவரைக் காப்பாற்றுகிறான். அமெரிக்கா திரும்பியதும், தீன் தனது பழைய நண்பரும், வழிகாட்டியும் வெனிஸ் வரலாற்றில் அறிஞரான பேராசிரியர் ஜியாசிந்தா சிந்தா ஷியாவோனுடன் மீண்டும் தொடர்பு கொள்கிறார். அவர்கள் இருவரும் வெனிஸுக்குச் சென்று பல விசித்திரமான அனுபவங்களைப் பெற்ற பிறகு, பந்துக்கி சதகரின் புராணக்கதையைப் புரிந்துகொள்ள சிந்தா அவருக்கு உதவுகிறார். சிந்தாவும் தனக்குள் சுமந்து வரும் துயரத்திற்கு ஒரு தீர்வை அடைகிறார், மேலும் வெனிஸ் நகரம் ஏன் இவ்வளவு பெங்காலி பேசும் (பெரும்பாலும் வங்காளதேசத்தைச் சேர்ந்த) அகதிகளின் இருப்பிடமாக இருக்கிறது என்பதையும் தீன் கண்டறிகிறார். இந்த உண்மை, வைல்ட் ஃபிக்ஷன்ஸ் தொகுப்பில் உள்ள தி கிரேட் அப்ரூட்டிங்: மைக்ரேஷன் அண்ட்




டிஸ்ப்ளேஸ்மென்ட் இன் ஆன் ஏஜ் ஆஃப் பிளானட்டரி கிரைசிஸ் (2021) என்ற கட்டுரையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் கோஷ் ஒரு அவதானிப்பைச் செய்கிறார்: “...அவர்களில் (புலம்பெயர்ந்தோர்) பலர் தங்கள் பயணத்தின் மிக மோசமான பகுதி சாலை அல்லது கடலில் செலவழித்த நேரம் அல்ல, மாறாக ஐரோப்பிய அகதி முகாம்களில் அவர்கள் வாடும் மாதங்களும் ஆண்டுகளுமே என்று கூறுகிறார்கள். அந்த முகாம்களில் காத்திருப்பதையும் உறங்குவதையும் தவிர வேறு வேலை எதுவுமில்லை; உங்களுக்கு உணவும் இருப்பிடமும் படிகளும் வழங்கப்படுகின்றன என்பது சிறிய ஆறுதலே; அந்தத் தேக்கமான காத்திருப்பும் வேலையின்மையும் தான் மன உறுதியைச் சிதைக்கின்றன.”

‘கன் ஐலண்ட் கதையைச் சுருக்கமாகக் கூறுவது கடினம். இது தொடர்பாக, தீன் சிந்தாவுடன் நடத்தும் உரையாடலை நினைவு கூர்வது சுவாரஸ்யமானது. ஒரு புராணக்கதையை “வெறும் கதைதானே” என்று அவர் குறிப்பிடும்போது, அவர் தினைத் திருத்தி இப்படிக் கூறுகிறார்: “பதினேழாம் நூற்றாண்டில் யாரும் எதையும் நாம் இப்போது சொல்வது போல வெறும் கதை என்று சொல்லியிருக்க மாட்டார்கள். அந்த நேரத்தில், கதைகள் சாதாரணமானவற்றிற்கு அப்பாற்பட்ட, மனிதத் தன்மைக்கும் அப்பாற்பட்ட பரிமாணங்களைத் தொடக்கூடியவை என்பதை மக்கள் உணர்ந்திருந்தார்கள். கதைகளின் மூலமாக மட்டுமே நமது இருப்பின் ஆழமான மர்மங்களுக்குள் நுழைய முடியும் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்...” அவர் தொடர்ந்து வாதிடுகிறார்: “கதை சொல்லும் திறன் என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரியது அல்லாமல், நமது விலங்குத் தன்மையின் கடைசி எச்சமாக இருந்தால் என்ன செய்வது? மொழி உருவாவதற்கு முந்தைய காலத்திலிருந்து மீதமுள்ள ஒரு அடையாளமாக அது இருக்கலாம், மற்ற உயிரினங்களைப் போலவே நாமும் அப்போது தொடர்பு கொண்டிருந்தோம் அல்லவா?” இது ஒரு தூண்டுதலை ஏற்படுத்தும் உணர்வுப்பூர்வமான தளம்.

எனது பார்வையில் இது அசல் அமிதவ் கோஷின் பாணி. அவர் உங்களுக்கு ஒரு கதையைச் சொல்கிறார், அவரது நடை முறைசாராததாக இருக்கும், அதே வேளையில் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி உங்களை விழிப்புணர்வு அடையச் செய்கிறார். அந்த யதார்த்தம் – இருக்கும் உலகங்கள் மற்றும் இல்லாதது போல் தோன்றும் உலகங்களின் யதார்த்தம். விமர்சனங்களின்படி, அவரது சமீபத்திய புத்தகமான கோஸ்ட்–ஐ என்பதும் இது போன்ற ஏதோ ஒன்றையே ஆராய்வதாகத் தெரிகிறது. ஆனால் நமக்குத் தெரிந்த உலகத்தைப் பொறுத்தவரை, அது அவர் தாமாகவே ஆராய்ச்சி செய்து, பரிசோதித்து, அனுபவித்த ஒன்றாகும். உதாரணமாக, வைல்ட் ஃபிக்ஷன்ஸ் தொகுப்பில் உள்ள தி டவுன் பை தி சீ கட்டுரையை எடுத்துக் கொள்ளுங்கள். டிசம்பர் 24-ம் தேதி இந்தப் பகுதியை நிலைகுலையச் செய்த சுனாமியின் சில நாட்களுக்குப் பிறகு, ஜனவரி 1, 2005 அன்று போர்ட் பிளேயரில் உள்ள நிர்மலா பள்ளி முகாமில் அவர் இருக்கிறார். ஐரோப்பிய அகதி முகாம்களில் புலம்பெயர்ந்தோரின் காத்திருப்பைப் பற்றி சில பத்திகளுக்கு முன் குறிப்பிட்டதன் எதிரொலியாக அவர் எழுதுகிறார்: “அகதிகள் கடந்த மூன்று நாட்களாக முகாமில் கவலையுடன் காத்திருந்தனர், அந்த நேரத்தில் யாரும் அவர்களிடம் எங்கே செல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்கவில்லை; தங்களுக்கு என்ன நேரும் என்பது பற்றி அவர்களில் யாருக்கும் எந்த யோசனையும் இல்லை. திக்கற்றுப் போயிருக்கிறோம் என்ற




உணர்வு அவர்களை நிலைகுலையச் செய்திருந்தது. பிரச்சனை பற்றாக்குறையோ அல்லது கஷ்டமோ அல்ல... அந்த நிச்சயமற்ற தன்மைதான் சகித்துக்கொள்ள முடியாததாக இருந்தது.”

இரண்டு புத்தகங்களுமே தமக்கேயுரித்தான வழிகளில் ஒரு கருப்பொருளை வலியுறுத்துகின்றன, அதாவது இயற்கை நிகழ்வுகள் “உலக மக்கள்தொகையின் பெரும் பகுதியை இழக்கச் செய்து, ஒரு சிறுபான்மை மனிதர்களுக்குப் பெருமளவில் பயனளித்த வரலாற்றுச் செயல்முறைகளின் பக்கவிளைவுகளே”. இன்று நமது மனதை எவை ஆக்கிரமித்துள்ளன என்று சுற்றிப் பார்க்கும்போது, இது அர்த்தமுள்ளதாகத் தெரிகிறது. அமிதவ் கோஷைப் படிப்பது உலகைப் படிப்பது என்று கூட நீங்கள் கூறலாம். கோஸ்ட்–ஐ புத்தகம் கலவையான விமர்சனங்களைப் பெற்றுள்ளது. இருப்பினும், டவுன் டு எர்த் தளத்தில் அசுதோஷ் குமார் தாக்கூர் கூறுவது உலகைப் படிப்பது என்ற சொற்றொடரைத் தெளிவுபடுத்த உதவக்கூடும். அந்த நாவல் சகவாழ்வைப் பற்றியது என்று முடிவாகக் கூறும் தாக்கூர்: “கோஷ் தீர்வுகளை வழங்குவதில்லை. அவர் கவனத்தை வழங்குகிறார். அதன் அமைதியான, நிதானமான உரைநடை மற்றும் அவசரமாக ஒரு பொருளைத் திணிக்க மறுக்கும் அதன் தன்மை மூலம், கோஸ்ட்–ஐ இலக்கியம் என்பது இன்னும் கவனிப்பதற்கான, தயங்குவதற்கான மற்றும் மீண்டும் பார்க்கக் கற்றுக்கொள்வதற்கான ஒரு இடமாகச் செயல்பட முடியும் என்பதை நினைவூட்டுகிறது” என எழுதுகிறார். அதுவே நல்ல இலக்கியத்தின் இடம். இதனால் தான் நமக்கு புத்தகங்களும், எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும், உற்றுநோக்குபவர்களும் தேவைப்படுகிறார்கள்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.




## RID 3100

**RC முஜாஃபர் நகர்**

UP-யிலுள்ள கடௌலி-யின் 17 சங்கங்களும் பங்கேற்ற உறுப்புக் கொடை விழிப்புணர்வு நடையை DG நிதின் அகர்வால் தொடங்கி வைத்தார். இந்தப் பேரணியை வைஷாலியிலுள்ள மேக்ஸ் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, அலக்நந்தா இரத்த மையம், இன்னர் வீல் சங்கம் ஆதரித்தன.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3205

**RC பெரும்பாவூர் ஹெரிடேஜ்**

பெரும்பாவூரிலுள்ள ஆஸ்ரமம் HS பள்ளி, அரசுப் பெண்கள் HS பள்ளியில் படித்தல் பரிசு என்ற திட்டத்தை AG அய்ஜூப் ஜேக்கப், நகராட்சித் துணைத் தலைவர் ஆனி மார்ட்டின் தொடங்கிவைத்தனர். மாணவர்களிடையில் படிக்கும் பழக்கத்தை முன்னிறுத்துவதற்காகப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

## RID 3234

**RC அண்ணா நகர் மெட்ராஸ்**

மறைமலைநகரிலுள்ள ஆசியானா சுபம் முதியோர் சமூகத்தில் நடந்த இதயப் பரிசோதனை முகாமில் சுமார் 70 முதியோருக்கு ECG, எக்கோ, இரத்தச் சர்க்கரை, BP, BMI போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டன.






## RID 3240

**RC ஆஸ்பயரிங் அகர்தலா**

திரிபுரா சாந்திநிகேதன் மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து, காளான் வளர்க்கும் பயிலகம் ஒன்று நடத்தப்பட்டது. சங்க உறுப்பினர்களும், மாநில விவசாயத் துறையின் துணை இயக்குநர் தேபிகா பௌமிக்கும் 28 பங்கேற்பாளர்களுக்குப் பயிற்சியளித்தனர்.

## RID 3120

**RC குஷிநகர்**

காசியாவிலுள்ள சுபாஷ் சௌக்கில் நடைபெற்ற சாலைப்பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியின் போது, இரு சக்கர வண்டி ஓட்டும் 50 பேருக்கு இலவசத் தலைக்கவசங்கள் வழங்கப்பட்டன. இந்த முகாம் சகில் பஜாஜ் ஏஜென்ஸி ஆதரவுடன் நடைபெற்றது.





## RID 3291

**RC ஜோத்பூர் கார்டன்ஸ் கல்கத்தா**

RCC சிசிர் பகான் தாலியா-வில் நடந்த பெண்கள் கால்பந்துக் காட்சிப் போட்டியில் DGE தபாஸ் பட்டாச்சரியா தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். PDG முகுல் சின்ஹா, PP தேபி பிரசாத் பாசு-வும் இதில் பங்கேற்றனர்.

## RID 3262

**RC புபனேஸ்வர் மெடோஸ்**


ஹரிஜன் சஹி பஸ்டி என்ற ஏழைக் குடியிருப்பில் நடைபெற்ற HIV/ AIDS விழிப்புணர்வு முகாமால் 100 பெண்கள் பயனடைந்தர். கேபிடல் மருத்துவமனை மருத்துவர்கள், ரோட்டரியன்கள் பிஜோய்லக்ஷ்மி கர், சுராஜ் ராஜ், துணைத் தலைவர் தீபக் ஜெனா இந்த நோய் பற்றியும், ஒடிசா மாநில AIDS கட்டுப்பாட்டுச் சங்கத்தின் பணிகளைப்பற்றியும் பேசினார்கள்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



# பிராண்டிங் ஆரவாரங்கள்

LBW



TCA ஸ்ரீனிவாச ராகவன்

இந்த முதிர்ந்த 75 வயதிலும், எனக்குப் புரியாத பல விஷயங்களில் ஒன்று இந்த பிராண்ட் என்ற கருத்துருவாக்கம். 1960-கள் வரை, ஒரு பிராண்ட் என்பது அந்தப் பொருளைத் தயாரிப்பவரைக் குறிப்பதாகவே இருந்தது. அட்லஸ் சைக்கிள், சன்லைட் சோப்பு, உஷா தையல் இயந்திரம் எனப்பல. இவை வெறும் தயாரிப்புகளின் பெயர்களே தவிர, அதற்கு மேல் வேறொன்றுமில்லை. பின்னர் 1970-களில், பிராண்ட் என்ற சொல்லுக்கு ஒரு புதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சொல்லப்போனால், அதிலிருந்தே பிராண்டிங் என்ற புதிய வினைச்சொல் உருவானது. விற்பனை செய்வதிலிருந்து மாறுபட்ட மார்க்கெட்டிங் என்பது ஒரு மோகமாக உருவெடுத்த காலம் அது. நீங்கள் வெறும் விற்பனைப் பிரதிநிதி அல்ல; மார்க்கெட்டிங் எக்ஸிகியூட்டிவ் ஆகிவிட்டீர்கள். மார்க்கெட்டிங் என்பது அடிப்படையில் ஒரு பொருளுக்கு பிராண்டிங் செய்வதன் மூலம் அதைச் சுற்றி ஒரு மாயவட்டத்தை உருவாக்குவதாகும். காலணிகளும் சோப்புகளும் சாதாரணமாக விற்கப்படவில்லை. இல்லாத குணாதிசயங்களை இருப்பதாக உங்களை நம்ப வைக்க முயலும் விளம்பரங்கள் மூலம் அவை சந்தைப்படுத்தப் பட்டன.

எனது பொருளாதாரப் பின்னணியைக் கொண்டு பார்க்கையில், தயாரிப்புகளுக்கு இடையேயான வித்தியாசம் மிகக் குறைவாக இருக்கும் கடும் போட்டி நிறைந்த சந்தைகளில், ஒரு பொருளின் தரத்தைப் பற்றித் தெரிவிக்கும் முக்கியமான ஊடகமாக பிராண்டுகளும் பிராண்டிங்கும் இருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு உபயோகமற்ற பொருளைக் கூட, உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஒரே ஒரு மாயாஜாலப் பொருளாக விற்றுவிட முடியும். ஆனால் எனக்குப் புரியாதது என்னவென்றால், இந்த உலகத்திலுள்ள எல்லாவற்றிற்கும் ஏன் பிராண்டிங் செய்ய வேண்டும் என்பதுதான். குட்கா வையும் பெட்டிகளையும் எடுத்துக்கொள்வோம். இவற்றைத் தயாரிப்பவர்கள் ஏன் மார்க்கெட்டிங்கிற்காக இவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள்? குட்காவும், சிகரெட்டும் உடல் நலத்திற்குத் தீங்கானவை என்று தெரிந்தும், அவற்றின் தயாரிப்பாளர்கள் வாழ்க்கை முறையை வலியுறுத்தும் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை முன்னெடுக்கிறார்கள். உங்களை நீங்களே அழித்துக்கொள்வது எப்படி ஒரு உயரிய வாழ்க்கை முறையாக இருக்க முடியும் என்பது எனக்கு அப்பாற்பட்ட விஷயம். இது ஒரு நாட்டுத் துப்பாக்கியால் உங்களைச் சுட்டுக்கொள்வதை விட, ஒரு உயர்தரத் துப்பாக்கியால் சுட்டுக்கொள்வது கௌரவமானது என்று சொல்வதைப் போன்றது.


பெட்டிகளை எடுத்துக்கொள்வோம். உங்கள் பெட்டிகள் எந்த கம்பெனி தயாரிப்பு என்று யாருக்குக் கவலை? சொல்லப்போனால், ரயிலில் அது இருக்கைக்கு அடியில் போகிறது. காரில் டிக்கிக்குள் போகிறது. விமானத்தில் சரக்கு அறையில் வைக்கப்படுகிறது. பிறகு ஏன் இந்த பிராண்டட் பெட்டிகளுக்கு இவ்வளவு ஆரவாரம்? இருப்பினும், லோக்கல் மால் என்று ஏளனமாக அழைக்கப்படும் பிராண்ட் இல்லாத பெட்டிகளை விட, பிராண்டட் பெட்டிகளுக்கு மக்கள் பத்து மடங்கு அதிக விலை கொடுக்கிறார்கள்.

அதேபோல் மதுவின் விஷயத்திலும். ஸ்காட்ச், விஸ்கி யைப் பற்றிய பந்தாக்களை விட என்னை எரிச்சலூட்டுவது வேறொன்றுமில்லை. அதன் மணம், புகைத்தன்மை, பழமை, பீப்பாய்கள் என அதன் மீது அளவுக்கு அதிகமான பில்ட்-அப் கொடுக்கப்படுகிறது. இதெல்லாம் கூடுதல் சுவை பற்றிய அர்த்தமற்ற பேச்சுக்கள். ஒரு வீடியோவில் யாரோ குறிப்பிட்டது போல, நீங்கள் பாட்டிலுக்கும் லேபிளுக்கும் தான் பணம் செலுத்துகிறீர்கள், மதுவிற்கல்ல. 1960-களின் இறுதியில் நான் முதலாம் ஆண்டு கல்லூரி படித்துக் கொண்டிருந்தபோது, ஒரு அறிவியல் மாணவன் ஒரு நாள் ஒரு பீக்கர் நிறைய சுத்தமான எத்தில் ஆல்கஹாலைக் கொண்டு வந்தான். அதை ஒரு பக்கெட்டில் 12 பாட்டில் கோகோ கோலாவுடன் கலந்து, யாரும் குடிக்கலாம் என்று நடைபாதையில் வைத்தோம். அதன் சுவை இன்று கிடைக்கும் எந்தவொரு நல்ல ஸ்காட்ச் போலவும் இருந்தது. ஒருமுறை நான் ஒரு இந்திய விஸ்கியை ஸ்காட்ச் பாட்டிலில் ஊற்றிப் பரிமாறினேன். யாராலும் வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை, குறிப்பாக சோடா கலந்து குடிக்கும்போது.

அதைப்பற்றிப் பேசும்போது, சோடாவுக்கு ஏன் பிராண்டிங்? அமிர்தசரஸில் ஒரு சீக்கிய கடைக்காரர் என்னிடம் ஒருமுறை சொன்னது போல, “கொஞ்சம் கூட வித்தியாசம் இல்லை, அண்ணா.” ஒரு பெரிய நுகர்வோர் தயாரிப்பு நிறுவனத்திற்குத் தலைமை தாங்கிய பழைய நண்பர் ஒருவரிடம் இதைப் பற்றி நான் கேட்டபோது, அவர் ஒரு பதில் கேள்வியைக் கேட்டார்: "அதன் தரம் உங்களுக்கு எப்படித் தெரியும்?". "பிராண்டட் என்றால் மட்டும் தரம் தெரிந்துவிடுமா?" என்று நான் கேட்டேன். ஒரு பிராண்ட் இல்லாத காலணி, ஒரு வெளிநாட்டு பிராண்டை விட எப்படிச் சிறப்பாக இருந்தது என்று அவரிடம் கூறினேன். அவர் என்னை நம்ப மறுத்துவிட்டார். நாங்கள் சிறிது நேரம் வாதிட்டோம், பிறகு பழைய நண்பர்கள் செய்வது போல, ஒருவரை ஒருவர் பெயர்களைச் சொல்லித் திட்டிக்கொண்டு விவாதத்தை முடித்தோம்; இரண்டு முதியவர்கள் ஒருவரை ஒருவர் அறிவற்ற முட்டாள்கள் என்று பிராண்டிங் செய்து கொண்டோம். எங்களைப் போன்றவர்களைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு: "வயதான முட்டாளை விடப் பெரிய முட்டாள் யாருமில்லை."

மிகச்சரியாகச் சொன்னார்கள்.■

# Advertise in
# Rotary News




... with a circulation of 1.56 lakh, and connect with 6 lakh readers. Reach some of the most influential industrialists, businessmen, finance professionals, doctors, lawyers and other high flyers.

| Tariff (per insert) | |
|---|---|
| Back cover | ₹1,00,000 |
| Inner Front Cover | ₹60,000 |
| Inner Back Cover | ₹60,000 |
| Inside Full Page | ₹30,000 |
| **Specifications** | |
| 17 x 23 cm | Full page |
| **Advertisements in colour only** | |

GST 5% applicable

**Rotary News Trust**
Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org

**Attractive discounts available for advertisements of three months and above.**

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27

